காரைக்கால் அம்மையார் பாடல்கள் ஓர் ஆய்வு

முனைவர் செ. சுப்புலட்சுமி மோகன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

காரைக்கால் அம்மையார் பாடல்கள் ஓர் ஆய்வு

முனைவர் செ. சுப்புலட்சுமி மோகன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
இரண்டாம் முதன்மைச் சாலை
மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்
தரமணி, சென்னை - 600 113.

முதுபெரும் வரதராசனார் அறக்கட்டளைச் சொற்பொழிவு
(அறக்கட்டளை நிறுவியோர் : பலர்)

வரிசை எண் : 14

BIBLIOGRAPHICAL DATA

Title of the Book	:	Kāraikkāl Ammaiyār Pāṭalkaḷ ōr āyvu
Author	:	Dr. S. Subbulakshmi Mohan Professor Dept. of Music Tamilnadu Music College Chennai-600 028
General Editor	:	Dr. K.A. Gunasekaran Director International Institute of Tamil Studies Tharamani, Chennai-600 113
Publisher & ©	:	International Institute of Tamil Studies II Main Road, C.I.T. Campus, Chennai-600 113 Ph: 22542992
Publication No.	:	647
Language	:	Tamil
Edition	:	First
Year of Publication	:	2010
Paper Used	:	18.6 Kg TNPL Maplitho
Size of the Book	:	1/8 Demy
Printing type used	:	10 Point
No. of Pages	:	x + 86
No. of Copies	:	1200
Price	:	Rs.40/- (Rupees Forty Only)
Printed by	:	United Bind Graphics 189-D, Royapettah High Road Mylapore, Chennai - 600 004.
Subject	:	Devotional Literature

அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துகட்கு நிறுவனம் பொறுப்பன்று.

பேரா. முனைவர் கரு. அழ. குணசேகரன்
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை-600 113

அணிந்துரை

காரைக்காலம்மையாரின் ஏழிசை, அவர்தம் பாடல்களில் இடம்பெற்றுள்ள இசைக்கருவிகள், அப் பாடல்கள்வழி அறியப் பெறும் ஆட்டங்கள், அம்மையாரின் பாடல்களில் அமைந்துள்ள பக்தி மற்றும் சமூகச் சிந்தனைகள் எனும் தலைப்புக்களில் செய்யப்பெற்றுள்ள இந்த ஆய்வு எண்கள், சைவசித்தாந்தம், புராணக் கருத்துக்கள் போன்ற தலைப்புக்களையும் கொண்டு அமைந்துள்ளமையால் இசை குறித்த மையப் பொருள் சற்றே விலகியுள்ளது போல் தோற்றம் பெறினும் காரைக்காலம்மையின் பாடல்கள் குறித்த கலையியல் சிந்தனை எனும் விதத்தில் இந்நூல் முக்கிய இடம்பெற்றுள்ளது.

கீர்த்தனை மரபு

> ஒரு பதிகத்தில் உள்ள முதல் பாடல் போன்றே (அதே இசை அமைப்பில்) பதிகத்தின் பத்துப் பாடல்களையும் பாடுவது மரபு. இதேபோல் பிற்காலத்தில் இயற்றப்பட்ட கீர்த்தனை என்னும் இசைவடிவத்தில் பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற அமைப்பில் ஒன்றுக்கு மேற்பட்ட பல சரணங்கள் இருக்கும். முதல் சரணத்தின் இசை அமைப்பே பிறசரணங்களுக்கும் பின்பற்றப்படும். எனவே பதிகத்திலிருந்து கீர்த்தனை என்ற நீண்டதோர் இசை மரபிற்கு வித்திட்டவர் காரைக்கால் அம்மையே.

எனும் நூலாசிரியரின் கருத்து (பக்.11) இசைப்பாடல் (கீர்த்தனை) குறித்தது.

சங்கஇலக்கியங்களில் கலித்தொகை போன்ற பாடல்களுக்கு இசை அமைத்த இசையமைப்பாளர்கள் தனித்து விளங்கியுள்ளனர். கலித்தொகைப் பாடல்களுக்கு முன்பு

தோன்றிய பிற சங்க இலக்கியங்கள் யாவும் குறைந்த பாடல் அடிகளைக்கொண்டு இசைப்பாடல் வடிவங்களற்றுத் தோற்றங்கள் பெற்றிருந்தன. காரைக்கால் அம்மையார் பாடல்களில்தான் இசைப் பாடல்கள் வடிவம் தோன்றலாயிற்று. இசைப்பாடல் குறித்தும் கீர்த்தனை குறித்தும் நூலாசிரியர் விளக்கம் தந்திருப்பது என்பது இசைப்பாடல் வரலாற்றினை முன்மொழிந்து எழுதிய காரைக்கால் அம்மையார் பாடல்களே முதலிடம் பெறுகின்றன.

காரைக்கால் அம்மையாரையும் ஆண்டாளையும் ஒப்பிட்டு எழுதியிருப்பது ஈர்ப்புடையதான ஒன்றாகும். சைவ இலக்கியத்தில் இசைப்பாடல் மரபினைத் தொடங்கிவைத்தவர் காரைக்காலம்மையார் ஆவார். ஆண்டாள் திருப்பாவை 30 பாடல்கள் வழியேயும் நாச்சியார் திருமொழி வழியே 143 பாடல்கள் வழியேயும் மொத்தம் 173 பாடல்கள் என இசைப் பாடல்கள் உருவாக்கியுள்ளமையும் காலங்களால் வேறுபட்டு அமைந்திருப்பினும் கடவுளைத் துதிக்கும் தன்மையிலும், இசைப்பாடல்கள் புனைவதிலும் இயைபுடையவர்களாக விளங்குகின்றனர்.

சச்சரி, கொக்கரை, தக்கையோடு (11.1.9)

எனும் பாடல் வரியைக்கொண்டு தமிழ் இசைக் கருவிகளின் விளக்கங்களைத் தர நூலாசிரியர் முயன்றுள்ளார். இசைத்துறைப் பேராசிரியராக இருப்பவரின் சிந்தனை பாராட்டுக்குரியதே.

கொக்கரை எனும் இசைக்கருவி ஒன்றினைக் காணிக்காரன் எனும் தமிழகத்தைச் சேர்ந்த ஒரு மலையின மக்கள் நாகர்கோவில், பாபநாசம் மலைப்பகுதிகளில் வாழ்கின்றவர்கள் தங்களின் சடங்குகளை நிகழ்த்த வேண்டிப்பயன்படுத்தும் ஒருவகை இசைக் கருவி என்பதை மனங்கொள்ள வேண்டும் என்பது எனது ஆவல் ஆகும். சுடுகாட்டு விலங்குகள், சுடுகாட்டுப் பேய் வகைகள், சுடுகாட்டுத் தாவரங்கள் என நூலாசிரியர் பலவாறு தன் நூலில் விளக்கியிருப்பினும் இவைபோன்ற கருத்துக்களைவிட இசைபற்றிய கூடுதல் தகவல்களைத் தரவில்லையே எனும் ஏக்கத்தினை இசையாசிரியையான நூலாசிரியரிடம் எதிர்பார்த்தவாறு நூலின் அனைத்துப் பக்கங்களையும்

ஆவலோடு வாசிக்கத் தூண்டுவதாகவே அமைகிறது. நூலாசிரியருக்கு எனது பாராட்டுக்கள்.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருவதோடு தம் தனிப்பட்ட அக்கறையையும் காட்டிவரும் **நிறுவனத் தலைவரும் தமிழக அரசின் முதல்வருமான மாண்புமிகு டாக்டர் கலைஞர்** அவர்களுக்குத் தமிழுலகம் என்றும் நன்றிக்கடன்பட்டுள்ளது.

தமிழ்ப்பணிகளுக்கு ஆற்றுப்படுத்தி வரும் **மாண்புமிகு தமிழக நிதியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன்** அவர்களுக்கு எம் நன்றி என்றும் உரியது.

நிறுவனச் செயல்பாட்டுக்கு உறுதுணையாக இருந்துவரும் **தமிழ் வளர்ச்சி, அறநிலையம், செய்தித் துறை அரசுச் செயலாளர் திரு க. முத்துசாமி இ.ஆ.ப.** அவர்களுக்கும் நன்றி.

இச்சொற்பொழிவு மற்றும் நூல் வெளியீடு தொடர்பான அனைத்து ஏற்பாடுகளையும் செய்த நிறுவனப் பணியாளர்கள், மெய்ப்புத் திருத்தம் செய்த முனைவர் ஆ. தசரதன் மற்றும் எழுத்துருவை இந்நிறுவனத்தில் ஒளிவடிவமைப்புச் செய்த திருமதி பி.கௌசல்யா ஆகியோருக்கும் இந்நூலை அழகுற அச்சிட்டுத் தந்த யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ் அச்சகத்தாருக்கும் பாராட்டுகள்.

இயக்குநர்

நன்றியுரை

தமிழ் இசையின் தாய் என்று அழைக்கப்படும் காரைக்கால் அம்மையார் முதன்முதலில் பண் நமக்குத் தந்தவர், என்றாலும் நடராசப் பெருமானின் திருக்கூத்தை நேரே தரிசனம் செய்தவர் என்று கூறப்படுவதால் அவர்தம் பாடல்களில் பலவகை ஆடல்கள், தாண்டவங்கள், நவரசம் மற்றும் பல்வேறு செய்திகள் உள்ளன என்று கூறியவுடன் இச்செய்திகளை ஒரு நூலாக வடிவாக்கம் செய்யலாம் என்று என்னை ஊக்கப்படுத்தி, '**காரைக்கால் அம்மையார் பாடல்கள் ஓர் ஆய்வு**' என்ற நூலாக வெளிவர உதவிய உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநர் பேரா. முனைவர் கே.ஏ. குணசேகரன்,. அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முனைவர் செ.சுப்புலட்சுமி

ஆசிரியரைப்பற்றி

முனைவர் திருமதி செ. சுப்புலட்சுமி, சென்னையில் உள்ள தமிழ்நாடு இசைக்கல்லூரியில் பேராசிரியராகப் பணி புரிந்து வருகிறார். இவர் கர்நாடக இசையைச் சங்கீத பூஷணம் கடலூர் திரு எம்.சுப்ரமணியம் அவர்களிடமும், சங்கீத வித்வத் சபையில் சங்கீத கலாநிதி திரு.பி.ராஜம் ஐயர் அவர்களிடமும், தமிழிசையை இசைப் பேரறிஞர் தருமபுரம் திரு.பி. சுவாமிநாதன் அவர்களிடமும் பயின்றவர். சென்னைப் பல்கலைக்கழக இசைத்துறையில் "முத்துத் தாண்டவர் பாடல்கள்" என்ற தலைப்பில் முனைவர் பட்டம் பெற்றவர். மனித வளர்ச்சிப் மேம்பாட்டுத் துறையில் (Ministry of Human Resource Development, Govt. of India) "ஞானசம்பந்தர் தேவாரம்-பண்வழி (Gnanasambandar Thevaram with respect to Pann) என்ற தலைப்பில் ஆய்வு செய்துள்ளவர். சென்னைப் பல்கலைக் கழக இசைத்துறையின் செயற்குழு உறுப்பினர். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் மூலம் "சங்க காலம் முதல் இன்று வரை-பறை-இசைக்கருவி" என்ற தலைப்பின் கீழ் ஆய்வு செய்யத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். தமிழ்நாடு அரசு வெளியிட்ட "தமிழிசை இலக்கணம்" என்ற பாடப்புத்தகத்தின் நூல் குழு உறுப்பினர். திரு.கே.என் தண்டாயுதபாணி பிள்ளை அவர்களின் "ஆடல் இசை அமுதம்" என்னும் ஆடற்கலை நூலையும், "இந்திய இசைக் கருவூலம்" என்ற இசை இலக்கண நூலையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். அன்னை தெரசா பல்கலைக்கழகம், பாரதிதாசன் பல்கலைக்கழகம் மற்றும் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் போன்றவற்றில் ஆய்வு நெறியாளராக உள்ளார். 'திருமுறை இசைத்திலகம்', 'கலைச் சுடர்மணி', 'பண்ணிசைச் செல்வி', 'பண்ணிசைத் தென்றல்', போன்ற பல பட்டங்கள் பெற்றுள்ளார்.

பொருளடக்கம்

		பக்கம்
	அணிந்துரை	iii
	நன்றியுரை	vi
	ஆசிரியரைப் பற்றி	vii
	படங்கள்	
1.	காரைக்கால் அம்மை - ஒரு முன்னோடி	1
2.	காரைக்கால் அம்மையும் ஏழிசையும்	9
3.	காரைக்கால் அம்மையும் இசைக்கருவிகளும்	13
4.	காரைக்கால் அம்மையும் ஆடலும்	23
5.	காரைக்கால் அம்மையும் பல்வேறு சுவைகளும் (நவரசம்)	36
6.	காரைக்கால் அம்மையும் கற்பனை நயமும்	42
7.	காரைக்கால் அம்மையும் உவமை நயமும்	49
8.	காரைக்கால் அம்மையும் புராணக் கருத்துக்களும்	53
9.	காரைக்கால் அம்மையும் சமூகச் சிந்தனைகளும்	60
10.	காரைக்கால் அம்மையும் எண்களும்	67
11.	காரைக்கால் அம்மையும் சைவசித்தாந்தமும்	76
	துணை நூல்கள்	85

காரைக்கால் அம்மையார்

காரைக்கால் அம்மையும் ஊர்த்துவ தாண்டவமும்

1. காரைக்கால் அம்மை - ஒரு முன்னோடி

"தென்னிந்திய இசையின் தாய்" என்று அழைக்கப்படும் காரைக்கால் அம்மையார் கி.பி. 5ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். பக்தி இலக்கிய வளர்ச்சிக்கும் இசை வளர்ச்சிக்கும் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும் வித்திட்ட பெருமை இவரையே சாரும். இவருக்குப்பின் தோன்றிய தேவார மூவரும் எண்ணிக்கை அளவில் அதிகமான பாடல்களைப் பாடி இருந்தாலும், அவர்களுக்குப் பாடும்முறை, பதிக அமைப்பு, கருத்து அமைப்பு பண் முதலியவற்றிற்கு வழிகாட்டியாக இருந்துள்ளவர் இவரே. ஒரு சிறந்த இயல் அறிவும், இசை அறிவும் கொண்ட இயல் இசைப்புலவராக உள்ள காரைக்கால் அம்மை ஒரு பெண்பால் புலவர் என்பது குறிப்பிடத்தக்கது.

உமாபதி சிவாச்சாரியார் தனது சேக்கிழார் புராணத்தில்

கவுணியர் நாவுக்கரசர் பேயார் இவர்
மூவர் கற்கும் இயல் இசை வல்லோர்

என்று குறிப்பிட்டுள்ளார்.

காரைக்கால் அம்மையார் இயற்றியுள்ளவை மொத்தம் 143 பாடல்கள்.

1. அற்புதத் திரு அந்தாதி - 101 பாடல்கள்
2. திரு இரட்டை மணிமாலை - 20 பாடல்கள்
3. மூத்த திருப்பதிகம் - 22 பாடல்கள்

இதில் மூத்த திருப்பதிகம் திரு ஆலங்காட்டில் பாடப்பட்டது. பதிக அமைப்பில் முதன் முதலில் பாடப்பட்டமையால் மூத்த திருப்பதிகம் என அழைக்கப்படுகிறது.

இயல்வழி இவர் பாடல்கள் சிறப்பு

இவர் இயற்றியுள்ள அற்புதத் திரு அந்தாதியும் திரு இரட்டை மணிமாலையும் இயல்வழி சிறப்பு வாய்ந்தவை. இவை

இரண்டும் அந்தந்த வழியில் தோன்றியுள்ள முதல் நூல்கள். நீதிநூல் காலத்தில் தோன்றியுள்ள வெண்பா என்ற யாப்பினை முதன்முதலில் பக்தி இலக்கியத்தில் பயன்படுத்தியவர் இவரே. இவரைப் பின்பற்றியே முதல் ஆழ்வார்களும், திருமழிசை ஆழ்வார், நம்மாழ்வார் முதலியோரும் வெண்பா யாப்பில் பக்திப் பனுவல் இயற்றியுள்ளனர்.

அற்புதத் திரு அந்தாதி

அந்தாதி என்பது ஒரு பாடலின் இறுதியை (அந்தம்) அடுத்த பாடலின் ஆதியாக (முதலாக) வைத்துப்பாடுவது. இந்த அமைப்பை முதன் முதலில் இயற்றியவர் அம்மையே. இலக்கிய வரலாற்றில் அந்தாதி பற்றித் தொல்காப்பியர் எதுவும் கூறவில்லை. ஆயினும் சங்க நூல்களில் அந்தாதி அமைப்பு காணப்படுகிறது. ஐங்குறுநூற்றில் அம்மூவனார் இயற்றிய நெய்தல் திணையில் தொண்டிப் பத்து முழுவதும் 'அடிசீர் அந்தாதி'யாக வருகிறது. பதிற்றுப்பத்தில் காப்பியாற்றுக் காப்பியனாரின் நான்காம் பத்து முழுவதும் அடிசீர் 'அந்தாதியாக உள்ளது. அந்தாதி என்பது வெண்பா அல்லது கட்டளைக் கலித்துறைப் பாக்களால் ஆதி மண்டலித்து முடியும். காரைக்கால் அம்மையார் இயற்றியுள்ள அற்புதத் திருவந்தாதி அந்தாதித் தொடை அமையப்பெற்று 101 வெண்பாக்களால் ஆனது.

திரு இரட்டை மணிமாலை

இருவேறுபட்ட யாப்பு வடிவங்களால் ஒரு பொருள் குறித்த இருபது பாடல்களால் பாடப்பெறும் நூல் இரட்டை மணிமாலை ஆகும். இது இரு வேறுபட்ட மணிகளால் தொடுக்கப்பட்ட மாலை போல அழகு தரும். காரைக்கால் அம்மையார் இயற்றியுள்ள திரு இரட்டைமணி மாலையில் உள்ள 20 பாடல்களும் கட்டளைக் கலித்துறையும், வெண்பாவும் விரவி அந்தாதியாகப் பாடப்பட்டுள்ளன.

''பன்னிரு பாட்டியல்'' என்ற நூல் இரட்டைமணி மாலையின் இலக்கணத்தைக் கூறும்போது

வெண்பா முதலாகக் கலித்துறை பின்வரும்
இந்த இருபதிரட்டை மணிமாலை

என்கிறது. இதிலும் காரைக்கால் அம்மையார் ஒரு மாறுதலுடன் முதலில் வெண்பா வராமல் கலித்துறை முதலிலும் வெண்பா அடுத்தும் வருமாறு அமைத்துள்ளார். பிற்காலத்தில் இரட்டைமணிமாலை என்ற சிற்றிலக்கியத்திற்கு இவர் நூலே முதல் நூல் ஆகிறது.

கட்டளைக் கலித்துறை

காரைக்கால் அம்மையாரே முதன் முதலில் கட்டளைக் கலித்துறை அமைப்பைப் பயன்படுத்தியுள்ளார். ஏனெனில் இந்த யாப்பில் சங்கப் பாடல்கள் இல்லை. தொல்காப்பியரும் கலிப்பாவின் வகைகளைக் கூறும்போது இதனைக் கூறவில்லை. அம்மையாருக்குப்பின் வந்த தேவார ஆசிரியர்களில் ஒருவரான திருநாவுக்கரசர் இந்த யாப்பைக் கையாண்டு இருப்பினும் அது அவர் காலத்தில் 'திருவிருத்தம்' என்று அழைக்கப்பட்டுள்ளது. இவர்களுக்குப்பின் கட்டளைக் கலித்துறையில் முழுநூலாகச் செய்துள்ளவர் மாணிக்கவாசகர் ஆவார். இவரின் 'திருக்கோவையார்' என்ற நூல் முழுதும் இந்த யாப்பில்தான் அமைந்துள்ளது.

மூத்த திருப்பதிகம்

பதிகம் என்பது பத்துப் பாடல்கள் கொண்டது. பதிகம் என்ற அமைப்பிற்குக் காரைக்கால் அம்மையாரே முன்னோடி ஆதலால் இவர் இயற்றியது 'மூத்த திருப்பதிகம்' என்று அழைக்கப்படுகிறது. இவரைப் பின்பற்றியே தேவார மூவர், ஆழ்வார்கள், மாணிக்கவாசகர் பதிக அமைப்பில் இயற்றியுள்ளார்கள். இவருக்கு முன் பதிற்றுப்பத்து, ஐங்குறுநூறு, திருக்குறள், நாலடியார் போன்ற நூல்கள் பத்துப் பத்துப்பாடல்களைக் கொண்டு விளங்கினாலும் தெய்வத்தைப் பாடுபொருளாகக் கொண்டு பக்தி நெறியில் பாடப்பட்ட பத்துப் பாடல்களே 'பதிகம்' எனப் பெயர் பெற்றுள்ளன.

மூத்த திருப்பதிகத்தில் முதல் திருப்பதிகம் எண்சீர் விருத்தத்தால் ஆகிய எண்சீர்க் கழி நெடிலடி ஆசிரிய விருத்தம் ஆகும். இரண்டாம் பதிகம் அறுசீர்க் கழி நெடிலடி ஆசிரிய விருத்தம் ஆகும்.

இசைவழி இவர் பாடல்களின் சிறப்பு

செயற்கரும் செயல்கள் செய்த 63 நாயன்மார்களில் மூவர் பெண்கள். இம்மூவருமே இசைத் தொடர்பு உடையவர்கள்.

1. மங்கையர்க்கரசியார் - "கானத்தின் எழுபிறப்பு" என்று அழைக்கப்படும் திருஞானசம்பந்தரால் புகழ்ந்து பாடப்பெற்றவர்.
2. இசைஞானியார் தேவார மூவரில் ஒருவரான சுந்தரின் தாயார் ஆவார். பெயரிலேயே இசையைக் கொண்டிருப்பவர்.
3. காரைக்கால் அம்மையார் - முதன்முதலில் 'பண்'பாடி 'தமிழ் இசையின் தாய்' என்று அழைக்கப்படுபவர்.

மேலும் 63 நாயன்மார்களில் அமர்ந்த கோலத்தில் இருப்பவர். சிவனால் 'அம்மையே' என்று அழைக்கப்பெற்றவர். இவர் கையில் தாளம் உள்ளது. இசை வல்லவர்கள் அனைவருமே கையில் இசைக்கருவியோ அல்லது தாளமோ வைத்திருப்பது வழக்கம். உதாரணமாக, திருஞானசம்பந்தர் கையில் தாளமும், நாரதர் கையில் தம்புராவும் கூறலாம். கடைசியாக இவர் இறைவனிடம் வேண்டிக்கேட்டவரம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும், மீண்டும் பிறப்புண்டேல்உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும்போது உன் அடியின் கீழ் இருக்க என்றார்

(பெரிய புராணம் - காரை.புராணம்)

இறைவன் ஆடும்போது அவர் அடியின் கீழ் மகிழ்ந்து பாடவேண்டும் என்று கேட்டுள்ளார். காரைக்கால் அம்மை வாழ்க்கையில் இருமுறை அவர் கேட்டதைக் கொடுத்த இறைவன் (மாம்பழம், பேய்வடிவம்) இந்த வரமும் நிச்சயமாகக் கொடுத்துள்ளான் என்று அவர் பாடல்வழி நமக்குத் தெரிய வருகிறது.

நாளும் இன்னிசையால் தமிழ்ப் பரப்பிய ஞானசம்பந்தரும் நாவுக்கரசரும், பின் சுந்தரரும் கரைக்கால் அம்மையார் தலையால் நடந்து வழிபட்ட திருஆலங்காட்டில் கால் வைக்க மனம் ஒப்பாது, ஊரின் புறத்தே உள்ள பழையனூர்

ஆலங்காட்டில் இருந்து பதிகம் பாடிச் சென்றுள்ளதால் இவர் தம் பெருமை நமக்கு மேலும் விளங்குகிறது.

காரைக்கால் அம்மையும் பண்களும்

காரைக்கால் அம்மையார் தம் மூத்த திருப்பதிகத்தின் முதன் முதலில் இருபண்களைப் பயன்படுத்தியுள்ளார். முதன்முதலில் பண்பாடிய இசைப்புலவர் இவர் ஆகையால் இவர் 'தமிழ் இசையின் தாய்' என்று அழைக்கப்படுகிறார். இவர் பயன்படுத்தியுள்ள பண்கள் நட்டபாடைப் பண்ணும், இந்தளப் பண்ணும் ஆகும்.

நட்டபாடை பண்ணில் அமைந்த பாடல்

மூத்த திருப்பதிகத்தில் முதல் பதிகம் நட்டபாடைப் பண்ணில் பாடப்பட்டுள்ளது. இப்பதிகத்தின் முதல் பாடல்:

பண் : நட்டபாடை
பாடியுள்ள தலம் - திரு ஆலங்காடு.

கொங்கை திரங்கி நரம்பெழுந்து
குண்டுக்கண் வெண்பற் குழிவயிற்றுப்
பங்கி சிவந்திரு பற்கள் நீண்டு
பரடுயர் நீள்கணைக் காலோர் பெண்பேய்
தங்கி அலறி உலறு காட்டில்
தாழ்சடை எட்டுத் திசையும் வீசி
அங்கம் குளிர்ந்தன லாடும் எங்கள்
அப்பனிடம் திரு ஆலங்காடே (11.1.1)

சுரதாளக்குறிப்புடன் இப்பாடல் :

இராகம் : கம்பீரநாட்டை (36ஆம் மேளமாகிய சலநாட்டையில் ஜன்யம்)

தாளம் : ரூபகம் ஆரோசை : சக$_2$ம$_1$ பநி$_2$ச்

அமரோசை: சநி$_2$பம, க$_2$ச

மா$_1$	கமா	பா$_2$	பபா	மகா	ம	பா$_1$	மபா$_1$
கொங்	கைதி	ர	ங்கி	நரம்	பெ	ழு	ந்து
பமநிப	பமகப	மகசா		சகா	மபா$_1$, ம		பா$_1$

குண்டுக் கண் வெ ண் பற் குழி வயி ற் றுப்

பா$_1$ மா$_1$ மபா நிச்ா ச்ா$_1$ ச்ா நிச்ச் நி பா

பங் கி சிவந் திரு பற் கள் நீ ண்டு

பநி சா ; நிசா நிபா கமபா$_1$ கபமக கா$_1$

பர டுயர் நீள் கணைக் காலோர் பெண் பேய்

சா$_1$ கமா பா$_1$ மபா மகாம பா$_1$ நிபா ;

தங் கியல . . றி யுலறு கா - ட்டில்

பநிச்நி பம கபமகசா சகா மபா$_1$நி பா

தாழ்ச டை எட்டுத் திசை யும் வீ சி. . .

பா$_1$ மா$_1$ மபா நிச்ா ச்ா$_1$ ச்ா$_1$ நிச்க்ச் நிப

அங் கங்குளிர்ந் தன லா டு மெங கள்

பநி ச்ா;நிச்ா நிபா கம பா மா கப மகசா

அப் பனி டந் திரு ஆ லங் கா . . .டே

பண்-நட்டபாடை

இப்பண் தற்போது பாடப்படும் கம்பீரநாட்டை இராகத்தை ஒத்தது. இது ஒரு சேய்ராகம். 36வது மேளமாகிய (தாய்ராகமாகிய) சல நாட்டையிலிருந்து பிறந்தது. இதன் சுரஸ்தானங்கள் குரல் (ச) வன்கைக்கிளை (க$_2$) மென் உழை (ம$_1$) இளி(ப) வன்தாரம்(நி$_2$). இது ஒரு ஐந்திசைப் பண். இதில் துத்தம் மற்றும் விளரி என்ற இரு சுரங்கள் இல்லை. இப்பண்ணில்தான் திருஞானசம்பந்தர் தன்முதல் பதிகத்தை (தோடுடைய செவியன்) இயற்றியுள்ளார். மேலும் கோயிலில் சுவாமி புறப்பாட்டின்போது பயன்படுத்தப்படும் 'மல்லாரி' என்ற இசை வடிவம் இந்த இராகத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

இந்தளப்பண்ணில் அமைந்த பாடல்

அம்மை பயன்படுத்தியுள்ள மற்றொரு பண் இந்தளம். மூத்த திருப்பதிகத்தின் இரண்டாம் பதிகம் இப்பண்ணில் பாடப்பட்டுள்ளது.

பண் : இந்தளம்

பாடல் பாடியுள்ள தலம் : திரு ஆலங்காடு

எட்டி இலவம் ஈகை சூரை காரை படர்ந்தெங்கும்
சுட்ட சுடலை சூழ்ந்த கள்ளி சோர்ந்த குடர் கௌவப்
பட்ட பிணங்கள் பரந்த காட்டிற் பறைபோல்
விழிகட்பேய்
கொட்ட முழவங் கூளி பாடக்குழகன் ஆடுமே (11.2.1)

சுரதாளக் குறிப்புடன் பாடல்

இராகம் : மாயாமாளவகௌளை: ஆரோசை : சரி$_1$க$_2$ம$_1$ பத$_1$நி$_2$ச்

தாளம் : ரூபகம் அமரோசை : ச்நி$_2$த$_1$பம$_1$க$_2$ரி$_1$ச

சரி	கா	மா	; ,மமா	; மா	மா	மத	பமகா
எட்	டி	இல	வம்	ஈ	கை	சூ	ரை
சரி	கம	பா	,தப	பமதா	பா,ம	கமகரி	
கா	ரை	ப	டர்ந்	தெ	ங்	கும். . .	
சரி	கா	மாதப	தாதா	தநிச்ரி	ச்நிதா	பா	பா
சுட்	டசு	ட	லை. .	சூழ்ந்த	க. . .	ள்ளி	
தநிச்நி	ச்நிதா	பாபம		கமபத	நிச்நித	பமகரி	
சோர்	ந்த	குடர்		கௌ	வப். .	. . . .	

(மற்ற இரண்டு வரிகள் இதே சுர அமைப்பில் பாடவும்)

பட்ட பிணங்கள் பரந்த காட்டிற் பறைபோல் விழிகட்பேய்
கொட்ட முழவங் கூளி பாடக் குழகன் ஆடுமே.

இந்தளப்பண்

இப்பண் தற்போது பாடப்படும் மாயா மாளவ கௌளை இராகத்தை ஒத்தது. இது ஒரு தாய்ராகம். ஏழு சுரங்களைக் கொண்ட பண். இதன் சுரஸ்தானங்களாவன : குரல் (ஸ) மென்துத்தம் (ரி$_1$) வன்ளகக்கிளை (க$_2$) மென் உழை (ம$_1$) இனி (ப) மென் விளரி (த$_1$) வன் தாரம் (நி$_2$)

இப்பண்ணில்தான் தேவார மூவர்களில் ஒருவரான சுந்தரர் தன் முதல் பதிகத்தைப் (பித்தா பிறை சூடி) பாடியுள்ளார்.

அற்புதப் பதிகங்கள் என்று அழைக்கப்படும் உயிர் எழுப்பிய பதிகங்கள் இந்தப் பண்ணில் தான் பாடப்பட்டுள்ளன.

1. திருஞானசம்பந்தர் - திருமயிலாப்பூர் - 'மட்டிட்ட புன்னை' என்ற பதிகம்
2. திருஞானசம்பந்தர் - திருமருகல் - 'சடையாய் எனுமால்' எனும் பதிகம்
3. திருநாவுக்கரசர் - 'ஒன்று கொலாம்' எனும் பதிகம்

இன்றைய கர்நாடக இசையில் 'சங்கீதப் பிதாமகர்' என்று அழைக்கப்படும் புரந்தரதாசர் இசை பயில்வோருக்குத் தொடக்க இசைப்பயிற்சிப் பாடங்களைஅமைத்துக் கொடுக்க இந்தப் பண்ணையே (மாயாமாவை கௌளை) தேர்ந்தெடுத்துள்ளார்.

சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான 'முத்துஸ்வாமி தீட்சிதர்' திருத்தணி முருகன் அருள் பெற்ற பின் பாடிய முதல் பாடல் இப்பண்ணில் தான் அமைந்துள்ளது. இவ்வாறு இசை வடிவங்கள் இப்பண்ணில் இயற்றப்பட்டுள்ளன. ஏராளமான பண்கள் இருக்கப் பிற்கால இசைவாணர்கள் இவ்விரு பண்களுக்கு முதன்மையும் முன்னுரிமையும் கொடுத்தமை தென்னிந்திய இசை வரலாற்றில் காரைக்கால் அம்மையார் பெற்ற செல்வாக்கைக் காட்டுகிறது எனலாம்.

முத்திரை

முதன்முதலில் காரைக்கால் அம்மையாரே தன் பாடல்களில் முத்திரை (பாடியவர் பாடலைப் பாடியதற்கான அத்தாட்சி) பயன்படுத்தியுள்ளார். அம்மை தன்னைக் 'காரைக்கால் பேய்' என்று பதிக இறுதியில் முத்திரையாகக் கொடுத்துள்ளார். இவரைப் பின்பற்றியே பிற்கால இசைப் புலவர்கள் தம் பெயரையோ அல்லது புனைபெயரையோ முத்திரையாகக் கொடுத்துள்ளனர்.

முதல்பதிகம் (கடைசிப் பாடல்)

. . . . . காரைக்கால் பேய்
செப்பிய செந்தமிழ் பத்தும் வல்லார்
சிவகதி சேர்ந்தின்பம் எய்துவாரே (11.1.11)

இரண்டாம் பதிகம் - (கடைசிப் பாடல்)

. . . . காரைக்கால் பேய் தன்
பாடல்பத்தும் பாடி ஆடப் பாவம் நாசமே (11.2.11)

மேலும் பதிகத்தில் அப்பதிகம் எந்தத்தலத்தில் பாடப்பட்டது என்ற தல முத்திரையும் (ஆலங்காடு) காணப்படுகிறது.

2. காரைக்கால் அம்மையும் ஏழிசையும்

துத்தம் கைக்கிள்ளை விளரி தாரம்
உழை இளி யோசை பண் கெழுமப்பாடி *(11.1.9)*

மூத்த திருப்பதிகத்தின் ஒன்பதாம் பாடலில் ஏழிசையின் தமிழ்ப் பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இதில் துத்தம் கைக்கிளை விளரி தாரம் உழை இளி என்ற முறையில் நரம்பின் (சுரங்களின்) பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. மேற்கூறிய அடியில் ஆறு இசை நரம்புகளின் பெயர்களையே தந்துள்ளார். இதில் குரல் நரம்பைக் குறிப்பாகக் கொள்ளுதல் வேண்டும். இந்த ஏழு நரம்புகளுள் ஒன்றை ஒன்று முதலாகக் கொண்டு பல பண்கள் பிறக்கும் என்று 'ஓசை பண் கெழுமப்பாடி' என்று குறிப்பால் காட்டியுள்ளார். இவ்வடியின் வழிப்பண் அமைப்பும், அவர் பண்ணோடு பாடிய குறிப்பும் நமக்குக் கிடைக்கின்றன.

ஏழிசைகளின் விளக்கம்

குரல் குறிப்பாகக் கொள்ளப்பட்டதால் அடுத்த நரம்பான துத்தம் என்ற சுரம்.

துத்தம்

இது ஏழிசையில் இரண்டாம் நரம்பு (சுரம்) தற்போது ரிஷபம் என்று அழைக்கப்படுகிறது. இதன் குறியீடு 'ரி'. குரலைக் காட்டிலும் சற்று உயர்ந்த ஒலி துத்தம் ஆகும். துத்தம் என்ற சொல்லுக்கு வேர்ச்சொல்வழி அதன் பொருள் சற்று உயர்ந்தது என்பது (துதி உயர்த்திப் போற்று) குரலைக் காட்டிலும் சற்று உயர்ந்து ஒலிக்கும் காரணம் பற்றியே இப்பெயர் பெற்றது. இது மென் துத்தம் (ரி$_1$) வன்துத்தம் (ரி$_2$) என இருவகைப்படும். காரைக்கால் அம்மை தன் பதிகத்தில் இந்தளப்பண்ணில் மென் துத்தத்தையே பயன்படுத்தி உள்ளார். திவாகரம் என்ற நூல் துத்தத்தின் பிறப்பிடம் நாக்கு என்கிறது.

கைக்கிளை

இது ஏழிசையில் மூன்றாவது நரம்பு. இது தற்போது காந்தாரம் என்று அழைக்கப்படுகிறது. இதன் குறியீடு 'க', என்பது.

கை+கிளை = கைக்கிளை. கை என்பது சிறுமை. கிளை என்பது உறவு. குரலுடன் சிறிய உறவு கொண்டுள்ளநரம்பு (சுரம்). குரல் நரம்புடன் ஒருவாறு, சிறிது ஒத்திசைக்கும் காரணத்தால் இது கைக்கிளை எனப்படுகிறது என்கிறது ஆபிரகாம் பண்டிதரின் கருணாமிருத சாகரம். இதுவும் மென் கைக்கிளை ($க_1$)வன் கைக்கிளை ($க_2$) என இரு வகைப்படும். காரைக்கால் அம்மை இரு பண்களிலும் (நட்டபாடை, இந்தளம்) வன் கைக்கிளையையே பயன்படுத்தி உள்ளார். திவாகரம் கைக்கிளையின் பிறப்பிடம் அண்ணம் என்கிறது.

உழை

இது ஏழிசையில் நான்காம் நரம்பு. இது தற்போது மத்யமம் என்று அழைக்கப்படுகிறது. இதன் குறியீடு 'ம' என்பது. உழை என்றால் பக்கம் என்று பொருள். உழையர் என்பது பக்கத்தில் இருப்பவர். இந்த நரம்பு சுற்றம் போலக் குரலுடன் ஒத்திசைக்கும் காரணத்தால் உழை எனப்படுகிறது. குரல்-உழை உறவு கொண்ட சுரங்களைக் கிளைச் சுரங்கள் என்று அழைக்கிறோம். இதுவும் மென் உழை($ம_1$) வன் உழை ($ம_2$) என இரு வகைப்படும். காரைக்கால் அம்மை இரு பண்களிலும் (நட்டபாடை, இந்தளம்) மென் உழையையே பயன்படுத்தி உள்ளார். திவாகரம் உழையின் பிறப்பிடம் தலை என்கிறது.

இளி

இது ஏழிசையில் ஐந்தாம் நரம்பு (சுரம்). தற்போது பஞ்சமம் என்று அழைக்கப்படுகிறது. இதன் குறியீடு 'ப' என்பது. இந்த நரம்பு குரலைப் போலப் பேதமற்றது. ஆகையால் இதில் வன்சுரங்கள் மென் சுரங்கள் கிடையா. இந்தச் சுரம் குரலுடன் இணையாக ஒத்திசைப்பதால் குரல்-இளி உறவு கொண்டுள்ள சுரங்கள் இணைச்சுரங்கள் என்று அழைச்கப்படும். திவாகரம் இளியின் பிறப்பிடம் நெற்றி என்கிறது.

விளரி

இது ஏழிசையில் ஆறாம் நரம்பு. தற்போது தைவதம் என்று அழைக்கப்படுகிறது. இதன் குறியீடு 'த' என்பது. இது மென்மையான ஒலியாகும். இது இளியை அடுத்து சற்று உயர்ந்த ஒலி. இரங்கற்குரிய மென்மையான நெய்தல் பண் விளரிப்பண் என அழைக்கப்படுகிறது. இதுவும் மென்விளரி ($த_1$) வன்விளரி ($த_2$) என இரு வகைப்படும் கரைக்கால் அம்மை

இந்தளப்பண்ணில் மென் விளரியையே பயன்படுத்தியுள்ளார். திவாகரம் விளரியின் பிறப்பிடம் நெஞ்சு என்கிறது.

தாரம்

இது ஏழிசைகளில் ஏழாம் நரம்பாகும். தற்போது நிஷாதம் என அழைக்கப்படுகிறது. இதன் குறியீடு 'நி' என்பது. தாரத்தை எடுத்த ஓசை என்று கழகக் கைஅகராதி கூறுகிறது. 'உச்ச இசையின் பெயரே தாரம்' என்று வீரமாமுனிவர் கூறுகிறார். தார் என்பது முன்னோங்கி, நீண்டு உயர்ந்திருப்பது எனப் பொருள்படும். தமிழ் மரபின்படி முன்தோன்றியது இது. இதுவும் மென்தாரம் (நி$_1$) வன்தாரம் (நி$_2$) என இருவகைப்படும் காரைக்கால் அம்மையார் இரண்டு பண்களிலும் (நட்டபாடை, இந்தளம்) வன்தாரத்தையே (நி$_2$) பயன்படுத்தியுள்ளார். திவாகரம் தாரத்தின் பிறப்பிடம் மூக்கு என்கிறது.

கீர்த்தனை மரபு

ஒரு பதிகத்தில் உள்ள முதல் பாடல் போன்றே (அதே இசை அமைப்பில்) பதிகத்தின் பத்துப் பாடல்களையும் பாடுவது மரபு. இதேபோல் பிற்காலத்தில் இயற்றப்பட்ட கீர்த்தனை என்னும் இசை வடிவத்தில் பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற அமைப்பில் ஒன்றுக்கு மேற்பட்ட பல சரணங்கள் இருக்கும். முதல் சரணத்தின் இசை அமைப்பே பிற சரணங்களுக்கும் பின்பற்றப்படும். எனவே பதிகத்திலிருந்து கீர்த்தனை என்ற நீண்டதோர் இசை மரபிற்கு வித்திட்டவர் காரைக்கால் அம்மையே.

மேலும் கீர்த்தனையில் கீர்த்தனை பாடப்பட்ட தலத்தின் பெயர், அத்தலத்தின் அமைப்பு, அத்தலம் அமைந்துள்ள ஊர், அங்குள்ள மரங்கள், விலங்குகள் பெயர் முதலிய செய்திகள் பதிகங்களிலிருந்தே பெறப்பட்டுள்ளன. காரைக்கால் அம்மை பதிகத்தின் பத்துப் பாடல்களில் மேற்கூறிய செய்திகளைத் தந்துள்ளார். உதாரணமாக இந்தளப் பண்ணில் உள்ள பதிகத்தில் எட்டி, இலவம், ஈகை, சூரை, காரை, கள்ளி என்று சுடுகாட்டில் உள்ள தாவரங்களையும், ஆந்தை, நரி, கடுவன், கழுகு போன்ற விலங்குகள் பற்றியும் செய்திகள் சொல்லப்பட்டுள்ளன.

காரைக்கால் அம்மையும் ஆண்டாளும்

பன்னிரு ஆழ்வார்களில் ஒருவரான ஆண்டாள் காரைக்கால் அம்மையாரைப் பின்பற்றி உள்ளார். அம்மையார் இயற்றியுள்ள மொத்தப்பாடல்களின் எண்ணிக்கை 143. இதைப்பின்பற்றி இதே எண்ணிக்கையில் ஆண்டாளும் பாசுரங்கள் பாடி உள்ளார். இது பற்றித் திருப்பாவையில் ஆண்டாள் வாழ்த்துப்பா கூறுவது

திரு ஆடிப் பூரத்து ஜெகத்துதித்தாள் வாழியே
திருப்பாவை முப்பதும் செப்பினாள் வாழியே
ஒரு நூற்று நாற்பத்து மூன்றுரைத்தாள் வாழியே
உயர் அரங்கர்க்கே தன்னை உகந்தளித்தாள் வாழியே

என்று ஆண்டாள் ஒரு நூற்று நாற்பத்து மூன்று(143) பாடல்கள் பாடியுள்ளது சிந்திக்கத்தக்கது.

3. காரைக்கால் அம்மையும் இசைக்கருவிகளும்

காரைக்கால் அம்மை இறைவன் நடனத்தை நேரடியாகத் தரிசித்தார் என்று பாடல்வழி அறிகிறோம். அவ்வாறு இறைவன் ஆடும்போது எத்தனை கருவிகள் முழங்கத் திருநடனம் ஆடினார் என்று தனது மூத்த திருப்பதிகத்தில் கூறுகிறார்.

சச்சரி கொக்கரை தக்கை யோடு
தகுணிதம் துந்துபி தாளம் வீணை
மத்தளம் கரடிகை வன்கை மென்தோல்
தமருகம் குடமுழா மொந்தை வாசித்து
அத்தனை விரவினோடு ஆடுமெங்கள்
அப்பனிடம் திருஆலங் காடே *(11.1.9)*

இப்பாடலில் பன்னிரெண்டு (12) வகையான இசைக்கருவிகள் பற்றிக் கூறுகிறார். இவை தவிர முழவு, யாழ், குழல், துடி, பறை போன்ற இசைக் கருவிகள் பதிகத்தின் பல்வேறு இடங்களில் கூறப்படுகின்றன.

காரைக்கால் அம்மை கூறும் 17 இசைக்கருவிகள்

இசைக்கருவிகளில் 4 வகையான இசைக் கருவிகள் அம்மையாரால் கூறப்பட்டுள்ளன. அவை காற்றுக் கருவிகள், நரம்புக்கருவிகள், தோல் கருவிகள், கனக்கருவிகள் ஆகும்.

1. காற்றுக்கருவிகள் (2) - குழல், கொக்கரை
2. நரம்புக் கருவிகள் (2) - வீணை, யாழ்
3. தோல்கருவிகள் (12) - சச்சரி, தக்கை, தகுணிதம், துந்துபி, மத்தளம், கரடிகை, தமருகம், குடமுழா, மொந்தை, பறை, துடி, முழவு
4. கனக்கருவி (1) - தாளம்

1. குழல்

கூளிக் கணங்கள் குழலோடு இயம்பக் குழகன் ஆடுமே
(11.2.6)

இது ஒரு காற்றுக்கருவி. துளைக்கருவி என்றும் அழைக்கப்படும். அகநானூற்றுப் பாடல் முதன் முதலில் தோன்றிய இசைக்கருவி என்று குழல் பிறந்த வரலாற்றைக் கூறுகிறது. (அகம்.225) சிலப்பதிகாரம் அரங்கேற்று காதையில் மாதவியின் நடனத்திற்கு மூன்றுவகையான இசைக் கருவிகளும் துணைக் கருவிகளும் பயன்படுத்தப்பட்டன என்கிறது. இதில் குழல் அமைப்பு, குழல் ஆசிரியன் அமைதி, குழல் வகைகள் போன்ற செய்திகள் கூறப்பட்டுள்ளன. சங்கப் பாடல்களில் குறிஞ்சிப்பாட்டு ஆம்பற்குழல் பற்றியும், மலைபடுகடாம் பெருவங்கியம் பற்றியும், நற்றிணை ஆம்பற்குழல், கொன்றைக்குழல் பற்றியும், பதிற்றுப்பத்து பெருவங்கியம் பற்றியும், பரிபாடல் குழல்களில் ஏழ்புழைக்குழல், ஐம்புழைக் குழல் பற்றியும், கலித்தொகை கொன்றைத் தீங்குழல், கோவலர் தீங்குழல் பற்றியும் கூறுகின்ற செய்திகள் குழல் மிகப் பழமையான இசைக்கருவி என்பதைக் காட்டுகின்றன.

2. கொக்கரை

சச்சரி கொக்கரை தக்கை யோடு *(11.1.9)*

கொக்கரை என்பது வலம்புரிச்சங்கு. ஊது கருவி வகையைச் சார்ந்தது என்று தமிழிசைக் கலைக் களஞ்சியம் (தொகுதி-2) கூறுகிறது. இக்கருவி எட்டுத்தொகை, பத்துப்பாட்டில் இடம் பெறவில்லை. தேவாரம் கொக்கரையைப் பற்றிக் கூறுகிறது.

1. **கொக்கரையோடு பாடல் உடையான்** *(சம். 3.59.4)*
2. **விச்சிசைப்பன கொக்கரை** *(7.49.6)*
3. **குடமுழவம் கொக்கரை வீணை குழல் யாழ்**
   திருக்கைலாய ஞான உலா திருமுறை *(11.3.46)*

3. வீணை

தகுணிதம் துந்துபி தாளம் வீணை *(11.1.9)*

இது ஒரு நரம்புக்கருவி. வீணை பற்றிய குறிப்பு சங்க நூல்களில் கிடையாது. சிலப்பதிகாரத்தில் வீணை பற்றிக் கூறப்பட்டுள்ளது.

நாரதன் வீணை நயந்தெனப் பாடலும் (சிலப். 6.18.29

தேவாரப் பதிகங்களில் வீணையைப் பற்றிப் பல இடங்களில் குறிப்புகள் உள்ளன.

கின்னரம் முழவம் மழலை யாழ் வீணை
கெழவுகம் பாலை செய் கீழ்க் கோட்டூர் (3.8.3)

இந்தக் காலக் கட்டத்தில் வீணை, யாழ் இரண்டும் வழக்கில் இருந்தன எனத் தெரியவருகிறது. திருவாசகம் 'இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்' என்று திருப்பள்ளி எழுச்சிவழி கூறுகிறது. திவ்யப் பிரபந்தத்தில் தும்புரு, வீணை போன்ற நரம்புக் கருவிகள் பற்றிய குறிப்புகள் உள்ளன

நன்னரம்புடைய தும்புரு வோடு
நாரதனும் தம்தம் வீணை மறந்து

என்ற பிரபந்தப் பாடலில் வீணை பற்றிக் குறிப்பு உள்ளது.

4. யாழ்

பழந்தமிழரால் பயன்படுத்தப்பட்ட இசைக்கருவிகளில் மிக முக்கியமானது யாழ். இது ஒரு நரம்புக்கருவி. யாழ் பற்றிய குறிப்புகள் சங்ககால நூல்களில் கிடைக்கின்றன. நரம்புக் கருவிகளில் முதலிடம் வகிப்பது யாழ்தான். எட்டுத்தொகை, பத்துப்பாட்டு போன்ற இலக்கிய நூல்களில் இக்கருவி பற்றிய விவரம் விரிவாகக் கிடைக்கிறது. யாழின் பெயர்கள் குறிஞ்சியாழ், பாலையாழ், மருதயாழ், நெய்தல் யாழ் என நிலங்களின் பெயரோடு இணைத்துக் கூறப்பட்டுள்ளன. ஆற்றுப்படை நூல்கள் யாழின் அமைப்பு, மற்றும் யாழின் வகைகள் பற்றிக் கூறுகின்றன. சிலம்பில் மாதவியும், கோவலனும் சிறந்த யாழிசை வல்லவர்களாகக் கூறப்பட்டுள்ளனர்.

பாடியிருந் தந்நரி யாழமைப்ப (11.1.11)

5. சச்சரி

சச்சரி கொக்கரை தக்கையோடு (11.1.9)

இது ஒரு வகை முழக்குக்கருவி. சச்சு + அரி = சச்சரி. சச்சு என்பது சிறுமை. அரி என்பது நுண்மை. சிறிய நுட்பமான ஒலி உடைய கருவி. இது அரிப்பறை வகையைச் சேர்ந்த ஒரு சிறிய தோல் கருவி. இக்கருவி பற்றிச் சங்க நூல்களிலும்

சிலப்பதிகாரத்திலும் குறிப்பு இல்லை. தேவாரங்களில் சச்சரி பற்றிக் குறிப்பு உள்ளது. திருநாவுக்கரசர் தேவாரம் :

சச்சரி கொள் கை கண்டேன் (6.77.7, 6.29.1)

6. தக்கை

சச்சரி கொக்கரை தக்கை யோடு (11.1.9)

இது ஒரு வகை தோற்கருவி.

பேரிகை படகம் . . . . .தக்கை (சிலப். 3.27)

இது தாழ்குரல் தண்ணுமை எனும் பகுதியில் அடியார்க்கு நல்லாரின் மேற்கோளில் வருகிறது. மிகத் தாழ்ந்து ஒலிப்பதனால் இதற்குத் தக்கை எனப் பெயர் ஏற்பட்டு இருக்கலாம். இது கோயிலில் நாள் பூசை நிகழ்ச்சிக்குப் பயன்படுத்தப்பட்ட ஒரு கருவி.

தக்கை தண்ணுமை தாளம் வீணை (7.36.9)

தக்கையை வைத்துக் கொண்டு இராமாயணத்தைப் பாடும் வழக்கம் நம்மிடையே இருந்திருக்கிறது. "தக்கை இராமாயணம்" என்னும் நூல் இக்கருவியை இசைத்துக் கொண்டு பாடுவதற்காகவே பாடப்பட்டது என்பர். பஞ்சமரபு வயிரவன், முருகன், துர்க்கை ஆகிய கடவுளர் முன் இசைக்கப்படும் கருவிகளில் தக்கை ஒன்று என்கிறது (பஞ்சமரபு உரை).

7. தகுணிதம்

சச்சரி கொக்கரை தக்கையொடு தகுணிதம் (11.1.9)

இது ஒரு தோல் கருவி. இது தகுணிச்சம், தகுணிதம் என்ற பெயர்களில் வழங்கப் பெற்றுள்ளது.

தக்கை தண்ணும்மை தாளம் வீணை தகுணிச்சம் (7.36.9)

இந்தத் தோற்கருவி 'தாகுதணம், தரிதா தகுதணம்தரிதா' என்று நட்டுவனார்களின் நட்டுவாங்கச் சதி சொற்கட்டுகளில் தகுதணம்,தாகுதணம் என்ற வடிவுகளில் காணப்படுகின்றது. அரங்கேற்று காதையுள் 'பேரிகை படகம்' என்று காட்டியுள்ள பாடலில் பெரும் பறைகள் தொகுத்துச் சுட்டப்பட்டுள்ளன. (சிலப். உ.வே.சா. பதிப்பு. 1955, ப.105). இதில் தகுணிதம் கூறப்பட்டுள்ளது. இதழ் விரிந்த தாமரை மலரை ஒத்து இந்தக்

கருவி இருந்தது எனக் கல்லாடம் (கல்.85) கூறுகிறது. பல்கலைக் கழக அகராதி இதைப் பொதுப்பறை என்கிறது.

8. துந்துபி

தகுணிதம் துந்துபி தாளம் வீணை (11.1.9)

இது ஒரு தோல் கருவி. 'தும்தும்' என்று ஒலிப்பது துந்துபி. ஒலிக்குறிப்பின் அடியாக இப்பெயர் பெற்றிருக்கலாம். துந்துபி, துந்துமி என்றும் குறிப்பு உள்ளது. இதுவானோர் விரும்பி இசைத்த கருவியாகத் தெரிகிறது. இதனால் தேவ துந்துபி, அந்தரத் துந்துபி, அநங்கத் துந்துபி என்றும் அழைக்கப்படுகிறது.

துந்துபிகள் முதலாய தூரியங்கள் கிளராமே
(பெரிய புரா. சம்.புரா. 4.649)

மலர்மழை பொழிந்தது எங்கும்
வானத்துந்துபியின் நாதம்
உலகு எலாம் நிறைந்து விம்ம
(பெரிய.புரா. காரை.புரா. 51)

ஞானசம்பந்தர் திருமணத்தில் இக்கருவி முழக்கப்பட்டது.

வானத் துந்துபி முழக்குடன் மங்கல வியங்கள்
(பெரிய புரா. சம்.புரா. 4.1198)

மிகப் பழங்காலத்திலிருந்தே நம் மக்கள் அணிந்திருந்த ஒரு கருவி இது. ஆழ்ந்த உரத்த இடியைப் போல ஒலி ஒழுப்பும் தன்மையது.

9. மத்தளம்

மத்தளம் கரடிகை வன்கை மென்தோல் (11.1.9)

இது ஒரு இருமுகத் தோற்கருவி. இது தென்னகத்திற்குரிய தேசிய இசைக் கருவி. இது மரத்தால் செய்யப்பட்டது. மத்து மத்து என்று ஒலிப்பதால் மத்தளம் என்று ஒலியின் அடிப்படையில் பெயர் பெற்றது (அடியார். நல். சிலப். 3.27). ஒலிஇனிமைத் தரத்தில் வேறான பிற கருவிகளுக்குத் தளமாக இருப்பதால் மத்தளம் எனப்பெயர் பெற்றிருக்கலாம். சிலம்பு (அடியார். நல். உரை) மங்கல வாழ்த்துப்பாடல் 46 மற்றும்

சிலம்பு.3. அரங்கேற்று காதை 27. இரண்டிலும் மத்தளம் என்னும் கருவியின் பெயர் காணப்படுகிறது. நாச்சியார் திருமொழியிலும் (6-1)

மத்தளம் கொட்ட வரி சங்கம் நின்றூத

என்றும்

மத்தளம் முதலிய வயங்கு பல்லியம்
(கம்ப. அயோ. 98)

கம்பராமாயணத்திலும் குறிப்பு உள்ளது. முதல் திருப்புகழில்

மத்தள உயிரனை உத்தமி புதல்வனை

என்று விநாயகரின் தோற்றம் கூறப்பட்டுள்ளது.

10. கரடிகை

மத்தளம் கரடிகை வன்கை மென்தோல் (11.1.9)

இது ஒரு தோற்பறை. கரடி என்ற பெயரும் உண்டு. இது கரடி கத்தினாற்போல் ஓசையிடுவதால் இப்பெயர் பெற்றது என்று அடியார்க்குநல்லார் உரை (சிலப். 3.27) கூறுகிறது. கரடிகை அளவுக்கருவியாகிய மரக்கால் போன்ற அமைப்புக் கொண்டது (கல். 85) என்று கல்லாடம் கூறுகிறது. பஞ்சமரபில் கரடிகை பலாமரத்தால் செய்யப்படும் எனவும், கனக்கரடிகை எனக் கூறி அதன் அளவுகளும் கூறப்பட்டுள்ளன. திருப்புகழில் பேரிகை, பம்பை, தமருகம், தவில் கருவிகளுடன் இக்கருவி ஒலித்ததாகக் கூறப்படுகிறது. கம்பராமாயணத்தில்

கும்பிகை திமிலை செண்டை குறடுமாம் (கம். 8445)

என்ற பாடலில் கரடிகை உள்ளது. முதலாம் ஆதித்தன் காலத்துக் கல்வெட்டில் கரடிகை என்னும் சொல் இடம் பெறுகிறது. கந்தபுராணம் தக்க காண்டத்தில் கயமகன் உற்பத்தி படலத்தில் (தக்க.காண். 14.214) கரடிகை காணப்படுகிறது.

11. தமருகம்

தமருகம் குடமுழா மொந்தை வாசித்து (11.1.9)

தமரு என்பதும் தமருகம் என்பதும் ஒரே கருவியைக் குறிக்கும் சொற்களே. உடுக்கை என்று பொருள்படும் என்று சென்னைப் பல்கலைக் கழகத்தமிழகராதி கூறுகிறது. தமருகம் என்ற தோல் கருவியை இசை நூல் மென்மைக் கருவி என்று

வகைப்படுத்துகிறது. பஞ்சமரபு இடைக்கருவி என்றும், புறமுழவு வகையைச் சேர்ந்தது என்றும் கூறுகிறது. தமரு என்பது ஒரு சிறுபறை. இடை சுருங்கியபறை. சிவன் அண்டவெளியில் நடனமாடிய போது கையில் வைத்துக் கொண்டு முழக்கியதாக வரலாறு கூறுகிறது. நடனக்கலையில் நடராசரின் கையில் தமரு இருப்பதாகவே பண்டைக் காலச் சிற்பங்கள் சான்று பகர்கின்றன.

தொகு வெகு முரசு கரடிகை டமரு (திருப். 69)

செங்கைத் தமருகம் ததிர்சதியொடன்பர்க்கின்ப
(திருப்.23)

என்று திருப்புகழில் பல இடங்களில் தமருகம் பற்றிக் குறிப்பு உள்ளது.தேவாரங்களிலும் தமருகம் பற்றிக் குறிப்பு உள்ளது.

12. குடமுழா

தமருகம் குடமுழா மொந்தை வாசித்து (11.1.9)

இதன் வாய் தோலால் மூடப்பட்டுள்ளது என்று கூறப்பட்டுள்ளதால் இது ஒரு தோற்கருவி வகையைச் சார்ந்தது எனலாம். இதில் ஒரு முக முழவு, இருமுகமுழவு, மும்முக முழவு ஐம்முக முழவு எனப் பலவகை உள்ளன. தேவார, திருவாசகத்தில் இம்முழவு பற்றிக் கூறப்பட்டுள்ளது.

குடமுழா நந்தீசனை வாசகனாகக் கொண்டார் (6.96.1)

என்று நாவுக்கரசர் தேவாரம் நந்தி குடமுழா வாசித்ததைக் கூறுகிறது. சங்ககாலத்தில் குடமுழா என்ற குறிப்பு இல்லை. காரைக்கால் அம்மையாரே முதன் முதலில் இக்கருவியைப் பற்றிக் கூறுகிறார். கல்லாடம் என்ற நூல் ஐந்து முகங்களைக் கொண்ட ஒரு முழவு பற்றிக் கூறுகிறது. ஐந்து முகங்களும் வெவ்வேறு ஓசையாக முழங்கும் குடமுழா என்னும் தோற்கருவியினை வாணாசுரன் தன்ஆயிரம் கைகளாலும் முழக்கினான் என்று கூறப்படும் செய்தியின் மூலம் ஐந்து முகங்களும் வெவ்வேறு ஒலியாக முழங்குவது குடமுழா என அறிகிறோம் (கல்.21).

13. மொந்தை

தமருகம் குடுமுழா மொந்தை வாசித்து (11.1.9)

மொந்தை என்பது ஒருகட்பறை. யானையின் காலைப் போன்ற அமைப்பு உடையது. கையால் முழக்கி ஒலி எழுப்பக்

கூடியது. கல்லவடத்திரள், தண்ணுமை, கல்லலகு, துத்திரி முதலிய பிற இசைக் கருவிகளுடன் சேர்த்து ஒலிக்கப்படும் கருவி.

மொந்தை கல்லழகு துத்திரி யோங்க (கல். 30.10)

கரிகாலன்ன மொந்தை (கல். 89.29)

தேவாரங்களில் இதன் குறிப்பு காணப்படுகிறது.

தழங்கு மொந்தை தக்கை. . . .முழங்க (1-53.5)

குழல்யாழ் மொந்தை கொட்டவே (1.70.2)

முழவங் கழன் மொந்தை (2.171.7)

மொந்தை முழா வொலிக்க (3.296.5)

தமிழிலக்கியங்களில் குறிக்கப்படும் மொந்தை என்ற தோற்கருவி ஒரு முகத்தை உடையது. ஒரே வகையான ஒலி (சுரம்) மட்டுமே இசைக்க வல்லது என்று பேராசிரியர் பி. சாம்பமூர்த்தி இசையகராதியில் குறிப்பிடுகிறார்.

14. பறை

1. பறை போல் விழிகட் பேய் கொட்ட (11.2.1)

2. படுவெண் துடியும் பறையும் கறங்கப்பரமன் ஆடுமே (11.2.9)

பறை மற்ற தோற்கருவிகள் போலத் தோலால் போர்த்தப்பட்ட ஒரு கருவி. வாரால் விசித்து இறுகக் கட்டப்பட்டது. இது ஒரு முகமுடையதாகவும், இரட்டை முகங்களை உடையதாகவும் இருந்துள்ளது. ஒரு முகப்பறை. ஒருகண் இரும்பறை என்றும், இரட்டை முகமுடைய பறையை இணை முகப்பறை என்றும் வழங்கினர். பறையின் ஒலியைக் கொண்டு இதனைப் பேரோசைப்பறை எனக் கூறியுள்ளனர். போர்ப்பறை, வெருப்பறை, வெறியாட்டுப்பறை என்றும் இது அழைக்கப்பட்டுள்ளது. தொல்காப்பியம் ஐந்து நிலங்களுக்கும் ஐந்து பறைகளைக் கூறியுள்ளது. அவை

குறிஞ்சிப்பறை	-	தொண்டகம், முருகியம், துடி
பாலைப்பறை	-	துடி
மருதப்பறை	-	கிணைப்பறை
முல்லைப்பறை	-	பம்பை, ஏறுகோட்பறை
நெய்தற்பறை	-	சாப்பறை

காரைக்கல் அம்மையார் சுடுகாட்டில் இறைவன் ஆடலுக்குப் பக்கக் கருவியாகப் பறையும் ஒலித்தது என்கிறார்.

15. துடி

படுவெண் துடியும் பறையும் கறங்கப் பரமன்ஆடுமே
(11.2.9)

இது ஒரு இருமுகத் தோற்கருவி. மிக விரைந்து முழக்கப்படுவது. இது பாலை நிலத்திற்குரிய தோல் கருவி. பாலை நிலத்து மறவர்கள்தத்தம் துடியருடன் ஊர்ப்புறம் சூழ்ந்தார்கள் என்ற கருத்தினாலும் (தொல்.பொருள்.செய்.62)

மறங்கடைக் கூட்டிய துடிநிலை
(தொல்.பொருள்.செய்.63)

துடிபடுத்து வெட்சி மாலையே
(புறப்பொருள் வெண்பாமாலை வெட்சி. 2. உரை)

என்னும் நூற்பாக்களின் அடிகளாலும் துடி என்பது போர்க்காலத்திலும் பயன்பட்டது என அறியலாகும். முருகன் துடிகொட்டி ஆடினான் அது 'துடிக்கூத்து' எனப்பட்டது (சிலப்.புகார் கடலாடு காதை.51) எனவே இது குறிஞ்சி நிலத்திற்கும் உரிய பறையாகும். துடிபற்றித் தேவாரமும் திருப்புகழும் பல குறிப்புகள் தருகின்றன.

துடிகளோடு முழவம் விம்மவே **(1.24.6)**

ஆறாம் திருமுறையில் தனித்திருத்தாண்டகத்தின் மூன்றாம் பாடலில் அப்பர் 'துடிகொண்டார் கங்காளந் தோன்மேல் கொண்டார்' என்று இறைவன்துடியுடன் ஆடியதைக் கூறுகிறார். இதற்கு முன்னோடியாகக் காரைக்கால் அம்மை காட்டில் இறைவன் ஆடப் பறையும் துடியும் முழங்கின என்று பாடுகிறார்.

16. முழவு

1. **முந்திஅமரர் மூவின் ஓசை** **(11.1.10)**
2. **முழவங்கொட்ட கூழிபாடக் குழகன் ஆடுமே (11.2.1.)**
3. **முந்திஅமரர் முழவின் ஓசை முறைமை வழுவாமே (11.2.6)**

காரைக்கால் அம்மையார் முந்தி அமரர் முழவின் ஓசை முறைமை வழுவாமே என்று கூறுவதால் ஒரு கட்டுப்பாட்டுடன், முறையோடு வாசிக்கப்பட்ட முழவின் ஓசை. அவர் ஆடிய அந்தி

நிருத்தத்தில் ஒலித்தது என்பது புலனாகும். முழக்கப்படும் தோற்கருவி முழவு எனப்பட்டது. முழவு தோற்கருவிகளின் பொதுப்பெயர் என்றும், கூறப்படுகிறது. பஞ்சமரபின் ஐந்து பெரும் பிரிவுகளில் இரண்டாம் பிரிவு வாச்சிய மரபு.இது முழவைப் பற்றியே கூறுகிறது. சங்க நூல்களான எட்டுத்தொகை, பத்துப்பாட்டு அனைத்து நூல்களிலும் முழவு பற்றிய குறிப்புகள் அதிகம் உள்ளன. சிலம்பு. **பண்ணமை முழவின் (1.3.61)** என்றும் **சீவக சிந்தாமணி பண் அமை மென்முழா (சீவக. 530.2)** என்றும் **தேவாரம் பண்முழவும் பல வோசையும் (2.145.10) பண்ணார் முழவதிர (4.57.1)** என்றும் பண்ணுக்கு இயைந்து வாசிக்கப்படும் முழவு என்னும் குறிப்புகள் உள்ளன.

17. தாளம்

தகுணித்தம் துந்துபி தாளம் வீணை (11.1.9)

இது ஒரு கனக்கருவி அல்லது கஞ்சக் கருவி. இத்தாளங்கள் தற்போது இரும்பு, எஃகு, செம்பு, வெள்ளியுடன் கூடிய வெண்கலம் போன்ற உலோகங்களால் செய்யப்படுகின்றன. இத்தாளம் குழித்தாளம், கூத்துத்தாளம், நட்டுவத்தாளம் எனப் பலவகைப்படும். காரைக்கால் அம்மையார் இறைவன் நடனம் ஆடியபோது ஒலித்த இசைக்கருவிகளுடன் தாளமும் ஒலித்ததாகக் குறிப்பிடுகிறார். தாளம் பாடலையும், ஆடலையும் கட்டுப்படுத்தி வழிநடத்திச் செல்வதற்கு உதவியாக உள்ளது.

4. காரைக்கால் அம்மையும் ஆடலும்

'நான் மகிழ்ந்து பாடி அறவா நீ ஆடும்போது உன் அடியின் கீழ் இருக்க' என்று கேட்டுக் கொண்டபடி அவர் இறைவன் ஆடலை நேராகத் தரிசித்ததால் இவர் பாடல்களில் இறைவனின் திருக்கூத்துப் பற்றிய செய்திகள் நிறைந்து காணப்படுகின்றன. பலவகை நடனங்கள், தாண்டவங்கள், இறைவன் ஆடிய போது முழங்கிய இசைக்கருவிகள், உடன் ஆடியவை, அரங்கம், ஆடல்வழி உலக இயக்கம், கூத்து வகைகள், பஞ்ச பூதங்கள், ஐந்தொழில்கள் போன்ற பல செய்திகள் கூறப்பட்டுள்ளன.

தாண்டவங்கள்

இவர் பாடல்களின் வழி இறைவன் ஆடிய பலவகைத் தாண்டவங்கள், கூத்து வகைகள், நடனங்கள் பற்றி நாம் தெரிந்து கொள்ள முடிகிறது.

1. ஊர்த்துவத் தாண்டவம்

மண்டலம் நின்றுஅங்கு உளாளமிட்கு
வாதித்து வீசி எடுத்தபாதம்
அண்டமுற நிமிர்ந்தாடு மெங்கள்
அப்பனிடம் திருஆலங் காடே *(11.1.4)*

இவ்வரிகளில் மண்டலம் என்பது இந்த உலகம். இந்த அண்டத்தில் பூமியே அரங்கமாகக் கொண்டு அதில் நின்றாடிய ஆடல் இது. எனவே மண்டலம் நின்று என்று குறிப்பிடப்பட்டுள்ளது 'உளாளம்' என்பது (உள்ளாளம்) ஒரு கால் கிரியை. பஞ்சமரபு கால்கிரியை மரபில் உள்ளாளம் என்பது "குஞ்சித்த காலைச்சுற்றி யொற்றி அணைய வைப்பது" என்கிறது. உள்ளாள மிட்டு வீசி எடுத்த பாதம் என்பதால் இறைவன் இடது பாதத்தை உள்ளாளமிட்டு வீசித் தூக்கிய நிலையில் நின்ற பாதம் என்று கொண்டால் இது ஊர்த்துவத் தாண்டவ நிலையைக் குறிக்கும். மேலும் 'வாதித்து வீசி எடுத்த பாதம்' என்பதால் வாது

நடந்தது காளியுடன்தான். எனவே காளியுடன் போட்டியிட்டு அவர் ஆடிய தாண்டவம் ஊர்த்துவத் தாண்டவமே. மேலும் ஆனந்தத் தாண்டவத்தில் தூக்கிய பாதம் என்பது சற்று உயர்த்திய இடது பாதம். ஆனால் இங்கு வீசி எடுத்த பாதம் என்பதால் இது ஊர்த்துவத் தாண்டவமே. கடைசி வரியில் 'அண்டமுற நிமிர்ந்தாடும் எங்கள்அப்பன்' என்பதால் அண்டம் முழுமையும் நிறைந்து நிமிர்ந்தாடும் ஆடல் ஊர்த்துவத் தாண்டவத்தையே குறிக்கும். மேலும் மற்றொரு பாடலில்

> ***கழலொலி ஓசைச் சிலம்பொலிப்பக்***
> ***காலுயர்வட்டணை இட்டு நட்டம் (11.1.8)***

கால்களில் சிலம்பும், கழலும் ஒலிக்க இடது காலை உயர்த்தி, வட்டணை இட்டு ஆடியதாகக் கூறப்படும் நடனமும் ஊர்த்துவத் தாண்டவமே. ஊர்த்துவம் என்பது உயர்த்திய எனப் பொருள்படும். கால்உயர் என்று கூறப்படுவதால் இது ஊர்த்துவத் தாண்டவத்தைக் குறிக்கும். 'வட்டணை' என்பது சுழற்சியை, சுழன்று ஆடியதைக் குறிக்கும் சொல் ஆகும்.

2. சந்தியாத் தாண்டவம்

சந்தி என்பது அந்திப்பொழுதைக் குறிக்கும். அந்தி வேளையில் ஆடிய நடனமே சந்தியாத் தாண்டவம் எனப்பட்டது.

> ***முந்தி அமரர் முழவினோசை திசைக் கதுவச்***
> ***சிலம்பார்க்க ஆர்க்க அந்தியில் மாநடம் ஆடும்***
> ***எங்கள் அப்பன் (11.1.10)***

அமரர்கள் முழவின் ஓசை திசையெல்லாம் கேட்க, சிவன் காலில் அணிந்துள்ள 'சிலம்பு ஆர்க்க ஆர்க்க' என்று சிலம்பு நடனத்தின் நளினத்தைக் குறிக்கிறது. அந்தியில் ஆடிய நடனம் 'மாநடம்' என்று காரைக்கால் அம்மையார் கூறியுள்ளதால் இது சந்தியாத்தாண்டவமே என்று உணர முடிகிறது. மேலும் மற்றொரு பாடலில்

> ***முந்திஅமரர் முழவின் ஓசை முறைமை வழுவாமே***
> ***அந்தி நிருத்தம் அனல்கை ஏந்தி அழகன் ஆடுமே***
> ***(11.2.7)***

என்று இரண்டாம் பதிகத்தில் கூறுகிறார். இங்கும் முந்தி அமரர் முழவின் ஓசை "முறைமை வழுவாமல்" என்று கூறுவதால் முழவு ஒரு கட்டுப்பாடுடன், வரன்முறையுடன் ஆடலுக்கு ஏற்ப ஒலித்த முறை கூறப்பட்டுள்ளது. இங்குச் சந்தியாத் தாண்டவம் 'அந்தி

நிருத்தம்' என்று கூறப்பட்டுள்ளது. இந்நிருத்தம் ஆடும்போது இறைவன்அனலைக் கையில் ஏந்தி ஆடியுள்ளதாகத் தெரிகிறது.

கூத்து வகைகள்

கூத்துக்களில் கொடுகொட்டி, பாண்டரங்கம், காபாலம் ஆகிய மூன்றுமே சிவன் ஆடிய ஆடல்களாகச் சங்க நூல்களில் கலித்தொகையும், காப்பியங்களில் சிலப்பதிகாரமும் தெரிவிக்கின்றன. புறப்பொருள் இலக்கணங்களில் வரும் முன்தேர்க் குரவை, பின்தேர்க்குரவை போலத் திரிபுரத்தை வென்ற களிப்பால் இறைவன் பாரதி வேடந்தாங்கித் தேர்முன் ஆடினார். கைகொட்டி ஆடினார் என வருகிறது (ஆடல்வல்லான்,பக்.85). கலித்தொகையும், சிலம்பும் கொடுகொட்டியாவது திரிபுரத்தை எரியச்செய்த சிவபெருமான் உமாதேவியை ஒருபால் கொண்டு கைகொட்டியாடிய கூத்து என்கின்றன.

திரிபுரம் எரியத்தேவர் வேண்ட
எரிமுகப் பேரம் பேவல் கேட்ப
உமையவள் ஒரு திற்கை ஓங்கிய
இமையவன் ஆடிய கொடுகொட்டி

(கடலாடுகாதை.40)

என்று சிலப்பதிகாரம் கொடுகொட்டி பற்றிக் கூறுகிறது. கலித்தொகை கடவுள்வாழ்த்துப் பாடலில்

படுபறை பல இயம்பப் பல்லுருவம் பெயர்த்துநீ
கொடுகொட்டி ஆடுங் கால்

(கலித். கடவுள். வாழ். 5-6)

என்று கொடுகொட்டி ஆடும் போது பலவிதப் பறைகள் முழங்கின என்று கூறுகிறது. காரைக்கால் அம்மையாரும் மூத்த திருப்பதிகத்தில் இறைவன் ஆடியபோது முழங்கிய பலவிதமான பறைகள் பற்றிக் கூறுகிறார்.

சச்சரி கொக்கரை தக்கை யோடு
தகுணிதம் தந்துபி தாளம்வீணை
மத்தளங் கரடிகைவன்கை மென்தோல்
தமருகங் குடமுழா மொந்தை வாசித்
தத்தனை விரவினோடு ஆடுமெங்கள்
அப்பனிடம் திருஆலங் காடே *(11.1.9)*

இவ்வாறு 12 வகையான இசைக்கருவிகள் முழங்க இறைவன் ஆடியதாகக் கூறப்படுவதால் இது கொடுகொட்டியாக இருக்கலாம் என எண்ண இடமுண்டு. சிலம்பு திரிபுரம் எரித்தவுடன் ஆடிய ஆடல் இது என்கிறது. திரிபுரம் எரித்த நிலையில் ஆடிய தாண்டவமே திரிபுரத் தாண்டவம் எனப்படுகிறது. இது வெற்றிக் கூத்தாகும்.

திரிபுரத் தாண்டவம்

மூன்று அசுரர்கள் (தாரகாட்சன், கமலாட்சன், வித்யுன்மாலி) தேவர்களுக்கு மிகுந்த துன்பம் கொடுத்ததால் அவர்கள் சிவபெருமானை வேண்ட இறைவன் போர்க்கோலம் தாங்கித்தேரின் மீது சென்று அவர்கள் கோட்டையை எரித்து அவர்களை வாயிற்காவலர்களாக ஆட்கொண்டார் என்பது புராணச் செய்தி. இந்த வெற்றிக் களிப்பில் ஆடிய கூத்தே திரிபுரத்தாண்டவம் எனப்படுகிறது. காரைக்கால் அம்மையார் பல இடங்களில் முப்புரம் எரித்த வரலாற்றைக் கூறுவதால் இக்கூத்து பற்றிய செய்தியாகவே கொள்ளலாம்.

1. **முரண் அழிய ஒன்னாதார் மூஎயிலும் ஒரம்பால் எய்தானே *(11.4.27)***
2. **முப்புரங்கள்அன்றெரித்தான் *(11.4.32)***
3. **அந்தரத்தே நாம் ஆள் என்று ஏத்தார்
நகர் மூன்றும் வேம்ஆறு ஒரு கணையால் செற்றானை
*(11.4.34)***
4. **மதியா அடல் அவுணர் மாமதில் மூன்று அட்ட
*(11.4.37)***
5. **விண்டார் மும்மதிலும் வெந்தீயினில் அழியக்
கண்டாலும் முக்கணான் கண் *(11.4.84)***

என்று அற்புதத் திரு அந்தாதியில் பல பாடல்கள் திரிபுர சம்காரத்தைப் பற்றிக் கூறுகின்றன.

இரட்டை மணிமாலையில் திரிபுர சம்காரம்

1. **முனிவார் திரிபுரம் மூன்றும்வெந்தன்று செந்தீயில் மூழ்கத்
தனிவார் கணை யொன்றினால் மிகக் கோத்த
வெஞ்சங்கரனே *(11.3.5)***

நீ நின்று தானவர் மாமதில் மூன்றும் நிரத்துடனே
தீ தின்று வேவச் சிலை தொட்ட வாரென் (11.3.15)

என்று திரிபுரம் எரித்தது பற்றிய செய்திகள் உள்ளன.

பாண்டரங்கம்

இக்கூத்தும் திரிபுர சம்காரத்தை அடிப்படையாகக் கொண்டு ஆடப்பட்டதுவே. பாழ்+து+அரங்கம்=பாண்டரங்கம். பாழ்பட்ட சுடுகாட்டையே அரங்கமாக வைத்து ஆடிய ஆடல் ஆகையால் பாண்டரங்கம் எனப்பெயர் பெற்று இருக்கலாம். காரைக்கால் அம்மையாரின் மூத்த திருப்பதிகம் இரண்டும் இறைவன் திரு ஆலங்காட்டில் பாடப்பட்டவை. இவை முழுவதும் இறைவன் சுடுகாட்டில் ஆடிய ஆடலைக் குறித்தே பாடப்பட்டுள்ளன.

1. பேய்தங்கி யலறி உலறுகாட்டில்
   தாழ்சடை எட்டுத்திசையும் வீசி (11.1.1)
2. ஈமம் இடுசுடுகாட்டகத்தே
   ஆகங் குளிர்ந் தனல் ஆடும் (11.1.3)
3. பேய்கள் கையடித்தோடு இடுகாடரங்கா (11.1.4)
4. கூகை பேய்கள் குறுநரி சென்றணங்காடு காட்டில்
   (11.1.6)
5. பட்டபிணங்கள் பரந்த காட்டில் (11.2.1)
6. சிறு கூகை மூளைத் தலையும் பிணமும்
   விழுங்கி முரலும் முதுகாட்டில் (11.2.6)
7. இடுவெண் தலையும் ஏமப்புகையும்
   எழுந்த பெருங் காட்டில் (11.2.9)
8. நட்டம் பேணும் இறைவன் பெயரும் பெருங்காடே
   (11.2.3)

மேற்கூறிய பாடல்கள் சிவன் சுடுகாட்டில் ஆடியதாகக் கூறுவதால் இவை பாண்டரங்கமாகக் கொள்ளப்படலாம்.

காபாலம்

காபாலம் என்பது சிவன் மண்டை ஓடுகளை அணிந்து ஆடுவது என்று கலித்தொகை கூறுகிறது. பகைவர்களின்

மண்டை ஓடுகளை அணிகலன்களாகக் கொண்டு பகைவர்களை ஆட்கொண்டான் எனக் கொள்ளல் வேண்டும்.

> *கொலை யுழுவைத் தோலசைஇ கொன்றைத்தார் அவற்புரள*
> *தலையங்கை கொண்டு நீ காபாலம் ஆடுங்கால்*
> *(கலித். கடவுள்வாழ்த்து 11–12)*

எனவே தலையங்கை கொண்டு அவர் ஆடிய ஆடல் காபாலம் எனப்பட்டது. காரைக்கால் அம்மை கூறும் காபாலக் கூத்து:

1. *கொடு வெண் டலையும் பிறையும் ததும்பக்*
   கெள்ளென் றிசை பாடப்
   படுவெண் துடியும் பறையும் கறங்கப் பரமன் ஆடுமே
   (11.2.9)
2. *என்பறாக் கோலத்து எரியாடும் என்மானார்க்கு*
   அன்பறாது என் நெஞ்சு அவர்க்கு (11.4.2)
3. *என்பே அணிந்து இரவில் தீ யாடும் எம்மானார் (11.4.30)*
4. *முன்பாயின தலை யோடுகள் கோத்தவை ஆர்த்துவெள்ளை*
   என்பாயினவும் அணிந்தங்கோர் ஏறுகந் தேறுவதே
   (11.3.17)
5. *பொடிபூசி என்பணிந்த பேய்க் கோலம் (11.4.29)*
6. *பொங்கிரவில் ஈமவனத் தாடுவதும் (11.4.25)*

மேற்கூறிய பாடல்வழி இறைவன் என்பணிந்து ஆடியதாகக் கூறப்படுவதால் இக்கூத்தைக் காபாலக் கூத்து என்று எண்ணலாம்.

உன்மத்த நடனம்

உன்மத்தன் என்பவன் பித்தன். பித்தன் வேடம் கொண்டு இறைவன் ஆடிய நடனம் உன்மத்த நடனம் இந்நடனத்தைக் காரைக்கால் அம்மையார்

> *பித்த வேடம் கொண்டு நட்டம் பெருமான் ஆடுமே*
> *(11.2.4)*

என்கிறார். இதன்படி இறைவன் பித்தவேடம் கொண்டு ஆடிய நடனம் நமக்குப் புலப்படும்.

சம்காரத்தாண்டவம்

தாண்டவம் என்னும் நடனம் விரைந்து விறுவிறுப்பும் நிறைந்த, தாண்டிக் குதித்தலும், தாளப் பின்னல்களும், சுழற்சியும் கொண்ட ஒரு நடனமாகும். இறைவன் எண்தோள் வீசி நின்று, சடை நாற்திசையும் பரவத் தீப்பிழம்பு எங்கும் இலங்க, சொல்லொணாத சுழற்சியில் நின்றாடுவது சம்காரத் தாண்டவம் (ஆடல்வல்லான் ப.130) என்று கூறுகிறது. இத்தகைய நடனத்தை இறைவன் ஆடியதாகக் காரைக்கால் அம்மையார் கூறும் பாடல்:

> **தாழ்சடை எட்டுத் திசையும் வீசி**
> **அங்கம் குளிர்ந் தனலாடும் எங்கள் அப்பன்** (11.1.1)

தாழ்சடை எட்டுத் திசையும் வீச அனலாடிய ஆடல் கூறப்படுகிறது. மேலும்

> **காடும் கடலும் மலையும் மண்ணும் விண்ணும் சுழல**
> **அலை கையிலேந்தி ஆடும் அரவப்புயங்கன்** (11.1.8)

இறைவன் சுழன்று ஆடியதால் காடு, மலை, மண், விண் ஆகிய அனைத்தும் சுழன்றதாகக் கூறப்படுகிறது.

> **ஆடும் மதியம் சடைமேல் உடையார்**
> **சுழல்வார் திருநட்டம் ஆடும் பரமன்** (11.2.11)

சுழன்று ஆடிய அவர் நடனத்தைச் "சுழல்வார் திருநட்டம்" என்று கூறுகிறார். மற்றொருபாடலில் :

> **காலுயர் வட்டணை இட்டு நட்டம்** (11.1.7)

என்ற 'வட்டணை' என்ற சொல்லின் வழி சுழன்று நட்டம் ஆடிய விதம் நமக்குப் புலப்படும். இதுவே ஊழிக்கூத்து, சர்வ சம்காரத் தாண்டவம் என்றும் அழைக்கப்படுகிறது.

சர்வசம்காரத் தாண்டவம்

திருப்புத்தூர் புராணம் இறைவன் சர்வ சம்காரத் தாண்டவத்தை இருண்ட நள்ளிரவில் ஆடினான் என்று கூறுகிறது (ஆடல் வல்லான் ப.117). காரைக்கால் அம்மையார் அற்புதத் திருவந்தாதியில் நள்ளிரவில் சுடுகாட்டில் இறைவன் ஆடிய நடனத்தைப் பல இடங்களில் குறிப்பிடுகிறார்.

1. **பொங்கிரவில் ஈம வனத்தாடுவதும்** (11.4.25)
2. **என்பே அணிந்து இரவில் தீ யாடும் எம்மானார்** (11.4.30)

3. கழல் ஆர்ப்பப் பேரிரவில் ஈமப் பெருங்காட்டில் பேயோடும்
ஆரழல்வாய் நீயாடும் அங்கு (11.4.51)

4. பொங்கு இரவில் ஏந்து எரிபாய்ந்து
ஆடும் இடம் எமக்கு ஒருநாள் காட்டுதுயோ? (11.4.70)

மேற்கூறிய பாடல்கள் வழி இறைவன் நள்ளிரவில் சுடுகாட்டில் எரிபாய்ந்து ஆடியுள்ளார் எனத் தெளிவு. இந்த நடனம் சர்வசம்காரத் தாண்டவம் எனக் கொள்ளலாம்.

அணுத்தாண்டவம்

'அணுவிற்கு அணுவாய் அப்பாலுக் கப்பாலாய்' என்று திருவாசகத்தில் மாணிக்கவாசகர் கூறுவது போல இறைவன் உலகங்களை எல்லாம் அணுவாக்கித் தானும் அணு உருவாய் நின்றாடுவது அணுத்தாண்டவம். இது அணுக்கத். தாண்டவம் என்றும் கூறப்படுகிறது. அணுவைப் பற்றி ஆராய்ச்சி செய்கின்ற விஞ்ஞானிகள் 'அணுக்கள் எல்லாம் ஏக தளத்தில் ஆடிக்கொண்டேயிருக்கின்றன' என்று கூறியுள்ளனர். அணுக்கள் இயங்க அண்டங்கள் இயங்குகின்றன என்றும் கண்டறிந்தனர்.

ஓர் அணுவின் அமைப்பைக் கண்டோமானால் அதன் நடுப்பகுதிநிலைத்த அணுவும் (Protons + & Neutrons) அதனை வளையச் சுற்றும் அணுவும் (electrons-) கொண்டது. சுற்றும் அணு அக்லாமலும் அணுகாமலும் ஓரளவு தூரத்தில் ஓயாமல் சுற்றிக்கொண்டே இருப்பதைக் காணலாம்.

அணுவின் அமைப்பு



இந்த அணுவின் அமைப்பு கூத்தாடும் நடராசப் பெருமானுக்கு ஒப்பாகக் கூறப்படுகிறது. அவனுடைய ஒழுங்கான கட்டுப்பாடான (சுற்றி வரும் அணுவைப் போன்ற) அசைவின் காரணமாக இந்த அண்டம் இயங்கிக்கொண்டு இருக்கிறது. நடராசர் கையில் தீ, காலில் மண், தலையில் கங்கை நீர், துடியில் காற்று, ஆடும் இடம் ஆகாயம் இவ்வாறு பஞ்ச பூதங்களும் ஒவ்வொரு உறுப்பில் விளங்கத் தான் அவைகளை எல்லாம் கூட்டுகின்ற நுண்பொருளாய், நுண்ணிய ஆற்றலாய் அவைகளைப் படைத்து ஆட்டுவிக்கிறான். இதனை விளக்குவதே அவன் நடனம்.

இந்த ஆட்டம் சற்றுப் பிழைப்பின், மாறுபடின் பேராபத்தை உண்டாக்கும். இது அணுவில் ஏற்படுத்தப்பட்ட சிறிய மாற்றம் அணுகுண்டுவழி பேரழிவை ஏற்படுத்துவது போன்றது. நடராசப் பெருமானின் ஆடல் சற்றுப் பிழைப்பின் இந்த அண்டம் என்ன ஆகும் என்றும் காரைக்கால் அம்மையார் தம் அற்புதத் திருவந்தாதியில் கூறுகிறார்.

அடி பேரிற் பாதாளம் பேரும் அடிகள்
முடிபேரின்மாமுகடு பேரும்–கடகம்
மறிந்தாடு கைபேரில் வான்திசைகள்பேரும்
அறிந்தாடும் ஆற்றாது அரங்கு (11.4.77)

இப்பாடல்வழி இறைவன் பாதம் (அடி) சற்றுப் பெயர்ந்தால் பாதாள உலகம் பெயர்ந்து போகும். அடிகள் முடி பெயர்ந்தால் மேல் உலகங்கள் பெயர்ந்து போகும் என்றும் கடகம் அணிந்து ஆடும் கை பெயர்ப்பின் வான் திசைகள் அனைத்தும் பெயர்ந்து போகும் என்றும் இதை அறிந்து ஆடுவீராக. இல்லை என்றால் இந்த அண்டம் தாங்காது (ஆற்றாது) என்று இறைவன் அண்டத்தையே அரங்கமாகக் கொண்டு ஆடிய ஆடல் மூலம் இவ்வுலக இயக்கம் கூறப்படுகிறது.

உலக இயக்கம்

ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே என்ற திருநாவுக்கரசர் தேவாரத்திற்கு ஏற்ப அவர் ஆடல் இந்த உலக இயக்கமாக உள்ளது. இதையே திருமூலரும் திருமந்திரத்தில்,

காளி யோடு ஆடிக் கனகா சலத்தாடிக்
கூளியோடுஆடிக் குவலயத்தே ஆடி
நீடிய நீர் தீகால் நீள்வான் இடையாடி
நாளுற அம்பலத்தே யாடும் நாதனே – திருமந்திரம்

மண்ணில் நவரத்தின மணிகள் ஒளிவீசுகின்றன. நீரில் அலை மோதுகின்றது. நெருப்பு தனது சுவாலையாய் நாக்கை நீட்டி ஆடுகிறது. காற்று தென்றலாகவோ, புயலாகவோ வீசுகிறது. வானில் மின்னல் துள்ளி ஒளிர்கிறது. இவ்வாறு ஐம்பூதங்களிலும் ஒருவகை நடனம் நிகழ்ந்து கொண்டு இருக்கிறது. ஐம்பூத இயக்கம் ஆடல் வல்லானாகிய இறை ஆடும் நடனம் என்கிறார்.

உலக இயக்கங்களின் உயிர்த் துடிப்பு ஆடல் வல்லானின் ஆடலால் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. உயிர்கள் பிறப்பதும், இறப்பதும், வாழ்வதும், மறப்பதும், இருப்பதும் பேரின்ப நிலையில் பெருவாழ்வில் பொருந்துவதும் ஆடல்வல்லானின் அசைவினால் நிகழ்கின்றது. நுண்ணிய அணு கூட அசைவற்று இருப்பதில்லை. இயக்கம் என்பது உலகின் மாபெரும் தத்துவம் இதனைக் காட்டும் இணையற்ற வடிவம் ஆடல் வல்லானின் வடிவமாகும்.

காரைக்கால் அம்மையார்

அறிந்தாடும் ஆற்றாது அரங்கு (11.4.77)

இந்த அண்டமே ஆடும் அரங்கமாகக் கொண்டு ஆடியுள்ளார் என்கிறார். இதில் பாதாளம் அவர் கால் பெயர்ந்து ஆடும் இடமாக இருப்பதால், அதன் இயக்கம் அவர் பாதங்களிலும், வான் முகடின் இயக்கம் அவர் முடியிலும், திசைகளின் இயக்கம் அவர் கைகளிலும் இருப்பதாகக் கூறிப்பொதுவாக அண்டத்தின் இயக்கம் அவரின் அறிந்தாடும் ஆடலில் தான் உள்ளது என்கிறார். அவரே விரிசுடர், ஆகாயம் ஐம்பூதம், அட்டமூர்த்தம் அனைத்தும் என்கிறார்.

அவனே இருசுடர்தீ ஆகாயம் ஆவான்
அவனே புவிபுனல் காற்றாவான்– அவனே
இயமானனாய் அட்ட மூர்த்தியுமாய் ஞான
மயனாகி நின்றானும் வந்து *(11.4.21)*

மேலும் காரைக்கால் அம்மையார் மற்றொரு பாடலில் இறைவன் திருமுடியின் மேல் கங்கை உலாவுவதாலும், பிறைமதி உலாவுவதாலும் (ராகு, கேது) பாம்புகள் உலாவுவதாலும் ஆராய்ந்து பார்த்தால் அது வானமே ஆகும் என்று கூறுகிறார்.

கலங்கு புனல் கங்கை ஊடால லாலும்
இலங்கு மதி இயங்க லாலும் – நலங்கொள்
பரிசுடையான் நீள்முடிமேல் பாம்பு இயங்கலாலும்
விரிசடையாம் காணில் விசும்பு *(11.4.75)*

இறைவன் திருமுடி வானே என்று அறுதி இட்டுக் கூறுகிறார். காரைக்கால் அம்மை தன் மூத்த திருப்பதிகத்தில்

அண்டமுற நிமிர்ந்தாடும் எங்கள் அப்பன் (11.1.4)

என்கிறார். இவ்வண்டம் முழுமையும் நிறைந்து கால் பூமியிலும் முடி மேல் உலகத்திலும் இருக்குமாறு ஆடிய ஆடல் இது. இதை நாம் கற்பனை செய்யும் போது, இறைவன் காரைக்கால் அம்மையாருக்கு 'விசுவரூப தரிசனம்' கொடுத்துள்ளார். அர்ச்சுனருக்குக் கீதோபதேசத்தின்போது கண்ணன் தரிசனம் கொடுத்தது போலவும், மாபலி சக்கரவர்த்திக்கு வாமன அவதாரத்தில் தரிசனம் கொடுத்தது போலவும் இங்கு நடராசப் பெருமான் விண்ணிற்கும், மண்ணிற்கும் இடையே பெரிய உருவம் எடுத்துள்ளார் என்று பொருள்கொள்ள முடிகிறது. மேலும் வாமன அவதாரத்தில் வாமனனாக அவதாரம் எடுத்துள்ள திருமால் மண்ணில் ஒரு பாதமும், விண்ணில் ஒரு பாதமும் வைத்து, மூன்றாம் அடிக்கு இடம் தேடினார் என்கிறது புராணம். இங்குக் காரைக்கால் அம்மையார் கூறும் ஊர்த்துவத் தாண்டவத்திலும் நடராசப் பெருமான் மண்ணில் ஒரு பாதமும், விண்ணில் ஒரு பாதமும் வைத்துப் பெருங்கூத்து ஆடியுள்ளார்.

வாதித்து வீசி எடுத்த பாதம் (11.1.4)

என்று கூறப்படுவதால் காளியுடன் போட்டியிட்டு வீசி எடுத்த, ஊர்த்துவத் தாண்டவமே என்பது உறுதி. மேலும் மூத்த திருப்பதிகத்தின் இரண்டாம் பதிகத்தில்

மாயன் ஆட மலைமகளும் மருண்டு நோக்குமே (11.2.8)

என்று கூறுகிறார். மாயன் என்பவன் மாயவித்தைகள் செய்யும் இறைவன். அண்ட முழுமையும் நிறைந்து ஆடிய தோற்றம் மாய வித்தையே. இதைக் கண்டு மலைமகள் மருண்டு வியந்து நோக்கினாள் என்று காரைக்கால் அம்மையார் கூறுவதைப் பார்க்கிறோம்.

துணங்கைக் கூத்து

முடக்கிய இரு கைகளையும் விலாப்புடைகளில் ஒற்றி அடித்துக் கொண்டு அசைந்தாடும் ஒரு வகைக் கூத்தே துணங்கைக் கூத்தாகும். துணங்கைக் கூத்து வகைகளில் பேய்த் துணங்கை ஒருவகை. இந்தப் பேய்த்துணங்கைக் கூத்துப்பற்றிக் காரைக்கால் அம்மையார் தன் பாடல்களில் குறிப்பிடுகிறார்.

1. சுழலும் அழல்வழிக் கொள்ளிவாய்ப்பேய்
சூழ்ந்து துணங்கையிட் டோடியாடி (11.1.7)

2. ஒப்பினை இலல்லவன்பேய்கள் கூடி
ஒன்றினை ஒன்றடித் தொக்கவித்துப்
பப்பினை யிட்டுப் பகண்டையாட (11.1.11)

3. பேய்கள் கையடித்து ஓடு இடுகாட்டரங்கா (11.1.4)

பேய்கள் கையடித்துக்கொண்டு என்றும், பேய்கள் கூடி என்றும் கூறப்படுவதால் பலர் சேர்ந்து கையடித்துக் கொண்டு ஆடப்படும் குழுநடனம் என்பது தெளிவு. பல பேய்கள் ஒன்றினை ஒன்றடித்துக் கொண்டு துணங்கை ஆடியதை இப்பாடல்கள் மூலம் தெரிவிக்கிறார்.

மூத்த திருப்பதிகம் கூறும் நடராசர் திருவடிவம்

ஆடிய இடம்	-	திருஆலங்காடு
அரங்கம்	-	சுடுகாடு
ஆடல்	-	நின்றாடியது (ஊர்த்துவத்தாண்டவம் சம்காரத் தாண்டவம், கொடு கொட்டி, பாண்டரங்கம், காபாலம்)
பக்க இசைக்கருவிகள்	-	சச்சரி, கொக்கரை,தக்கை, துந்துபி, தகுணிதம், தாளம், வீணை, மத்தளம் கரடிகை, தமருகம், குடமுழா, மொந்தை, துடி, பறை, குழல்

திருஉருவ அமைப்பு

1. தாழ்சடை (எட்டுத் திசையும் வீசியநிலையில்)
2. அங்கை அனல்
3. கழலொலிக்கச் சிலம்பொலிக்கக் காலுயர்த்திய பாதம்
4. வாதிட்டு வீசி எடுத்த பாதம்
5. புள்ளி உழைமான் தோல் ஒன்று உடுத்து
6. புலித்தோல் பியற்கிட்டு

7. கொடுவெண்தலை, பிறை ததும்ப

8. சூடும் மதியம் சடைமேல்

9. ஆடும் அரவப் புயங்கன்

10. ஆடும் அரவம் அரையில் ஆர்த்த அடிகள்

அங்கங்குளிர்ந்தனல் ஆடல்

இது காரைக்கால் அம்மையாரால் இறைவன் ஆடும் நடனத்திற்குக் கொடுக்கப்பட்ட சிறப்புப்பெயர். எங்கும் காணப்படாத ஆடல். அங்கம் குளிர்ந்து + அனல் ஆடல் - அங்கங் குளிர்ந்தனல் ஆடல். அங்கங்குளிர்ந்து என்பது இறைவனது உடல் அவர் திருமுடியிலிருக்கும் வற்றாத கங்கை பாய்வதால் குளிர்ந்துள்ளது. ஆனால் அவர் ஆடுமிடம் சுடுகாடு. அங்கு அனல் எரிந்து கொண்டே இருக்கும். இருவெவ்வேறான ஒன்று சேரமுடியாதவை, ஒன்று சேர்ந்ததாக ஆடல் (அங்கங் குளிர்ந்தனல் ஆடல்) கூறுகிறது.

இக்கருத்து மூத்த திருப்பதிகத்தில் பல இடங்களில் கூறப்பட்டுள்ளது.

1. **அங்கங் குளிர்ந்தன லாடும் எங்கள்** (11.1.1.)

2. **ஆகங் குளிர்ந்தனல் ஆடும் எங்கள்** (11.1.3)

3. **அன்னி யவிக்க நின்றாடும் எங்கள்** (11.1.2)

4. **அழலுமிழ்ந் தோரி கதிக்க ஆடும்** (11.1.8)

மேலும் தாண்டவம் என்பது பாய்ந்து, தாண்டிக் குதித்து ஆடுவது. இதை,

அட்டமே பாய நின்றாடும் எங்கள் (11.1.7)

என்று பாய்ந்து ஆடும் நடனம் பற்றிக் கூறுகிறார் காரைக்கால் அம்மையார்.

5. காரைக்கால் அம்மையும் பல்வேறு சுவைகளும் (நவரசம்)

நவரசம் என்பவை பாடலின் பொருளில் வெளிப்படும் பல்வேறு சுவைகளே. இச்சுவைகளை உணர்வுகள் என்றும் கூறலாம். இவ் உணர்வுகளைத் தொல்காப்பியர் மெய்ப்பாட்டியல் அதிகாரத்தில் குறிப்பிடுகிறார்.

நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்று
அப்பால் எட்டே மெய்ப்பாடு என்ப (பொருளதி. 1197)

இவ் உணர்வுகள்ஆடல்துறையில் முக உணர்வுகளாகக் காட்டப்படுகின்றன. காரைக்கால் அம்மையாரும் தன் பாடல்கள் வழி இந்த உணர்வுகளைக் கூறுகிறார்.

பல்வேறு சுவைகள்

1. அவலச் சுவை 2. அற்புதச் சுவை 3. பெருமிதச் சுவை 4. மகிழ்ச்சிச் சுவை 5. அருவருப்புச் சுவை 6. வீரச் சுவை 7. அழுகைச் சுவை 8. அச்சச்சுவை 9. சாந்த சுவை போன்ற பல்வேறு சுவைகளை அம்மையார் பாடல்வழி நாம் உணரமுடிகிறது.

1. அவலச் சுவை

புந்தி கலங்கி மதிமயங்கி
இறந்தவரைப் புறங்காட்டிவிட்டுச்
சந்தியில் வைத்துக்கடமை செய்து
தக்கவர் இட்ட செந்தீ (11.1.10)

உலகத்தவர் இறந்தவுடன் செய்யப்படும் சடங்குகள் அவலச் சுவையை வெளிப்படுத்துகின்றன.

உத்தமராய்வாழ்வார் உலந்தக்கால் உற்றார்கள்
செத்த மரமடுக்கித் தீயா முன் (11.3.20)

என்று சுடுகாட்டில் பிணமாக விறகால் எரிக்கும் முன் இறைவனை

நினைந்துவிடு என்று இரட்டைமணி மாலையில் கூறுமிடம் அவலச்சுவைக்கு ஓர் எடுத்துக்காட்டு.

2. அற்புதச் சுவை

யாரும் செய்ய முடியாத செயலைச் செய்வது அற்புதமாகும்.

மண்டலம் நின்று அங்கு உளாளமிட்டு
வாதித்துவீசி எடுத்த பாதம்
அண்டமுற நிமிர்ந்தாடும் எங்கள்
அப்பனிடம் திருஆலங் காடே *(11.1.4)*

அண்டம் முழுமையும் நிறைந்து பெரிய வடிவம் கொண்ட குறிப்பு (விசுவரூப தரிசனம்) இருப்பதால் இது அற்புதச் சுவையை உணர்த்தும். இந்த ஆட்டத்தை மாயனாகிய சிவன் ஆட அம்மை மருண்டு நோக்கினாள் என்று காரைக்கால் அம்மை கூறுகிறார்.

மாயன் ஆட மலையான் மகளும் மருண்டு நோக்குமே
(11.2.8)

மேலும் அவர் சுழன்று ஆடியதால் அண்டமே சுழன்றது என்று கூறும் பாடல் அற்புதச் சுவைக்கு ஓர் எடுத்துக்காட்டு.

காடும் கடலும் மலையும் மண்ணும்.
விண்ணும் சுழலஅனல் கையேந்தி
ஆடும் அரவப்புயங்கன் எங்கள்
அப்பனிடம் திருஆலங் காடே *(11.1.8)*

3. பெருமிதச் சுவை

காரைக்கால் அம்மையார் தன் முதல் பதிகத்தின் அனைத்துப் பாடல்களிலும். "எங்கள் அப்பன் ஆடுமிடம் ஆலங்காடே" என்று இறைவனை எங்கள் அப்பன் என்று பெருமிதமாகக் கூறும் இடம் பெருமிதச் சுவையே.

இறைவன் ஆடலில்தான் இவ்வுலக இயக்கம் நடைபெறுவதால் அவரை அறிந்து ஆடச்சொல்லும் பாடல் பெருமித சுவைக்கு மேலும் ஓர் எடுத்துக்காட்டு எனலாம்.

அடி பேரிற் பாதாளம் பேரும் அடிகள்
முடிபேரிற் மாமுகடு பேரும்; - கடகம்
மறிந்தாடு கைபேரில் வான்திசைகள் பேரும்
அறிந்தாடும் ஆற்றாது அரங்கு *(11.4.77)*

4. மகிழ்ச்சிச் சுவை

> எனக்கினிய எம்மானை ஈசனை யான் என்றும்
> மனக்கினிய வைப்பாக வைத்தேன் - எனக்கவனைக்
> கொண்டேன் பிரானாகக்கொள்வதுமே இன்புற்றேன்
> உண்டேன் எனக்கரிய தொன்று (11.4.10)

எனக்கு இனிமை உடைய இறைவனை மனத்தில் எப்போதும் வைத்ததால் இன்புற்றேன் என்று மகிழ்ச்சியுடன் கூறுகிறார்.

> இனியோம்நாம் உய்ந்தோம் இறைவன் தாள் சேர்ந்தோம்
> இனியோர் இடரில்லோம் நெஞ்சே (11.4.16)

இறைவன் தாள் சேர்ந்ததால் உய்ந்தோம். இடரே இல்லை என்று மிகுந்த மகிழ்ச்சியுடன் இச்சுவையை வெளிப்படுத்துகிறார்.

5. அருவருப்புச் சுவை

காரைக்கால் அம்மை சுடுகாட்டில் பிணங்களைப் பற்றிக் கூறும் பாடல்கள் அருவருப்புச் சுவையைத் தருவனவாக உள்ளன.

1. விழுது நிணத்தை விழுங்கி விட்டு
   வெண் தலை மாலை விரவப் பூட்டி (11.1.5)

2. தழலுள் எரியும் பிணத்தை வாங்கித்
   தான் தடி தின்றணங் காடு காட்டில் (11.1.7)

3. புட்கள் பொதுத்த புலால்வெண் தலையைப்
   புறமே நரிகவ்வ
   அட்கென் றழைப்ப ஆந்தைவீச அருகே சிறுகூகை
   உட்க விழிக்க ஊமன் வெருட்ட ஓரி கதித்தெங்கும்
   (11.2.3)

4. பேய்கள் கூடிப் பிணங்கள் மாந்தி அணங்கும்
   பெருங்காட்டின் (11.2.8)

6. வீரச்சுவை

இறைவன் செய்த வீரச்செயல்கள் வீரச் சுவையைத் தருவனவாக உள்ளன. இராவணனின் பத்துத் தலைகளும், இருபது தோள்களும் நெரியச் செய்த செயல் வீரச் சுவையே.

1. அடித் தலத்தின் அன்றரக்கன் ஐந்நான்கு தோளும்
   முடித்தலமும் நீ முரித்த வாறென் (11.3.14)

ஒரு கணையால் திரிபுரங்கள் வெந்து போகும்படி
செய்த இறைவனின் செயல் வீரச்சுவையே

2. அந்தரத்தே நாம் ஆள் என்று எத்தார் நகர் மூன்றும்
வேம்ஆறு ஒரு கணையால் செற்றானை (11.4.34)

மேலும்

செருக்கினால் வெற்பெடுத்த எத்தனையோ திண்டோள்
அரக்கனையும் முன் நின்று அடர்த்த - திருத்தக்சு
மாலயனுங் காணாது அரற்றி மகிழ்ந்தேத்தக்
காலனையும் வென்றுதைத்த கால் (11.4.80)

இறைவனுடைய பாதம் (கால்) அவர் வீரச்செயல்கள் வழி (இராவணனை அடர்த்தது, மாலயன் தேடியது, மார்க்கண் டேயருக்காக எமனை உதைத்தது) புகழப்படுகிறது. இது வீரச்சுவைக்கு ஓர் எடுத்துக் காட்டாம்.

7. அழுகைச் சுவை

பிறந்ததிலிருந்து மொழி பயின்று பின் நாள் காதல் கொண்டு உன் சேவடியைத் தவிர வேறு கதியில்லை என்று உன்னைச் சேர்ந்தேன். எப்பொழுது இடர் தீர்ப்பாய்? என்று கேட்கும் போதும், இடர் களையா விட்டாலும் என் நெஞ்சு சிவனைத்தவிர வேறு யாரிடமும் அன்பு செலுத்தாது என்று அழுது புலம்பும் இடம் அழுகைச் சுவைக்கு ஓர் எடுத்துக்காட்டு.

1. பிறந்து மொழி பயின்ற பின்னெல்லாம் காதல்
சிறந்து நின் சேவடியே சேர்ந்தேன் - நிறந்திகழும்
மைஞ்ஞான்ற கண்டத்து வானோர் பெருமானே
எஞ்ஞான்று தீர்ப்பது இடர் (11.4.1)

2. இடர் களையாரேனும் எமக்கு இரங்காரேனும்
படரும் நெறி பணியா ரேனும்- சுடர் உருவில்
என்பறாக் கோலத்து எரியாடும் எம்மானார்க்கு
அன்பு அறாது என் நெஞ்சு அவர்க்கு (11.4.2)

8. அச்சச்சுவை

சுடுகாட்டைப் பற்றியும், பேய்கள் தோற்றம் பற்றியும் கூறும் பாடல்கள் அச்சச்சுவையைத் தோற்றுவிக்கின்றன.

வாகை விரிந்து வெண்ணெற் றொலிப்ப
மயங்கிருள் கூர் நடு நாளை யாங்கே

கூகையோ டாண்டலை பாட ஆந்தை
கோடதன் மேற் குதித்தோட வீசி
ஈகை படர் தொடர் கன்னி நீழல்
ஈமம் இடு சுடு காட்டகத்தே (11.1.3)

இப்பாடலில் சுடுகாட்டின் தோற்றம் கூறப்பட்டுள்ளது. பேய்களின் தோற்றம் பற்றிக் காரைக்கால் அம்மையார் கூறும் பாடல் :

1. பட்டடி நெட்டுகிர்ப பாறு காற் பேய் (11.1.6)

2. சுழலும் துழல்விழி கொள்ளி வாய்ப்பேய்
சூழ்ந்து துணங்கையிட் டோடியாடித்
தழலுள் எரியும் பிணத்தை வாங்கித்
தான் தேடி நின்றணங் காடு காட்டில் (11.1.7)

3. கடுவன் உகளுங் கழைசூழ் பொதும்பிற் கழுகும் பேயுமாய்
இடுவெண்டலையும் ஓமப்புகையும் எழுந்த
பெருங்காட்டிற் (11.2.9)

4. குண்டை வயிற்றுக் குறிய சிறிய நெடிய பிறங்கற்பேய்
இண்டு படர்ந்த இருந்தும் மயானத் தெரிவாய்
எயிற்றுப் பேய் (11.2.10)

இவ்வாறு கூறப்படும் பேய்களின் தோற்றம் அச்சச் சுவையை வெளிப்படுத்துகின்றது.

9. சாந்த சுவை

இறைவன் அருள் செய்யும் காலம் சாந்த சுவையைக் கூறும். இறைவியின் மென்மையான குணங்களக் கூறி அவளைச் சுடுகாட்டிற்கு அழைத்துச் செல்ல வேண்டாம் என்று அம்மை கூறும் இடம் உமையம்மையின் சாந்த குணத்தைத் தெரிவிப்பதாக உள்ளது.

குழலார் சிறுபுறத்துக் கோல்வளையைப் பாகத்து
எழிலாக வைத்தேக வேண்டாம் – கழல் ஆர்ப்பப்
பேரிரவில் ஈமப்பெருங்காட்டில் பேயோடும்
ஆரழல்வாய் நீ யாகும் அங்கு (11.4.51)

இறைவியின் மென்மைத் தன்மை சாந்த சுவைக்கு ஓர் எடுத்துக்காட்டு.

மேலும் இறைவன் திருமேனி காலை எழுகின்ற சிவந்த இளஞ்சூரினுக்கு ஒப்பு கூறப்படுகின்றது. அவர் சடைக்கற்றை மாலைக் கால அந்திவனத்திற்கு ஒப்பு கூறப்படுகின்றது. காலை இளஞ்சூரியனும், அந்தி வானமும் மென்மையான மனதிற்கு இதமளிக்கும் அழகான தோற்றங்கள். எனவே இவை சாந்த சுவைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாம்.

காலையே போன்றிலங்கும் மேனி. . . .
. . . . . மாலையின்
தாங்குருவே போலும் சடைக்கற்றை *(11.4.65)*

இவ்வாறு காரைக்கால் அம்மையார் பாடல்கள் பல்வேறு சுவைகளுக்கு எடுத்துக்காட்டாய் உள்ளன.

6. காரைக்கால் அம்மையும் கற்பனை நயமும்

நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்
(தொல். பொரு. அகத்திணையியல்)

என்பது தொல்காப்பியம். உலகியலில் நிகழும்உண்மை நிகழ்ச்சியை அழகுபடுத்தி உரைப்பதே புலனெறி வழக்கமாகும். இது உலகியலை அடிப்படையாகக் கொண்டு புலனால் கற்பித்துக் கொள்ளப் பெறுவது. கவிதைகளில் உள்ளதை உள்ளவாறு கூறுதல் இயல்புக் கற்பனை. புதிதாக ஒன்றைப் படைத்துக் கூறுதல் மற்றொன்று. இது ஆக்கக் கற்பனை. காரைக்கால் அம்மையார் தன்பாடல்களில் இவ்விரு கற்பனைகளையும் மிக அழகாகப் பயன்படுத்தியுள்ளார்.

1. இயல்புக் கற்பனை

திருஆலங்காட்டு மூத்த திருப்பதிகம் இரண்டிலும் சுடுகாட்டைப்பற்றியும் அதன் சூழல் அதில் உள்ள பேய்கள் மற்றும் விலங்குகள், தாவரங்கள் பற்றி மிக இயல்பாக அம்மையார் கூறியுள்ள விதம் இயல்புக் கற்பனைக்கு ஓர் சிறந்த எடுத்துக்காட்டு. இதன்வழி அம்மையாரின் உலக அறிவு நம்மை வியக்க வைக்கிறது. காட்டில் வாழும் விலங்குபற்றியும், அங்கு வளரும் தாவரங்கள்பற்றியும் அவர் பொருத்தமாகக் கூறியுள்ளது அவரின் அறிவு நுணுக்கத்தைக் காட்டுகிறது.

பேய்த் தோற்றம்

தன்னையே ‘காரைக்கால் பேய்’ என்று பாடல் இறுதியில் குறிப்பிடும் காரைக்கால் அம்மை திரு ஆலங்காட்டில், அந்தச் சுடுகாட்டில் உள்ள பேய்களின் தோற்றத்தை முதல் பதிகத்தின் முதல்பாடலிலேயே இயல்பாகக் கூறுகிறார்.

கொங்கை திரங்கி நரம்பெழுந்து
குண்டுக் கண் வெண்பற் குழிவயிற்றுப்

பங்கி சிவந்திரு பற்கள் நீண்டு
பரடுயர் நீள்கணைக் காலோர் பெண்பேய் (11.1.1)

என்று பேயின் கண், மார்பு, பல், வயிறு, பற்கள், கால் போன்ற அங்க அமைப்புடன் பேயின் உருவம் கூறுகிறார்.

பேய்வகைகள்

இரண்டு பதிகங்களிலும் பல வகையான பேய்கள் கூறப்பட்டுள்ளன.

1. *பெண் பேய் (11.1.1) பிள்ளைப்பேய்; தாய்ப் பேய் (11.1.5)*
2. *சுழலும் அழல் விழிக் கொள்ளிவாய்ப் பேய் (11.1.7)*
3. *பட்டடி நெட்டுகிர்ப் பாறு காற்பேய் (11.1.6)*
4. *பேய்க் கணம் (11.1.8)*
5. *செடிதலைக் காரைக்கால் பேய் என்று தன்னைக் கூறிக்கொள்கிறார் (11.1.11)*
6. *பறைபோல் விழி கட் பேய், கூளி (11.2.1)*
7. *நெடுபற் குழிகட் பேய் (11.2.2)*
8. *அழல் வாய் அழல்கட்பேய், கூளிக்கணங்கள் (11.2.6)*
9. *சிறுபேய் (11.2.7)*
10. *மயானத் தெரிவாய் எயிற்றுப்பேய் (11.2.10)*
11. *கனல்வாய் எயிற்றுக் காரைக்கால் பேய் (தன்னை இரண்டாம் பதிகத்தில் கூறிக் கொள்வது (11.2.11)*

சுடுகாட்டு விலங்குகள்

சுடுகாட்டில் இருக்கும் விலங்குகளை மிக இயல்பாக அவைகளின் செயல்பாடுகளுடன் கூறியுள்ளது இயல்புக் கற்பனைக்கு ஒரு சிறந்த சான்று.

1. *கூகையோடு ஆண்டலை பாட ஆந்தை*
   கோடதன் மேற் குதித்தோட (11.1.3)

இதில் கூகை, ஆண்டலை, ஆந்தை போன்ற விலங்குகள் கூறப்பட்டுள்ளன.

2. குண்டிலோமக் குழிச்சோற்றை வாங்கிக்
குறுநரி தின்ன (11.1.4)

3. பட்டடி நெட்டுகிர்ப் பாறு காற் பேய்
பருந்தொடு கூகை பகண்டை ஆந்தை
குட்டியிட முட்டை கூகை பேய்கள்
குறுநரி சென்று (11.1.5)

குறுநரி, கூகை, பருந்து, ஆந்தை என்று சுடுகாட்டு விலங்குகளே கூறப்பட்டுள்ளன.

4. புட்கள் பொதுத்த புலால் வெண் தலையைப் புறமே
நரிகவ்வ
அட்கென்றழைப்ப ஆந்தை வீச அருகே சிறு கூகை
உட்க விழிக்க ஊமன் வெருட்ட (11.2.3)

5. கடுவன் உகளுங் கழைசூழ் பொதும்பிற் கழுகும்
பேயுமாய் (11.2.9)

என்று நரி, ஆந்தை, ஊமன் (ஆந்தை வகை) கடுவன் (குரங்கு) கழுகு போன்ற விலங்குகள் கூறப்பட்டுள்ளன.

சுடுகாட்டுத் தாவரங்கள்

சுடுகாட்டில் வளரும் தாவரங்களே காரைக்கால் அம்மையாரால் பாடல்களில் மிகப்பொருத்தமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

1. வாகை விரிந்து வெண் நெற்றொலிப்ப (11.1.3)

வாகை என்பது பாலைக்குரிய ஒருமரம்

2. கள்ளிக் கவட்டிடைக் காலை நீட்டி (11.1.2)

3. ஈகை படர் தொடர் கள்ளி நீழல் (11.1.3)

கள்ளிச் செடிபற்றிய ஒரு குறிப்பு வந்துள்ளது.

4. எட்டி இலவம் ஈகை சூரை, காரைப் படர்ந்தெங்கும்
சுட்ட சுடலை சூழ்ந்த கள்ளி சோர்ந்த குடர்கௌவ
(11.2.1)

எட்டி, இலவம், ஈகை, சூரை, காரை, கள்ளி இவை சுடுகாடாகிய பாலையின் தாவர இனங்களே.

5. **முள்ளி தீந்து முளரி கருகி மூளை சொரிந்துக்குக் கள்ளி வற்றி வெள்ளில் பிறங்கு கடுவெங்காடு *(11.2.5)***

முள்ளி என்பது முள்மரம், வெள்ளி என்பது விளாமரம்.

6. **வேய்கள் ஓங்கி வெண் முத்துதிர வெடிகொள் சுடலை *(11.2.8)***

வேய்கள் - மூங்கில் மரம்

7. **தாளிப்பனையின் இலைபோல் மயிர்க்கட்டழல்வாய் *(11.2.6)***

தாழிப்பனை ஒருவகைப் பனைமரம்.

8. **இண்டு படர்ந்த இருள்சூழ் மயானம் *(11.2.10)***

இண்டு - ஒரு வகைக் கொடி

சுடுகாடு (ஆலங்காடு)

சுடுகாட்டின் சூழல் பல்வேறு பெயர்களோடு காரைக்கால் அம்மையாரால் கூறப்பட்டுள்ளது.

1. **பேய்தங்கி அலறி உலறு காடு *(11.1.1)***
2. **ஈமம் இடு சுடுகாட்டகத்தே *(11.1.3)***
3. **இடுகாட்டரங்கா *(11.1.4)***
4. **அழுதுறங்கும்புறங்காடு *(11.1.5)***
5. **குறுநரி சென்றணங்காடு காட்டில் *(11.1.6)***
6. **பட்ட பிணங்கள் பரந்த காடு *(11.2.1)***
7. **அணங்கு காடு *(11.2.2)***
8. **இறைவன் பெயரும் பெருங்காடு *(11.2.3)***
9. **கள்ளிவற்றி வெள்ளில் பிறங்கு கடுவெங்காடு *(11.2.5)***
10. **மூளைத்தலையும் பிணமும் விழுங்கி முரலும் முதுகாடு *(11.2.6)***
11. **சிறுபேய் சிரமப்படு காடு *(11.2.7)***

12. இடுவெண்டலையும் ஏமப்புகையும் எழுந்த
பெருங்காடு (11.2.9)

13. இருள் சூழ்மயானம் (11.2.10)

அற்புதத் திரு அந்தாதியில்: அழலின் நிறம் இறைவன்அங்கையோடு சேர்த்து ஒப்பு நோக்கிய பாடல் சிறந்த இயல்புக் கற்பனை.

அழல் ஆட அங்கைசிவந்ததோ? அங்கை
அழலால் அழல் சிவந்த வாறோ ? (11.4.98)

மற்றொரு பாடலில் மிடற்றில் உள்ள விடத்தையும், அவர் தம் திருமார்பில் ஆடும் நச்சுப்பாம்பையும் ஒப்பு நோக்கியது இயல்பான கற்பனையாகும்.

மிடற்றில் விடம் உடையீர்! உம்மிடற்றை நக்கி
மிடற்றில் விடம் கொண்ட வாறோ? – மிடற்றகத்து
மைத்துஆம் இருள்போலும் வண்ணம் கரிதாலோ?
பைத்துஆடும் நும்மார்பில் பாம்பு (11.4.66)

2. ஆக்கக் கற்பனை

தன் கருத்தையும் ஏற்றிக் கூறுவது ஆக்கக்கற்பனை

1. கொம்பினை ஓர் பாகத்துக் கொண்ட குழகன்தன்
அம்பவள மேனிஅது முன்னம் – செம்பொன்
அணிவரையே போலும் ; பொடி அணிந்தால் வெள்ளி
மணிவரையே போலும் மறித்து (11.4.39)

சிவனின் பவளம் போன்ற திருமேனி பொன்மலைக்கும் வெண்ணீறு அணிந்த மேனி வெள்ளிமலைக்கும் ஒப்பு கூறப்பட்டுள்ளது.

2. ஒருபால் உளகளந்த மாலவனாம் ; மற்றை
ஒருபால் உமையவளாம் என்றால் – இருபாலும்
நின் உருவம் ஆக நிறம் தெரிய மாட்டோமால்
நின் உருவோ மின் உருவோ நேர்ந்து (11.4.41)

சிவன் தன் மேனியில் ஒருபாகம் உமைக்கும், ஒருபாகம் திருமாலுக்கும் கொடுத்து விட்டால் அவரின் தனி உருவம் தான் எது என்று கேட்கிறார்.

3. காலையே போன்று இலங்கும் மேனி; கடும்பகலில்
வேலையே போன்று இலங்கும் வெண்ணீறு –
மாலையில்
தாங்குருவே போலும் சடைக்கற்றை; மற்று அவர்க்கு
வீங்குஇருளே போலும் மிடறு. (11.4.65)

இறை திருமேனி நிறம்	-	காலை உதய சூரியன்
வெண்ணீற்று மேனி	-	பகற்பொழுதின் நிறம்
சடைக்கற்றை	-	மாலைக்காலத்து வானம்
கழுத்து	-	வீங்கு இருள்

இப்பாடல் சிறந்த கற்பனை நயம் வாய்ந்தது.

4. பாம்பும் மதியும் மடமானும் பாய்புலியும்
தாம்பயின்று தாழ் அருவி தாங்குதலால் – ஆம்பொன்
உருவடிவில் ஓங்கு ஒளிசேர் கண்ணுதலான் கோலத்
திருவடியில் மேய சிலம்பு (11.4.67)

இறைவன் தன்னிடத்தே பாம்பும், திங்களும், இளமையான மானும், பாயும் புலியும் ஒருங்கே நெருங்கிப் பழகவும், சீறிவரும் கங்கையை அடக்கியும் இருத்தலால் அவருடைய ஆற்றல் மிகப் பெரியது எனக் கூறப்படுகிறது.

5. ஓதம் நெடுங்கடல்கள் எத்தனையும் உய்த்துஅட்ட
ஏதும் நிறைந்தில்லை என்பரால் – பேதையர்கள்
எண்ணாது இடும்பலியால் என்னோ நிறைந்தவா!
கண்ணார் கபாலக் கலம் (11.4.74)

இறைவன் கையில் உள்ள கபாலக்கலம் (பிச்சைப் பாத்திரம்) நெடிய கடல்கள் பலவற்றைக் கொண்டு அதில் பெய்தாலும் அது நிறைந்ததில்லை என்று கூறுகிறார்.

6. நீண்ட முடியின் மேல் கங்கைபெருகி உலாவுவதாலும் பிறைமதி உலாவுவதாலும், பாம்புகள் (இராகு, கேது) உலாவுவதாலும் நாம் ஆராய்ந்து பார்த்தால் அது வானமே ஆகும் என்று கூறும் பாடல் நல்ல கற்பனை நயம் வாய்ந்தது.

கலங்கு புனல் கங்கை ஊடாலலாலும்
இலங்கு மதி இயங்க லாலும் – நலங்கொள்

புரிசடையான் நீள்முடி மேல் பாம்பு இயங்கலாலும்
விரி சடையாம் காணில் விசும்பு (11.4.75)

7. இறைவனின் தாமரை போன்ற திருவடிகள், தேவர்களின் மணிபதித்த மகுடங்கள் உராய்வதால் (வணங்குவதால்) கன்றி எங்கும் தழும்பு பட்டுத் தன் இயல்புக்கு மேலே சிவந்தன என்பது சிறந்த கற்பனை.

விசும்பில் விதியுடைய விண்ணோர் பணிந்து
பசும் பொன் மணிமகுடந் தேய்ப்ப – முசிந்தெங்கும்
எந்தாய் தழும்பேறி ஏபாவம் பொல்லாவாம்
அந்தாமரை போல் அடி (11.4.76)

இவ்வாறு காரைக்கால் அம்மையார் பாடல்களில் கற்பனை நயம் மிகுந்து காணப்படுகிறது.

7. காரைக்கால் அம்மையும் உவமை நயமும்

காரைக்கால் அம்மை இறைவன் திருவுருவத்தை வருணிக்கும் போதும், சுடுகாட்டில் பேய்களை வருணிக்கும் போதும், இறைவனின் அளப்பறிய ஆற்றலை வருணிக்கும் போதும் பலவித உவமைகளைப் பயன்படுத்துகிறார்.

1. பேய்கள் பற்றிய உவமைகள்

1. பறை போல் விழிகட்பேய் - பேயின் கண்கள் தோல் கருவியாகிய பறையைப்போல் இருந்தன என்று பறைக்குப் பேயின் பெரிய கண்கள் உவமை கூறப்பட்டுள்ளன.

2. தாளிப்பனையின் இலைபோல் மயிர்க்கட்டழல்வாய்- நீண்ட அகலமான இலைகளைக் கொண்ட ஒருவகைப் பனைமரத்தின் இலை பேயின் வாயிற்கு உவமை கூறப்பட்டுள்ளது (11.2.6)

3. செடிதலைக் காரைக்கால் பேய் - முடிக்கப்படாத மயிருடையதலை செடி போல விரிந்து பரந்து நீட்டிக் கொண்டிருந்ததற்கு உவமை கூறப்பட்டுள்ளது.

4. அழல் கட் பேய் (11.2.6)

   கண்கள் சிவப்பாகத் தீயைப் போல இருந்ததால் அழலுக்குக் கண்கள் உவமையாகக் கூறப்பட்டுள்ளன.

5. சுழலும் அழல்விழி - தீ போன்ற விழி
   கொள்ளிவாய்ப் பேய் - தீ போன்ற சிவந்தவாய் (11.1.7)

6. எரிவாய் எயிற்றுப் பேய் - எரி(தீ)யைப் போன்றவாய் (11.2.10)

7. கனல் வாய் எயிற்றுப் பேய் - கனல் போன்றவாய் (11.2.11)

2. இறை பற்றிய உவமைகள்

1. செம்பொற் கழல் - (11..2.10)
2. பொன்வரையே போல்வான் - (11.4.8)
3. மின்செய்வான் செஞ்சடையாய் - (11.4.15)
4. மீளாப்பிறவிக் கனை கடல் - (11.4.16)
5. ஞான்ற குழற் சடைகள் பொன் வரைபோல் மின்னுவன (11.4.26)
6. கொம்பினை ஓர் பாகத்துக் கொண்ட குழகன்தன்
அம்பவள மேனி அது முன்னம் - செம்பொன்
அணிவரையே போலும் பொடி அணிந்தால் வெள்ளி
மணிவரையே போலும் மறித்து (11.4.39)

பவளம் போன்ற மேனி - பொன்வரைக்கும்
வெண்ணீற்று மேனி - வெள்ளி மலைக்கும்
உவமை கூறப்பட்டுள்ளது

7. இறைவன் சடையும் பிறையும் பொற்கம்பியோடு வெள்ளிக் கம்பியைச் சேர்த்து முறுக்கி வைத்தாற் போன்று உள்ளது என உவமை கூறப்பட்டுள்ளது.

திங்கள் விராவு கதிர் விரிய ஓடி - விராவுதலால்
பொன்னோடு வெள்ளிப் புரிபுரிந்தாற் போலாவே?
தன்னோடே ஒப்பான் சடை (11.4.49)

8. கங்கை வெள்ளமாய்ப் பெருகி நெடுந்தூரம் செல்வதால்
பார்க்கின்றவர்க்கு ஒரு கார் கால மேகத்தை ஒக்கும்
நீரார்ந்த பேரியாறு நீத்தமாய்ப் - பேரார்ந்த
நாண்பாம்பு கொண்டசைத்த நம்மீசன் பொன்முடிதான்
காண்பார்க்குச் செவ்வே ஓர் கார் (11.4.53)

9. இறைவன் செஞ்சடை - மிக்க முழங்கெரிக்கும்
உமாதேவி பூங்குழல் - வீங்கிய பொங்கிருளுக்கும்
உவமை கூறப்பட்டுள்ளது.

மிக்க முழங்கெரியும் வீங்கிய பொங்கிருளும்
ஒக்க உடனிருந்தால் ஒவ்வாதே - செக்கர் போல
ஆகத்தான் செஞ்சடையும் ஆங்கு அவன்தன் பொன் உருவின்
பாகத்தாள் பூங்குழலும் பண்பு (11.4.58)

10. பெருமேகங்கள் ஏழும் சேர்ந்து பொன்மலை போன்ற மேருவை மறைத்தாலும் அது சிவன் திருமேனியைக் கரிஉரித்துப் போர்த்திய காட்சிக்கு ஒப்பாகாது என்கிறார்.

மேலாய மேகங்கள் கூடி ஓர் பொன் விலங்கல்
போலாம் ஒளி புதைத்தால் ஒவ்வாதே - மாலாய
கைம்மா மதகளிற்றுக் கார்உரிவை போர்த்த போது
அம்மான் திருமேனி அன்று (11.4.60)

11. எம்பெருமான் திருமேனி - காலை உதய சூரியனுக்கும்

திருநீற்றுமேனி - பகற்போதின் நிறம்

சடைக் கற்றை - மாலை அந்தி வானம்

கழுத்து - இருள் (இரவுக்கும்) உவமை கூறப்பட்டுள்ளது.

காலையே போன்று இலங்கும்மேனி கடும்பகலில்
வேலையே போன்று இலங்கும் வெண்ணீறு - மாலையில்
தாங்கு உருவே போலும் சடைக்கற்றை மற்று அவர்க்கு
வீங்கு இருளேபோலும் மிடறு (11.4.65)

12. அந்தாமரை போல் அடி (11.4.76)

13. இறைவனது சடை அவரைச் சார்ந்தவர்களுக்கு அழகிய பொற்கொழுந்து போன்றது. சாராது நின்றவர்களுக்குத் தீக்கொடி போன்றது என உவமை கூறப்படுகிறது
சார்ந்தார்க்குப் பொற்கொழுந்தே ஒத்திலங்கிச் சாராது
போந்தார்க்குத் தீக்கொடியின் பெற்றியதாம் (11.4.82)

14. சிவபெருமானும் திருமாலும் சேர்ந்து வந்தால் அதுபொன் மலையும், நீல நிறக் குன்றும் ஒன்று சேர்ந்து நிற்பது போல் உள்ளது என்கிறார்.

மின் போலும் செஞ்சடையான் மாலோடும் ஈண்டு இசைந்தால்
மின் போலும் காண்பார்கட்கு என்றிரேல் - தன் போலும்
பொற்குன்றும் நீலமணிக் குன்றும் தாமுடனே
நிற்கின்ற போலும் நெடிது (11.4.83)

15. இறைவன் கழுத்தில் உள்ள நஞ்சின் கரிய நிறம் இருளின் உருவத்திற்கும் கரிய மேகத்தின் நிறத்திற்கும் நீலமணிக்கும் உவமை கூறப்பட்டுள்ளது.

இருளின்உரு என்கோ? மாமேகம் என்கோ?
மருளில் மணி நீல மென்கோ? (11.4.88)

இவ்வாறு காரைக்கால் அம்மைப் பாடல்களில் பல உவமைகள் பின்னிப் பிணைந்து காணப்படுகின்றன.

8. காரைக்கால் அம்மையும் புராணக் கருத்துக்களும்

புராணம் என்பதைப் பழங்கதை என்பர். ஆங்கிலத்தில் இது 'Myth' எனப்படுகிறது. இச்சொல் 'Mythos' என்ற கிரேக்கச் சொல்லின் திரிபகும்.

> புராணங்கள் என்பவை தேவர்கள், மக்கள், விலங்குகள் ஆகிய பல்வகை உயிர்களையும் பிணைத்து அக்குறிப்பைப் படிக்கும் போது நம்பமுடியாதது போல் தோன்றுகின்ற செய்திகளையும் நிகழ்ச்சிகளையும் கொண்டு இயங்குகின்ற பழமையான கதைகளே
>
> (வை. சச்சிதானந்தன், மேலை இலக்கியச் சொல்லகராதி, ப.127)

என்பர். இத்தகைய புராணக் கருத்துக்கள் காரைக்கால் அம்மையார் தம் படல்களில் அதிகமாகக் காணப்படுகின்றன. இவர் பாடல்களில் திரிபுரம் எரித்தது, கரியுரித்துப் போர்த்தியது, ஆலகாலவிடம் உண்டது, காலனை உதைத்தது, இராவணனுக்கு அருள்செய்தது, மால் அயன் தேடியது, பிட்சாடனர்வடிவம் எடுத்தது, மன்மதனை எரித்தது, அர்ச்சுனனுக்கு அருள் செய்தது, மாலுக்கு உடல் பாகம் கொடுத்தது, உமைக்கு இடப்பாகம் கொடுத்தது போன்ற பல்வேறு செய்திகள் கையாளப்பட்டுள்ளன.

1. திரிபுரம் எரித்தது

தாரகாசுரனின் மக்களாகிய தாரகாட்சன், கமலாட்சன், வித்யுன்மாலி என்ற மூவரும் தேவர்களுக்கும், முனிவர்களுக்கும் மிகுந்த தொல்லை கொடுத்ததால் அவர்கள் சிவபெருமானை வேண்ட அவர் போர்க்கோலம் பூண்டு மேருவை வில்லாகவும்,

வாசுகியை நாணாகவும், திருமாலைப் பாணமாகவும், சரசுவதியை வில்லில் கட்டிய மணியாகவும், அக்கினித் தேவனை அம்பின் கூர்மையாகவும், வாயுவை அம்பிற் கட்டிய இறகாகவும் கொண்டு தேரில் ஏறி முப்புரம் எரித்ததாக (திரிபுர சம்காரம்) புராணம் கூறுகிறது. இக்கருத்து பரிபாடல், கலித்தொகை, சிலப்பதிகாரம் போன்ற நூல்களிலும் கூறப்படுகிறது. காரைக்கால் அம்மையாரும் இந்நிகழ்ச்சியைக் கூறுகிறார்.

இரட்டைமணி மாலையில் திரிபுரம் எரித்தது

1. முனிவார் திரிபுரம் மூன்றும் வெந்தன்று செந்தீயில் மூழ்கத்
   தனிவார் கணையொன்றினால் மிகக்கோத்த வெஞ் சங்கரனே (11.3.5)

2. நீ நின்று தானவர் மாமதில் மூன்றும் நிரத்துடனே
   தீ நின்று வேவச் சிலை தொட்ட வாறென் (11.3.15)

3. விரவார் புரங்கள் பாழாயிடக் கண்ட (11.3.9)

அற்புதத் திரு அந்தாதியில் திரிபுரம் எரித்தது

1. முரண் அழிய ஒன்னாதார் மூஎயிலும்
   ஓரம்பால் எய்தானே (11.4.27)

2. முப்புரங்கள் அன்றெரித்தவன் (11.4.32)

3. அந்தரத்தே நாம் ஆள் என்று ஏத்தார் நகர் மூன்றும்
   வேம்ஆறு ஒரு கணையால் செற்றானை (11.4.34)

4. மதியா அடல் அவுணர் மாமதில் மூன்று அட்ட (11.4.37)

5. கோல அரனார் அவிந்தழிய வெந்தீயம்பு
   விண்டார்கள் மும்மதிலும் வெந்தீயினில் அழியக்
   கண்டாலும் முக்கண்ணான் கண் (11.4.84)

2. கரியுரித்துப் போர்த்தியது

கசாசுரன் என்ற அசுரனைச் சம்காரம் செய்து அவன் உடலைப் (கரியுரியை) போர்த்துக் காட்சி தந்தார் என்பது புராணம். கரியுரித்துப் போர்த்தியது பற்றிக் காரைக்கால் அம்மையார் கூறுவது :

1. கைம்மாவின் ஈருரிவை மூவுருவும் போர்த்துகந்த (11.3.16)

2. அக்கைம்மா உரிபோர்த்த கண்ணுதலான் (11.4.7)

3. கைம்மா மதகளிற்றுக் கார் உரிவை போர்த்தபோது (11.4.60)

3. ஆலகால விடம் உண்டது

முன்னர் மேருமலையை மத்தாகவும், வாசுகி என்ற பாம்பை நாணாகவும் வைத்துப் பாற்கடலைக் கடைய அமிழ்தம் தோன்றியது. ஆனால் அதே சமயம் வாசுகி விடத்தைக் கக்கியதால் அதன் வெப்பம் தாங்க முடியாமல் தேவர்களும், முனிவர்களும் சிவனைத் தஞ்சம் அடைய அவர் அவ்விடத்தை உண்ண, அது அவர் கண்டத்தில் நீல நிறத்தைக் கொடுத்ததால் நீல கண்டம் எனப் பெயர் பெற்றார். இச்செய்தி காரைக்கால் அம்மையின் பாடல்களில் காணப்படுகிறது.

1. ஆலாலம் உண்டிருண்ட கண்டத்தான் (11.3.10)

2. தடங்கடல் நஞ்சுண்டார் தமக்கு (11.3.18)

3. முன் நஞ்சத்தால் இருண்ட மெய்யொளி சேர் கண்டத்தான் (11.4.6)

4. கறைமிடற்ற எந்தை (11.4.23)

5. வந்து ஓர் இரா நீர் இருண்டனைய கண்டத்தீர் (11.4.22)

6. நீலமணி மிடற்றான் (11.4.33)

7. மணிமிடற்றில் உள்ள மறு (11.4.35)

8. மறு உடைய கண்டத்தீர் (11.4.36)

9. பண்டு அமரர் அஞ்சப் படுகடலில் நஞ்சுண்டு கண்டம் கறுத்ததுவும் (11.4.55)

10. மைத்துஅமர்ந்த கண்டத்தான் (11.4.93)

11. மிடற்றில் விடம் உடையீர் (11.4.66)

12. கார் உருவக் கண்டத்து எம் கண்ணுதலே (11.4.54)

5. காலனை உதைத்தது

மார்க்கண்டேய முனிவருக்காகச் சிவபெருமான் எமனைத் தனது இடது காலால் உதைத்துக் காலனைச் சம்காரம் செய்ததைக் கால சம்காரம் என்கிறது புராணம். இக்கருத்தைக் காரைக்கால் அம்மையார் இரட்டை மணி மாலையில் கூறுகிறார்.

1. **கூற்றுருவங் காய்ந்தனை (11.3.12)**
2. **காலனையும் வென்றுதைத்த கால் (11.4.80)**

6. இராவணனுக்கு அருள் செய்தது

இராவணன் அகந்தை காரணமாகக் கயிலை மலையைத் தூக்க இறைவன் தன் பெருவிரலால் அவன் பத்துத்தலைகளும் இருபது தோள்களும் நெரியுமாறு அழுத்த, பின் அவனுடைய இசையில் மயங்கி அவனுக்கு அருள் செய்தது புராணச் செய்தி இக்கருத்தைக் காரைக்கால் அம்மையார் தன் பாடல்களில் பாடியுள்ளார்.

1. **அடித்தலத்தின் அன்றரக்கன் ஐந்நான்கு தோளும் முடித்தலமும் நீ முரித்த வாறென் (11.3.14)**
2. **முரண் அழியத் தானவனைப் பாதத் தனிவிரலால் செற்றானை (11.4.18)**
3. **செருக்கினால் வெற்பெடுத்த எத்தனையோ திண்டோள் அரக்கனையும் முன் நின்று அடர்த்த (11.4.80)**

7. மால் அயன் தேடியது

முன்னர், சிவபெருமான் அழலுருவாய் நிற்கத் திருமால் பன்றி வடிவம் கொண்டு சிவன் அடியையும், பிரம்மன் அன்னத்தின் வடிவம் கொண்டு சிவன் முடியையும் தேடியது புராணச் செய்தி ஆகும். இக்கருத்தைக் கூறும் காரைக்கால் அம்மையார் பாடல்கள் :

1. **மாலுக்கும் நான்முகற்கும் அன்றும் அளப்பறியன் ஆனானை (11.4.19)**
2. **மாலயனும் காணாது அரற்றி (11.4.80)**

3. வல்லேன மாய்ப்புக்கு மாலவனும் மாட்டாது
கில்லேன மா என்றான் கீழ் (11.3.8)

8. பிட்சாடனர் வடிவம்

தருகாவனத்து முனிவர் பெண்களிடம் பிட்சாடனர் வடிவில் சென்று கபாலத்தில் பிச்சை எடுத்தார் என்பது புராணம். இக்கருத்து காரைக்கால் அம்மையார் பாடல்களில் காணப்படுகிறது.

1. பேதையர்கள் எண்ணாது இடும்பலியால்
என்னோ நிறைந்தவா கண்ணார் கபாலக்கலம் (11.4.74)

2. படு வெண்புலால் தலையினுள் ஊன்
புறம்பேசக் கேட்டோம் (11.4.56)

3. நீ யுலக மெல்லாம் இரப்பினும் நின்னுடைய
தீய அரவொழியச் செல் (11.4.57)

9. மன்மதனை எரித்தது

முன்பு ஒருமுறை சிவபெருமான் யோக நிலையில் இருந்தபோது மலர்க்கணை ஒன்றினால் அவரின் யோகநிலையைக் கலைத்த மன்மதனைச் சிவன் தன் நெற்றிக்கண்ணால் எரித்தது புராணச் செய்தி. இச்செய்தியைக் காரைக்கால் அம்மை அற்புதத் திரு அந்தாதியில் கூறுவதாவது:

ஒளிவிலி வல்மதனை ஒண்பொடியா நோக்கி (11.4.89)

10. அர்ச்சுனருக்கு அருள் செய்தது

முன்பு அர்ச்சுனருக்காகச் சிவபெருமான் வேடனாக வந்ததைக் காரைக்கால் அம்மை தன் அற்புதத் திருஅந்தாதியில் கூறுகிறார்.

வில்வேடன் ஆகி விசயனோடு ஏற்றநாள்
வல் வேடன் ஆன வடிவு (11.4.62)

11. மாலுக்கு உடலில் பாகம் கொடுத்தது

சிவபெருமான் திருமாலுக்குத் தன் உடலில் பாதியைக் கொடுத்துச் 'சங்கரநாராயணர்' எனப் பெயரும் பெற்றார்.

இக்கருத்து காரைக்கால் அம்மையின் பாடல்களில் பல இடங்களில் காணப்படுகிறது

1. ஒருபால் உலகளந்த மாலவனாம்;மற்றை

   ஒருபால் உமையவளாம் (11.4.41)

2. செங்கண் திருமாலைப் பங்குடையான் (11.4.52)

3. ஓர் உருவாய் நின்னோடு உழிதருவான் - நீர்உருவ

   மேகத்தால் செய்தனைய மேனியாள் நின்னுடைய

   பாகத்தான் காணாமே பண்டு (11.4.54)

4. பெண் புணரும் அவ்வுருவோ? மால் உருவோ (11.4.59)

5. மின் போலும் செஞ்சடையான் மாலோடும் ஈண்டு இசைந்தால் (11.4.83)

12. உமைக்கு இடப்பாகம் கொடுத்தது

சிவபெருமான் உமாதேவிக்குத் தன் இடப்பாகத்தைக் கொடுத்தது பற்றிக் காரைக்கால் அம்மை பல இடங்களில் கூறுகிறார்.

1. கொம்பினை ஓர் பாகத்துக் கொண்ட குழகன் (11.4.39)

2. மற்றை ஒருபால் உமையவளாம் என்றால் (11.4.41)

3. இருவடிக்கண் ஏழைக்கு ஓர்பாகம் ஈந்தான் (11.4.47)

4. குழலார் சிறுபுறத்துக் கோல் வளையைப் பாகத்து எழிலாக வைத்தேக வேண்டாம் (11.4.51)

5. ஆங்கு அவன் தன்பொன் உருவின் பாகத்தாள்

   பூங்குழலும் பண்பு (11.4.58)

6. பெண்புணரும் அவ்வுருவோ ? (11.4.59)

7. இடப்பாகம் கொண்டாள் மலைப்பாவை கூறு ஒன்றும் (11.4.71)

8. அவள் ஒரு குலமங்கை பாகத்து அகலாள் (11.4.96)

9. உமை என்னும் மெல்லிய லோர் கூற்றானை (11.3.12)

முத்தொழில்

இறைவன் படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழில் செய்பவன் என்று காரைக்கால் அம்மையார் கூறுகிறார்.

இறைவனே எவ்வுயிரும் தோற்றுவிப்பான்; தோற்றி
இறைவனே ஈண்டு இறக்கம் செய்வான் இறைவனே
"எந்தாய்"! என இரங்கும் எங்கள் மேல் வெந்துயரம்
வந்தால் அதுமாற்று வான் *(11.4.5)*

9. காரைக்கால் அம்மையும் சமூகச் சிந்தனைகளும்

பக்திநெறிவழி கூறப்பட்ட காரைக்கால் அம்மையார் பாடல்கள் இயற்கைச் செந்நெறிகளோடு வாழ்க்கை அனுபவங்களை, செல்வழியை, தீர்வுகளைச் சொல்லும் அருங்களஞ்சியமாகவும் உள்ளன. "பெண்ணிற்கு வீடுபேறில்லை" என்று சொல்லப்பட்ட காலச் சூழ்நிலையில் தோன்றி ஆண்டவன் அருள்வழி நின்று வீடுபேறு பெற்று உயர்ந்த காரைக்கால் அம்மையாரின் பாடல்கள் சமுதாயத் தீர்வுகளாகவும் திகழ்கின்றன.

கி.பி. 5ஆம் நூற்றாண்டில் 'காரைக்கால்' என்னும் பதியில் பிறந்து, புனிதவதி என்ற இயற்பெயரைப் பெற்ற இவரின் தெய்வத்தன்மையை உணர்ந்த கணவன் பரமதத்தன் வேறொருத்தியை மணந்து இவரைப் பணிய, இதனால் மனம் மருகிய அம்மை சிவனைத் தொழுது ஊன்பொதி உடலைத் துறந்து பேய்வடிவம் பெற்றார். கயிலைக்குத் தலையால் நடந்து சென்று சிவனால் 'அம்மை' என்று அழைக்கும் சிறப்புப் பெற்றார். திரு ஆலங்காட்டிற்குத் திரும்பி வந்து சிவனடிக்கீழ் இருக்க வரம் வேண்டி இறைவனடி சேர்ந்தார் என்பது இவரின் வாழ்க்கைச் சுருக்கம்.

கி.பி. 5ஆம் நூற்றாண்டில் அம்மையாரின் நிலை, அதுவும் அவர் வாழ்ந்த காலக்கட்டத்தில் கணவனால் கைவிடப்பட்ட பெண்ணின் நிலை, எதிர்காலம் எத்தகையது என்று கற்பனை செய்து பார்ப்பதே மிகமிகக் கொடுமையாக இருந்தகாலம் ஆகும். ஆனால் அந்நிலையிலும் அவர் தன்னை ஒரு நிலைப்படுத்திக் கொண்டு மனத்தை எப்போதும் வலிமையுடன் வைத்திருக்க

வேண்டும் என்பதைத் தம் கொள்கையாகக் கொண்டு அதே நேரத்தில் தாம் ஒரு பெண் என்பதையும் மறக்கவில்லை.

அழகு ஆராதிக்க வேண்டிய ஒன்றுதான். ஆனாலும் பல சமயங்களில் அந்த அழகே ஆபத்தாக அமைந்து விடுவதும் உண்டு. அதிலும் பெண்களுக்கு ஆபத்தை வாங்க மூலதனமாக அமைவது அழகே ஆகும். இது மட்டுமன்றி உருவ அழகினையே உண்மையழகு என்று எண்ணி மற்றவர்களைக் கொடுமைப் படுத்தியவாகள், படுத்துகின்றவர்கள் ஏராளம். இந்த வெளி அழகைப் பாதுகாக்க இன்று நம் சமூகத்தினர் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்கின்றனர் என்பது அனைவரும் அறிந்ததே. ஆனால் அம்மையார் அந்த இளம்வயதில் அழகைத் துறக்க முடிவு செய்தார். மேலும், எந்நிலையிலும் யாருக்கும் முயன்றால் முடியாதது இல்லை என்பதை நமக்கு எடுத்துணர்த்தவும் பேய் உருவெடுத்து (எலும்பு தோல் போர்த்த உருவம்) உடல் பலமற்ற அந்நிலையிலும்

அங்கவுட லழந்துமுடி நடையா லேறி
அம்மையே என நாதன்

அழைக்கப்பெற்ற பெருஞ்சிறப்புப் பெற்றார். இவரது வாழ்க்கை வரலாறே சமுதாயத்தில் நிலை பெற்று வாழ உடல் பலம் முக்கியமானது அல்ல. மனவலிமை தான் அசைக்க முடியாத தூண் என்பதைச் சுட்டிக் காட்டுகிறது. இந்த மனஉறுதி அவர் பாடல்களில் பல இடங்களில் வெளிப்படுவதைக் காணலாம்.

யானே தவமுடையேன்என் நெஞ்சே நன்நெஞ்சம்
யானே பிறப்பு அறுப்பான் *(11.4.7)*

யானே என்று சொல்லும் போது அவர்தம் உறுதியும், பெருமிதமும் விளங்கும் மற்றொரு பாடலில் இறைவனை சார்ந்ததால் இடர்இல்லோம் என்று உறுதியுடன் கூறுகிறார்

இனியோம் நாம் உய்ந்தோம் இறைவன் தாள் சேர்ந்தோம்
இனியோர் இடரில்லோம் நெஞ்சே *(11.4.16)*

பிற்காலத்தில் மகாகவி பாரதியாரும் இவரை நினைவில் கொண்டு மனதில் உறுதி வேண்டும் என்று கூறி இருப்பார் போலும்.

மனிதன் எந்நிலையிலும் தளராது இருத்தல் வேண்டும் என்ற நியதியை :

கிளர்ந்து வெந்துயர் வந்திடும்
போதஞ்சி நெஞ்ச மென்பாய்
தளர்ந்திங் கிருத்தல் தவிர்தி *(11.3.1)*

என்று இரட்டை மணிமாலையில் கூறுகிறார். இவருடைய இந்தச் சிந்தனை பின்னால் அப்பர் அடிகளுக்கும்

அஞ்சுவது யாதொன்றும் இல்லை
அஞ்ச வருவதும் இல்லை

என்றும் பாரதியாருக்கும்

அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே
உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும்

என்ற வரிகள் தோன்றி இருக்கலாம்.

மக்களில் சிறந்தோர் எனப் போற்றப்பட ஒவ்வொருவரும் கடைப்பிடிக்க வேண்டிய நற்குணங்களாக ஐந்தினைக் கூறுகின்றார்.

தலையாய ஐந்தினையும் சாதித்துத் தாழ்ந்து
தலையாயின உணர்ந்தோர் காண்பர் *(11.3.10)*

என்பதன் வாயிலாகக் கொல்லாமை, களவு செய்யாமை, கள்உண்ணாமை, வெஃகாமை, பொய் சொல்லாமை என்னும் தலையாய ஐந்தறங்களையும் கடைப்பிடிக்கவேண்டும் என்று வற்புறுத்துகிறார்.

மற்றோர் இடத்தில் 'வருமுன் காத்தல் வேண்டும்' முடிந்த அளவு நற்செயல்கள் செய்து நாமெடுத்த பிறவியைப் பயனுள்ளதாக்கி மனத்தை ஒருமுகப்படுத்த வேண்டும் என்பதைத்

தொல்லை வினைவந்து சூழா முன் தாழாமே
ஒல்லை வணங்கி . . . . . *(11.3.12)*

என்று கூறுகிறார். நாம் என்றும் மற்றவர்கள் நலனையும் நம் நலன் போல எண்ணி நடப்போமென்றால் கண்டிப்பாக நமக்கும்

நன்மையே விளையும் என்பதை :

தமக்கென்றும் இன்பணி செய்திருப்பேமுக்கு
தாமொருநாள்
எமக்கொன்று சொன்னால் அருளாய் கொலோ

என்று உறுதியாகக் கூறுகிறார்.

இன்றைய சூழ்நிலையில் பெரிதும் பெண்களால் எதிர்பார்க்கப்படுவது மகளிர் இடஒதுக்கீடு என்ற ஒன்றாகும். இன்றைய சமுதாயத்தில் 33 விழுக்காடு ஒதுக்குவதற்கே பெரும்பாடாய் உள்ளது. ஆனால் இப்பிரச்சினைக்கு அன்றே நல்லதொரு தீர்வாய் இறைவனின் வடிவத்தையும், நடராசரின் மனப்பாங்கினையும் ஆதரவாக வைத்துப் பெண்களுக்குச் சம உரிமை அதாவது 50 விழுக்காடுகள் ஒதுக்கப்பட வேண்டும் என்பதைப் பல இடங்களில் சுட்டிக் காட்டுகிறார் காரைக்கால் அம்மை.

சுமக்கின்ற பிள்ளை வெள்ளேறொப்ப
தொன்று தொண்டைக் கனிவாய்
உமக்கென்று தேடப் பெறாதுட
னேகொண்ட உத்தமரே (11.3.19)

என்றும்

இருவடிக்கண் ஏழைக்கொருபாக மீந்தான் (11.4.47)

என்றும்

ஒருபால் உமையவளாம் என்றால் (11.4.41)

என்றும் அற்புதத் திருஅந்தாதியில் இறைவன் சரிபாதியை வாழ்க்கைத் துணைவிக்குக் கொடுத்தமையை எடுத்துச் சுட்டிப் பெண்ணியம் பேசுகின்றார்.

ஒன்றே செய்க; ஒன்றும் நன்றே செய்க ;
நன்றும் இன்றே செய்க

என்ற ஆன்றோரின் அறிவுரையே மனிதனை உயர்த்தும் நன்னெறி. இதைக் காரைக்கால் அம்மையும்

ஒன்றே நினைந்திருந்தேன் ஒன்றே துணிந்தொழிந்தேன்
ஒன்றே என் உள்ளத்தினுள்அடைந்தேன் *(11.4.11)*

என்று அற்புதத் திருஅந்தாதியில் கூறியுள்ளார். இதையே திருவள்ளுவரும் எண்ணித் துணிக கருமம் என்று கூறியுள்ளது நமக்கு விளங்கும்.

சைவநெறியைத் தம் நெறியாகக் கொண்டிருந்தாலும் சாதிமத பேதமற்ற சிந்தனை உடையவர் அம்மை என்பதையும் அத்தகைய சமுதாயத்தையே விரும்புவர் என்பதையும்

எக்கோலத் தெவ்வுருவாய் எத்தவங்கள் செய்வார்க்கும்
அக்கோலத் தவ்வுருவே யாம் *(11.4.33)*

என்று குறிப்பிட்டுள்ளார். இதனை ஒவ்வொருவரும் கடைப்பிடித்திருப்போமேயானால் நேற்றும் இன்றும் நாளையும் ஒருபோதும் மனித வெடி குண்டுகளுக்கோ, கடத்தல்களுக்கோ, தீவிரவாதங்களுக்கோ இடமிருந்திருக்காது. ஒருமைப்பாடு நம்மை மேன்மை அடையச் செய்யும் என்பதை உவமை முகத்தால் கூறுகிறார்.

பாம்பும் மதியும் மடமானும் பாய்புலியும்
தாம் பயின்று *(11.4.67)*

பாம்பும் மதியும், மானும் புலியும் எனப் பகையாய்ப் பகுத்தறிவற்ற விலங்குகளே பகை நீங்கிப் பழகுகின்றன. இதனால் மேன்மை அடைந்துள்ளன (அவை இறைவனிடத்தில் உள்ளன). மனிதனே! பகுத்தறிவுவாதியே! நீயும் பகை மறந்து நடப்பாய் என்றால் என்றும், எங்கும் எப்போதும் இன்பமே என்று மனித நேயத்தை, ஒருமைப்பாட்டினை வலியுறுத்துகின்றார்.

நாம் அறிவோடு செயல் பட்டோமென்றால் நம்மைத் தாக்கும் பொல்லா வினைகள் தூள்தூளாகும் என நமக்குத் துணிவினை ஊட்டுகிறார்.

அறிவினையே பற்றினால் எற்று எதுஅடுமே
எறிவினையே என்னும் இருள் *(11.4.87)*

என்ற அற்புதத் திருஅந்தாதி மூலம் அறிவுரைபுகட்டுகிறார்.

அன்பு என்னும் பண்பினை வளர்த்து மக்கள் உள்ளே சிறந்து விளங்கச் சொல்கிறார். இறைவனிடமும் பிறரிடமும் அன்புடன் பழகுதல் சிறந்த மனிதநேயம் என்கிறார். அன்பைப் பெருக்கச் சொல்கிறார்.

மகிழ்தி மடநெஞ்சே – மானுடரில் நீயும்
திகழ்தி பெருஞ்சேமஞ் சேர்ந்தாய் இகழாதே
யாரென்பே யேனும் அணிந்து உழல்வார்க்கு ஆட்பட்ட
பேரன்பே இன்னும் பெருக்கு *(11.4.31)*

எளிமையான சிவனை யாரால் காண முடியும் என்றால் அன்பு என்னும் போர்வையால் மூடி வைத்த எளியோனால் தான் என்று.

ஆர்வல்லார் காண அரன் அவனை அன்பு என்னும்
போர்வை அதனாலே போர்த்து அமைத்து *(11.4.96)*

என்று சிவன்அன்பெனும்பிடியுள் அகப்படும் மலை ஆதலால் அன்பு என்னும் பண்பை வளர்த்துக் கொள்ளக் கூறுகிறார்.

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக *(குறள்.391)*

என்ற குறளுக்கு ஏற்பப் படித்தும் நூல் அறிவு இருந்தும் அதன் வழி நடக்காதவர்கள் திரிக என்று அவர்களைச் சாடுகிறார்.

நூலறிவு பேசி நுழைவு இலாதார் திரிக *(11.4.33)*

கற்றலின் பயன் அதன் வழி நடப்பது தான் என்று உறுதியாகக் கூறுகிறார்.

நினைத்ததைப் பெற என்ன செய்ய வேண்டும் என்று காரைக்கால் அம்மையார் கூறுவது இறைவன் அடிக்கமலத்தை எப்போதும் விரும்பி ஓதினால் நன்று.

கருத்தினால் நீ கருதிற்று எல்லாம் உடனே
திருத்தலாம் சிக்கென நான் சொன்னேன் – பருத்தரங்க
வெள்ளநீர் ஏற்றான் அடிக்கமலம் நீ விரும்பி
உள்ளமே எப்போதும் ஓது *(11.4.73)*

இவ்வாறாக இன்னும் ஆழ்ந்து நோக்கும் போது பல்வேறு நுண்ணிய கருத்துக்களைத் தன்னுள் பொதிந்து வைத்துள்ளன காரைக்கால் அம்மையாரின் பாடல்கள். ஆயினும் பெண்மைக்குரியது மகளாய், சகோதரியாய், மனைவியாய், தாயாய் வாழ்ந்து ஆடவர்க்குப் பணி செய்து கிடப்பதே என்ற சட்டத்தை உடைத்து இறைவனாலேயே விரும்பி 'அம்மையே' என்று அழைக்கப்பட்டு, ஆட்கொண்ட பெருமையை உடையவர் காரைக்கால் அம்மையே. சமூகச் சிந்தனையைப் பக்தி மார்க்கத்தோடு எடுத்தியம்பிய ஒரே இயல் இசைப்புலவர் காரைக்கால் அம்மையே.

10. காரைக்கால் அம்மையும் எண்களும்

காரைக்கால் அம்மையாரின் 143 பாடல்களில் எண்களின் மூலம் சிவபெருமான் திருவருள் நோக்கப்பட்டுள்ளது. இதில் திருஞான சம்பந்தரின் திருஎழுக்கூற்றிருக்கை போன்ற எண்ணல் அலங்காரம் காணப்படாவிட்டாலும் ஒன்று முதல் பத்து வரை எண்வழி இறைவனை வியந்த செய்திகள் தொகுக்கப்பட்டுள்ளன.

மூத்த திருப்பதிகத்தில் எண்வழி அதன் சிறப்பு

மூத்த திருப்பதிகங்கள் மொத்தம் 22 பாடல்கள் கொண்டவை. இதில் எண் வழி. அதன் சிறப்பு நோக்கப்பட்டுள்ளது.

ஒன்று

ஆடும் மதியம் சடைமேல் உடையான் என்ற வரிகள் ஒன்று கொலாம்மதி ஆடியதைக் குறிக்கும். ஒருவாயினை என்ற சம்பந்தர் தேவாரத்தின் வழி 'ஒன்று அது தானே' என்று எண்ணப்படுபவை (கூறப்படுபவை உலகத்தில் ஒன்றுதான் என்று எண்ணப்படுபவை உதாரணம் வாய். ஒவ்வொருவருக்கும் வாய் என்ற உறுப்பு ஒன்று தான்).

1. எடுத்தபாதம்
2. அனல்கை
3. அந்தி நிருத்தம்
4. அப்பன்
5. காரைக்கால்பேய்
6. கொள்ளிவாய்
7. குழிவயிறு
8. கனக்கருவி (தாளம்)

இரண்டு

இப்பதிகத்தில் இரண்டின் வழி சொல்லப்படுபவை :

1. உடல் உறுப்புக்கள் - குண்டுக்கண், கொங்கை, நீள்கணைக்கால், சுழலும் சுழல்விழி, அழல் கட்பேய்

2. கழல் ஒலி ஓசைச் சிலம்பொலிப்ப (இருஒலி)

3. புள்ளி உழைமான் தோலொன்று உடுத்துப் புலித்தோல் பியற்கிட்டு

4. நரம்புக்கருவிகள் - வீணை, யாழ் இரண்டு

5. காற்றுக்கருவிகள் - குழல், கொக்கரை இரண்டு

மூன்று

இறைவன் ஆடக் கருவி இசைப்பவர்கள் கூடிய செயல் மூன்றாகக் கூறப்பட்டுள்ளது. எட்டி இலவம் (11.21) என்ற பாடலில்

1. பறைபோல் விழிகட்பேய் முழவம் கொட்ட
2. கூளிபாடக்
3. குழகன் ஆடுமே

என்றும் மற்றொரு பாடலில்

1. வாகை விரிந்து வெண்நெற்றொலிப்ப
2. கூகையோ டாண்டலை பாட
3. ஆடும் எங்கள் அப்பன் என்கிறார்

நான்கு

பருந்தொடு கூகை பகண்டை ஆந்தை (11.1.6)

என்று பருந்து, கூகை, பகண்டை, ஆந்தை என்ற நான்கு பறவைகளின் பெயர்கள் கூறப்பட்டுள்ளன.

காடும் கடலும் மலையும் மண்ணும் (11.1.8)

எனக் குறிஞ்சி, முல்லை, நெய்தல், பாலை என நான்கு நிலங்கள் கூறப்பட்டுள்ளன.

ஐந்து

காடும் கடலும் மலையும் மண்ணும்
விண்ணும் சுழல அனல் கையேந்தி (11.1.8)

குறிஞ்சி முல்லை நெய்தல் பாலையோடு விண்ணும் சேர்ந்து ஐந்தும் சுழன்றதாகக் கூறப்படுகிறது.

இந்துகொலாமவர் அரவின்படம் என்று அப்பர் கூறியுள்ளதால் ஆடும் அரவப் புயங்கன் என்றும் ஆடும் அரவம் ஆகையால் ஆர்த்த அடிகள் என்றும் அரவம் பற்றிக் கூறியுள்ளார்.

ஆறு

பாலையின் கருப்பொருட்கள் ஆறு கூறப்பட்டுள்ளன.

எட்டி இலவம் ஈகை சூரை காரை படர்ந்தெங்கும்
சுட்ட சுடலை ஆழ்ந்த கன்னி *(11.2.1)*

என்று எட்டி, இலவம், ஈகை, சூரை, காரை, கள்ளி என்று பாலை நிலத் தாவரங்கள் கூறப்பட்டுள்ளன.

ஏழு

துத்தம் கைக்கிள்ளை விளரி தாரம்
உழைஇனி யோசைப் பண் கெழுமப் பாடி *(11.1.9)*

என்று ஏழிசைப் பெயர்களைக் கொடுத்துள்ளார்.

எட்டு

தாழ் சடை எட்டுத் திசையும் வீசி *(11.1.1)*

என்ற இறைவன் ஆடிய போது அவர் தாழ்சடை எட்டுத் திசையிலும் வீசியதாகக் கூறுகிறார்.

ஒன்பது

இறைவன் ஆடியபோது ஏழிசையோடு ஒன்பது இசைக்கருவிகள் முழங்கியதாகக் கூறுகிறார்.

சச்சரி கொக்கரை தக்கையோடு
தகுணிதம் துந்துபி தாளம் வீணை
மத்தளம் கரடிக்கை வன்கை மென்தோல்
தமருகங் குடமுழா மொந்தை வாசித்து *(11.1.9)*

இதில் கூறப்பட்டுள்ள தாளம், கொக்கரை, வீணை தவிரப் பிற ஒன்பது கருவிகளும் தோல் கருவிகளே.

பத்து

காரைக்கால் அம்மை தன் இரு பதிகத்தின் கடைசிப் பாடலில் பலன் கூறும் பாடலில் தான் பாடியுள்ள பாடலின் எண்ணிக்கையைக் குறிப்பிட்டு உள்ளார்.

1. **செப்பிய செந்தமிழ் பத்தும் வல்லார்**
சிவகதி சேர்ந்தின்பம் எய்துவாரே *(11.1.11)*

2. **பாடல் பத்தும் பாடியாடப் பாவம் நாசமே** *(11.2.11)*

என்று 'பத்து' என்ற பதிக அமைப்பை எண்வழியே கூறியுள்ளார்.

இரட்டைமணிமாலை - எண்வழி இதன் சிறப்பு

ஒன்று : 'ஒன்று கொலாம் உயரும் மதி ஆடியது' பற்றி "வானத்திடை வளர்கோட்டு வெள்ளை இளந்திங்களும்" என்று இளந்திங்கள் பற்றியும்,

ஒன்று கொலாம் அவர் ஊர்வது பற்றி

1. **அங்கோர் ஏறுகந் தேறுவதே** *(11.3.17)*
2. **ஏறலால் ஏற மற்றில்லையே** *(11.3.18)*

இடபம் பற்றியும் கூறுகிறார்.

இரண்டு : 'இரண்டு கொலா முருவம்' என்பதை

உமை என்னும் மெல்லியலோர் கூற்றானை *(11.3.12)*

என்றும், 'இரண்டு கொலாம் இமையோர் தொழு பாதம்' என்பதை

1. **பைம் பொற் கழலே** *(11.3.9)*
2. **பொற்கழல்** *(11.3.10)*
3. **கழல் கொண்ட சேவடி காணலுற்றார்** *(11.3.11)*
4. **அண்டவாணன் அடித்தலமே** *(11.3.13)*
5. **மொய்கழல் புண்ணியனே** *(11.3.15)*

இறைவன் திருவடி இரண்டு என்பது உணரப்படும்.

மூன்று : 'மூன்று கொலாம் புரமெய்இன தாமே' என்பதை

1. **முனிவார் திரிபுரம் மூன்றும் வெந்தன்று செந்தீயில் மூழ்க** *(11.3.5)*
2. **விரவார் புரங்கள் பாழாயிடக் கண்ட** *(11.3.9)*
3. **நீ நின்று தானவர் மாமதில் மூன்றும்** *(11.3.15)*

என்று முப்புரம் எரித்தது கூறப்பட்டுள்ளது.

கைம்மாவின் ஈருரிவை மூவுருவும் போர்த்துகந்த *(11.3.16)*

என்று இறைவனின் மூவுரு பற்றிப் பேசப்படுகிறது.

நான்கு :

நான்குணர்ந்தான் பற்றிக் கூறுவது :

வேதியனை வேதப்பொருளானை வேதத்துக்காதியனை *(11.3.2)*

நான்கு வேதப் பொருளானவனைக் கூறுகிறது.

அடித்தலத்தின் என்ற பாடலில் *(11.3.14)*

(ஆறாடி ஆறா அனலாடி அவ்வனலின் நீராடி நெய்யாடி) என்று நான்கு விதமாகப் போற்றப்படுகிறார்.

ஐந்து :

ஐந்தெழுத்து பற்றி :

1. **தலையாய ஐந்தினையும் சதித்து** *(11.3.10)*
2. **எண்ணிய ஓர் ஐந்தும் இசைந்தனவாய்** *(11.3.16)*

ஐந்து கொலாமவர் அரவின் படம் பற்றிக் கூறுவது

1. **அரா நின்றிரைக்கும் சடை** *(11.3.3)*
2. **பொங்கரவம் வைத்துகந்த புண்ணியனை** *(11.3.6)*

ஆறு :

ஆறுகொலாம் அவர்தார் மிசை வண்டின் கால் பற்றிக் கூறுவது

இன வண்டு திண்டிப்பொரா நின்ற கொன்றைப் பொதும்பர் *(11.3.3)*

என ஆறுகால் வண்டு பற்றிக் கூறப்பட்டுள்ளது.

ஏழு : ஏழு கொலாம் அவர் ஆளும் உலகங்கள் பற்றிக் கூறுவது:

1. **தலையாய அண்டத்தான்** *(11.3.10)*
2. **அண்ட வாணன் அடித்தலமே** *(11.3.13)*

எட்டு :

எண்தோளன் பைம் பொற்கழலே *(11.3.9)*

என்று இறைவன் எண்தோள் வியக்கப்பட்டுள்ளது.

ஒன்பது :

'ஒன்பதுபோலவர் கோலக்குழற்சடை' பற்றிக் கூறுவது :

1. அரா நின்றிரைக்கும் சடை (11.3.3)
2. தாழ்ந்த சடையானை அச்சடைமேல் பொங்கரவம் (11.3.6)
3. செஞ்சடை மேல் விரைக்கின்ற வன்னியும் (11.3.7)
4. ஆறுபுக்கு நனையாச் சடை (11.3.13)
5. ஆறெலாம் பாயும் அவிர் சடையார் (11.3.18)

பத்து :

இராவணனின் பத்துத் தலையும் இருபது தோள்களும் நெரியக் கால் ஊன்றியது கூறப்பட்டுள்ளது.

அடித்தலத்தின் அன்றரக்கன் ஐந்நான்கு தோளும்
முடித்தலமும் நீ முரித்த வாறென் (11.3.14)

அற்புதத் திருஅந்தாதி – எண்வழியே சிறப்பு

ஒன்று :

ஒன்றே நினைந்திருந்தேன் ஒன்றே துணிந்தொழிந்தேன்
ஒன்றே என் உள்ளத்தின் உள்ளடைத்தேன் –
ஒன்றேகாண் (11.4.11)

மேலும் அவன் ஒருவனே இருசுடர், தீ, ஆகாசம், புவி, புனல், காற்று அனைத்தும் என்கிறார்.

அவனே இருசுடர் தீ ஆகாசம் ஆவான்
அவனே புவி புனல் காற்றாவான் – அவனே
இயமானனாய் அட்டமூர்த்தியுமாய் (11.4.21)

இரண்டு :

இரண்டுகொலா மிமையோர் தொழுபாதம் பற்றி :

1. நின் சேவடி (11.4.1)
2. திருவடிக்கட் சேர்ந்திரு (11.4.47)
3. திருவடியில் மேய சிலம்பு (11.4.67)
4. சிலம்படியான் (11.4.68)

5. அடிக்கமலம் (11.4.73)
6. அந்தாமரை போல் அடி (11.4.76)
7. படர்சடையான் பாதங்கள் (11.4.79)
8. சரணாரவிந்தங்கள் (11.4.81)
9. செஞ்சடையான் சேவடி (11.4.91)

அவன் திருவடி இரண்டு என்பது குறிப்பு.

இரண்டு கொலாமுருவம் பற்றிக் கூறுவன :

1. கொம்பினையோர் பாகத்துக் கொண்ட குழகன் (11.4.39)
2. ஒருபால் உமையவளாம் (11.4.41)
3. இருவடிக்கண் ஏழைக் கொருபாகம் (11.4.47)
4. வைத்தான் தன் பங்கின் குலப்பாவை (11.4.50)
5. கோல்வளையைப் பாகத் தெழிலாக வைத்து (11.4.51)
6. இடப்பாகம் கொண்டாள் மலைப்பாவை (11.4.71)
7. அவளோர் குலமங்கை பாகத்தகலாள் (11.4.95)

அவனுடைய ஈருருவம் கூறப்பட்டுள்ளது.

மூன்று :

மூன்று கொலாமவர் கண்ணுதலாவன பற்றி :

1. முக்கணான் (11.4.69)
2. முக்கண்ணாய் கண் (11.4.71)
3. முக்கணாங்கண் (11.4.84)
4. மற்றொரு கண் நெற்றி மேல் வைத்தான் (11.4.86)

முப்புரம் எரித்தது பற்றி :

1. ஒன்னாதார் மூவெயிலும் ஓரம்பால் எய்தானே (11.4.27)
2. முப்புரங்கள் அன்றெரித்தான் (11.4.32)
3. ஏத்தார் நகர் மூன்றும் வேமாறு (11.4.34)
4. மதியா அடலவுணர் மாமதில் மூன்றட்ட (11.4.37)
5. விண்டார்கள் மும்மதிலும் வெந்தீ யினிலழிய (11.4.84)
6. மூவுலகும் உள்புக்குக் கனைத்தெழுந்த செந்தீ (11.4.97)

முத்தொழில் பற்றிக் கூறுவது :

இறைவனே எவ்வுயிரும் தோற்றுவிப்பான் - படைத்தல்

தோற்றி ஈண்டிறக்கஞ் செய்வான் - அழித்தல்

வெந்துயரம் வந்தால் அது மாற்றுவான் - காத்தல் (11.4.5)

நான்கு :

செஞ்சடையாய் வேதியனே (11.4.15)

என்ற வரிகள் அவன் நான்கு வேதங்களை உணர்ந்தவன் என்கிறது. மற்றொரு பாடலில் காலை, பகல், மாலை, இரவு, என நான்கு பொழுது குறிப்பிடப்பட்டுள்ளது.

காலையே போன்று இலங்கும் மேனி கடும்பகலில்

வேலையே போன்று இலங்கும் வெண்ணீறு - மாலையில்

தாங்கு உருவே போலும் சடைக்கற்றை மற்று அவர்க்கு
வீங்கு இருளே போலும் மிடறு (11.4.65)

காலை - அவர் திருமேனி நிறம்

பகல் - வெண்ணீற்றுத்திருமேனி

மாலை - சடைக்கற்றை

இரவு - மிடறு

ஐந்து :

அஞ்சுகொலாமவர் அரவின் படம் என்று கூறும் பாடல்கள்.

1. **ஐவாய நாகத்தாய் (11..4.99)**
2. **கோள் நாகம் பொன் முடிமேல் (11.4.28)**
3. **படங்கொள் அணிமிடற்ற (11.4.35)**
4. **வார் சடை மேல் நாகம் (11.4.36)**
5. **தாரேறு பாம்புடையான் (11.4.38)**
6. **பைத்தாடும் நும்மார்பிற் பாம்பு (11.4.66)**
7. **விடவரவம் மேலாட மிக்கு (11.4.57)**

ஏழு :

'ஏழு கொலாமவர் ஆளும் உலகங்கள் என வலியுறுத்தும் பாடல்கள் :

1. மூவேழுலகங்கள் ஆவானை (11.4.19)
2. மிக்குலகம் ஏழினுக்குங் கண்ணான (11.4.72)
3. மறைத்துலகம் ஏழினிலும் வைத்தாயோ (11.4.97)

மற்றொரு பாடலில் எழுபிறப்புப் பற்றிக் கூறுகிறார்.

அவர்க்கே எழு பிறப்பும் ஆளாவோம் (11.4.3)

எட்டு :

'எட்டுகொலாந் திசை யாக்கின தாமே' என்று உணர்த்தும் பாடல்கள்.

1. மறித்தாடு கை போல் வான் திசைகள் பேரும் (11.4.77)
2. நோக்கில் திசை வேம் (11.4.100)

அவர் அட்ட மூர்த்தியாய் இருப்பதை :

அவனே இயமானனாய் அட்ட மூர்த்தியுமாய்
ஞான மயனாகி நின்றானும் வந்து (11.4.21)

ஒன்பது :

ஒன்பது போலவர் கோலக் குழற் சடை என்பதை உணர்த்தும் பாடல்கள் :

1. பவர்ச்சடை மேற் (11.4.3)
2. செஞ்சடையாய் (15,52, 55, 83, 91)
3. ஞான்ற குழற் சடைகள் (11.4.26)
4. வளர் சடையினான் (11.4.37)
5. புரி சடையாய் (11.4.70)
6. வீழ் சடையே (11.4.82)
7. குளிர் சடை (11.4.90)

பத்து :

இராவணனை அடர்த்த போது அவன் பத்துத் தலைகளும் இருபது தோள்களும் நெரிந்தமை குறிப்பாகக் கூறப்பட்டுள்ளது.

1. முரண் அழியத் தானவனைப் பாதத்தனிவிரால்
செற்றானை (11.4.18)
2. செருக்கினால் வெற்பெடுத்த எத்தனையோ திண்டோள்
அரக்கனையும் முன் நின்று அடர்த்த (11.4.80)

11. காரைக்கால் அம்மையும் சைவசித்தாந்தமும்

மிகப் பழமையான தமிழ் இலக்கண நூலாகிய தொல்காப்பியத்திற்கும் முற்பட்டது சிவ வழிபாடு. சைவ சமயக் கடவுளான சிவனைப்பற்றிச் சங்க இலக்கியங்கள் நீலமணி மிடற்று இறைவன், ஆலமர் கடவுள் என்று குறிப்பிடுகின்றன. சிலப்பதிகாரத்தில் எம்பெருமானின் கோயில்களும் அவர் ஆடிய கூத்துக்களும் இடம்பெற்றுள்ளன. பக்தி நெறி வழியாகக் காரைக்கால் அம்மையாரும் தம் பாடல்களில் பல சைவ சித்தாந்தக் கருத்துக்களைக் கூறுகிறார்.

பதி இலக்கணம்

அம்மையப்பர் - இவர் பாடியுள்ள மூத்த திருப்பதிகத்தின் ஒவ்வொரு பாடலிலும் 'ஆடும் எங்கள் அப்பன் இடந்திரு ஆலங்காடே'' என்று பாடியுள்ளார். முதன் முதலில் இறைவனை உறவு முறையில் அமைத்து 'எங்கள் அப்பன்' என்று பாடியுள்ளவரும் இவரே ஆவார். இம்முறையில் சாத்திர நூல்களும் இறைவனை அம்மையப்பராகவே கருதியுள்ளதைக் காணலாம்.

அம்மையப்பரே உலகிற்கு அம்மையப்பர் என்று அறிக

அம்மையப்பர் அப்பரிசே வந்து அளிப்பர்

என்று திருக்களிற்றுப்படியார் கூறுகிறது.

பிறவா யாக்கைப் பெரியோன்

சிவன் பிறப்பு இறப்பு இல்லாதவன் என்றும் நிலை பெற்ற ஈசன் அல்லாது வேறு தெய்வம் இல்லை எனச் சாத்திரங்கள் கூறுகின்றன.

யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வம் ஆகி
ஆங்கே
மாதொருபாகனார் தாம் வருவர், மற்று அத்தெய்வங்கள்

வேதனைப்படும், இறக்கும் மேல்வினையும் செய்யும்
ஆதலான் இவை இலாதான் அறிந்து அருள்
செய்வன்அன்றே

என்று சிவஞான சித்தியார் கூறுகிறது. இதைக் காரைக்கால் அம்மையார் முன்பே,

ஈசன் அவன் அல்லாது இல்லை என நினைந்து
கூசி மனத்தகத்துக் கொண்டிருந்து பேசி
மறவாது வாழ்வாரை மண்ணுலகத்து என்றும்
பிறவாமைக்காக்கும் பிரான்

என்று சிவனைத் தவிர வேறு தெய்வம் இல்லை என்று நினைந்து அச்சிவனின் பெருமையையும் தன் சிறுமையையும் எண்ணி நாணி அவனைத் தன் மனதில் இருத்தி அவனது புகழைப் பேசி மறவாது வாழ்வாரைப் பிறவி எடுக்காதவாறு செய்வான் அவன் என்று தெளிவாகக் கூறுகிறார்.

சங்கரன்

இறைவன் அனைத்து உயிர்களுக்கும் இன்பத்தைத் தருபவன். அதாவது முத்தியாகிய பேரின்பத்தை வழங்கும் வள்ளல். இதைத் திருவருட்பயன்

நலமிலன் நண்ணார்க்கு நண்ணினார்க்கு நல்லன்
சலமிலன் பேர் சங்கரன்

என்று குறிக்கிறது. இக்கருத்தையே காரைக்கால் அம்மையார் அவரைச் சார்ந்தவர்களுக்குப் பொற்கொழுந்து போன்றவர் என்றும் அவரைச் சாராது நின்றவர்களுக்குத் தீக்கொடி போன்றவர் என்றும் கூறுகிறார்.

சார்ந்தார்க்குப் பொற்கொழுந்தே ஒத்திலங்கிச் சாராது
போர்ந்தார்க்குத் தீக்கொடியின் பெற்றியதாம்–
தேர்ந்துணரில்
தாழ்சுடரோன் செங்கதிரும் சாயும் தழல் வண்ணன்
வீழ்சடையே என்று உரைக்கும் மின் (11.4.82)

பொன் கொழுந்து எவ்வளவு மென்மையானது அது தீக்கொடிக்கு ஒப்பாகும், சாராதவர்களுக்கு என்று கூறுகிறார்.

வேதப்பொருளானான்

காரைக்கால் அம்மையார் இறைவனை வேதத்தை வழங்குபவன் என்றும் வேதப்பொருளாய் இருப்பவன் என்றும்

அந்த வேதத்திற்கு ஆதியாய் இருப்பவன் என்றும் இரட்டை மணி மாலையில் கூறுகிறார்.

வேதியனை வேதப் பொருளானை வேதத்துக்கு
ஆதியனை ஆதினா நன்னாளனைச் - சோதிப்பான்
வல்லேன் மாய்ப்புக்கு மாலவனும் மாட்டாது
கில்லேன்மா என்றான் கீழ் *(11.3.8)*

அறிவான் அறிவிப்பான்

இறைவன்தான் உயிர்களை அறிபவன். அறிந்து உயிர்களின் குறைகளை அவை உணரும் வண்ணம் அறிவிப்பவனும் இறைவனே ஆகும். அவ்வாறு உயிர்களின் குறைகளை அறிவித்த பிறகு அக்குறையிலிருந்து நீங்கும் வண்ணம் அவ்வுயிர்க்கு அறிவாய் இருந்து உடனிருந்து அறிவிக்கின்றவனும் இறைவனே. இதைக் காரைக்கால் அம்மையார்

அறிவானும் தானே அறிவிப்பான் தானே
அறிவாய் அறிகின்றான் தானே - அறுகின்ற
மெய்ப்பொருளும் தானே விரிசுடர்பார் ஆகாயம்
அப்பொருளும் தானே அவன் *(11.4.20)*

என்கிறார். இதையே சிவஞான சித்தியார் :

அறியாமை அறிவு அகற்றி அறிவினுள்ளே
அறிவதனை அருளினால் அறியாதே அறிந்து
குறியாதே குறித்து அந்தக்கரணங்களோடும்
கூடாதே வாடாதே குழைந்து இருப்பையாயின்
பிரிதாத சிவன் தானேபிரிந்து தோன்றி. . . . .
நின்று என்றும் தோன்றிடுவன் நிராதரன் ஆயே

அம்மையார் கூறிய கருத்தையே இப்பாடலும் கூறுகிறது.

ஒன்றென்ற வழிபாடு

ஆன்மாவானது இறைவன் ஒருவனே என உணர வேண்டும். இதனைச் சிவஞான போதம்

ஒன்றென்றது ஒன்றே காண் ஒன்றே பதிபசுவாம்
ஒன்றென்ற நீ பாசத்தோடு உனைகாண்-ஒன்று இன்றால்
அக்கரங்கள் இன்றாம் அகரஉயிர் இன்றேல்
இக்கிரமத்து என்றும் இருக்கு.

ஒன்றென்றற்குப் பொருள் பதி ஒன்றேயாம் இரண்டல்ல. பதியும் பசுவும் ஒன்றல்ல. அதற்குக் காரணம் பசுவானது மலத்தோடு

கட்டுண்ட நிலையில் இருப்பதால் ஆகும். அகரம் இல்லையாயின் வேறு எழுத்துக்கள் இல்லை என்பது போலக் கலப்பில் ஒன்றாதலே தவிரத் தன்மையில் ஒன்றல்ல என்று ரிக் வேதம் குறிக்கிறது என்று மெய் கண்டார்சிவஞான போதத்தில் கூறுகிறார். இதையே காரைக்கால் அம்மையாரும் :

ஒன்றே நினைந்திருந்தேன் ஒன்றே துணிந்தொழிந்தேன்
ஒன்றேஎன் உள்ளத்தின் உள்ளடைத்தேன் –
ஒன்றேகாண்
கங்கையான் திங்கள் கதிர்முடியான் பொங்கொளிசேர்
அங்கை யாற்கு ஆளாம் அது *(11.4.11)*

பரம்பொருளாகிய ஒன்றையே நினைந்ததைக் கூறுகிறார்.

உயிர் அறியும் உணர்வு

முதல் பொருளாகிய இறைவன் அளவைகளால் அறியப்படும் பொருள் என்றால் அறியப்படும் பிரபஞ்சம் போல அழிபொருளாகிய அசத்து என்றாகிவிடும். எவ்வகையிலும் அறியப்படும் இயல்பு இல்லை எனில் முயற்கோடுபோலச் சூனியப் பொருளாகிவிடும். ஆதலால் இவ்விருவகையிலும் இன்றி இறைவன் ஒருவாற்றான் அறியப்படுதலும் ஒருவாற்றான் அறியப்படாத வகையிலும் சிவசத்தாம் என மெய்யுணர்வு பெற்றோர் கூறுவர். இதையே காரைக்கால் அம்மையார் :

காண்பார்க்குங் காணலாந் தன்மையனே கைதொழுது
காண்பார்க்குங் காணலாம் காதலால்–காண்பார்க்குச்
சோதியாய்ச் சிந்தையுளே தோன்றுமே தொல்லுலகுக்கு
ஆதியாய் நின்ற அரன் *(11.4.17)*

என்ற பாடலில் குறிப்பிடுகிறார். இக்கருத்தினையே சிவஞான போதம் ஆறாம் நூற்பாவில் விளக்கம் தருகிறது.

உணருரு அசத்து எனில் உணராது இம்மையின்

இருதிறன் அல்லது சிவசத்துமாம் என

இரண்டு வகையின் இசைக்கும் உலகே

என்பது அந்நூற்பா ஆகும்.

இதையே திருவருட்பயனில் 'இருளாகிய மலப்பிணிப்பு இன்றி இருக்கும் உயிர் இறைவனின் அருள் சத்தியின் இனிமையை அறியும் என்றும் மலப்பிணிப்பு உடைய உயிர் அருள் இனிமை பெறாது வருந்தும் என்றும் விளக்கப்படுகிறது.

இக்கருத்தினை உமாபதி சிவம் ஓர் உவமையில் அமைத்துக் கூறுவார்.

தித்திக்கும் பால் யாருக்குக் கைக்கும்? எனில் உடல் நலம் குன்றி நாக்கு பித்தம் கொண்டோருக்கு. உடல் நலம் உள்ளவர்கள் நல்நாக்கினால் தித்திப்பை உணர்வர் என்று கூறுகிறார்.

தித்திக்கும் பால்தானும் கைக்கும் திருந்திடும் நாப்
பித்தத்தின் தான் தவிர்ந்த பின்.

என்பது அக்குறள் ஆகும்.

தொல்வினை

காரைக்கால் அம்மையார் தம் இரட்டைமணி மாலையில் தொல்வினை பற்றிப் பேசுகிறார். வினை சஞ்சிதம், பிராரத்தம், ஆகாமியம் என மூன்று வகைப்படும். இவற்றைத் தமிழில் பழவினை, நுகர்வினை, ·வருவினை என்பர். இப்பழவினை இறையருளால் நீக்கமுறுதல் கூடும். நுகர்வினை அனுபவித்தேகழியும். வருவினை ஏறாமல் உயிர் வாழத் தலைப்பட வேண்டும். இவற்றைச் சித்தாந்த நூல்கள் நன்கு விளக்குகின்றன. திருவருட்பயன் ஆசிரியர் இக்கருத்தினை,

ஏன்றவினை உடலோடு ஏகும்இடை ஏறும்வினை
தோன்றில் அருளே சுடும்

என்னும் பாவால் விளக்குகிறார். இக்கருத்துக்களை முன்னமே காரைக்கால் அம்மையார் தம் பாடல்களில் பதிவு செய்துள்ளார்.

தொல்லை வினை வந்து சூழா முன் தாழாமே
ஒல்லை வணங்கி உமையென்னும்-மெல்லியலோர்
கூற்றானைக் கூற்றுருவங் காய்ந்தனை வாய்ந்திலங்கு
நீற்றானை நெஞ்சே நினை *(11.3.12)*

என்ற பாடல் மூலம் நமக்குத் தெளிவுபடுத்துகிறார்.

இறைவன் தானே வந்து உயிரின் தகுதியறிந்து அருளவேண்டும். அல்லாது உயிர் முனைந்து திருவருளைப் பெறுதல் சாத்தியமில்லை. இதுவே சித்தாந்தம். இக்கருத்தை உமாபதிசிவம் தம் திருவருட்பயனில்

தாமே தரும் அவரைத் தம்வலியினால் கருதல்
ஆமே? இவன்ஆர் அதற்கு?

என்ற பாவால் விளக்குகிறார். மாணிக்க வாசகரும் இக்கருத்தினையே

> **தேனாய் இன் அமுதமுமாய்த் தித்திக்கும் சிவபெருமான்**
> **தானேவந்து எனதுஉள்ளம் புகுந்து அடியேற்கு**
> **அருள்செய்தான்**

என்று கூறுகிறார். இங்ஙனம் சாத்திர ஆசிரியர்களும் தோத்திர ஆசிரியர்களும் இறைவன்தானே அருளவேண்டும் என்று வலியுறுத்தினார்கள். ஏனெனில் உயிரானது எவ்வளவு படித்திருந்தாலும் கர்மவினை எஞ்சியிருக்குமே. ஆனால் இறையருள் தாழ்த்தியே கிடைக்கும் என்பதால் ஆகும். இதைக் கர்மவினை ஆழமாக விளக்கும். இதனை நன்குணர்ந்து காரைக்கால் அம்மையார் எனக்கு இடர் களையவில்லை; எனினும், திருவுளம் இறங்கவில்லை; எனினும் நான் செல்லும் நெறியைப் புலப்படுத்த வில்லை; எனினும் நான் திருவடியை வழிபடுவதை நிறுத்தமாட்டேன் என்று அழுத்தமாகக் கூறுகிறார்.

> **இடர்களையா ரேனும் எமக்கு இரங்காரேனும்**
> **படரும் நெறி பணியா ரேனும் சுடருருவில்**
> **என்பறாக் கோலத் தெரியாடும் எம்மனார்க்கு**
> **அன்பறாது என்நெஞ் சவர்க்கு** (11.4.2)

என்று தம் உறுதியை வெளிப்படுத்துகிறார்.

வினைகளை வென்றவர்கள்

அடியார்களின் நிலை சிவஞான சித்தியாரில் தெளிவுற விளக்கப்பட்டுள்ளது. போதுகள் கொண்டு இறைவனை ஞானத்தால் சிந்தித்துப் போற்றி வணங்குவோர் இனிமேல் எம்மீது ஏற்படும் புண்ணிய பாவங்கள் என்பன இல்லை என்றும் ஆண்டவனையும் அடியார்களையும் அகத்தாலும் புறத்தாலும் வழிபட்டு அந்நெறியில் உறுதியாக நின்று வெல்வோம் என்றும் அந்நூல் கூறுகிறது. இக்கருத்தைக் காரைக்கால் அம்மையார் அடியார்கள் இறைவனை வழிபாடு செய்வோர் என்றும் இருவினைகளையும் வேரறுத்தோர் என்றும் சொர்க்க நரக அனுபவங்களிலிருந்தும் விலகி நிற்போர் என்றும் கூறும் பாடல்:

> **காலனையும் வென்றோம் கடுநரகம் கைகழன்றோம்**
> **மேலை இருவினையும் வேரறுத்தோம் - கோல**
> **அரனார் அவிந்தழிய வெந்தீயம்பு எய்தான்**
> **சரணார விந்தங்கள் சார்ந்து** (11.4.81)

அறியாமையே ஆணவம்

உயிர்க்கு அறியாமை செய்வது ஆணவமலம். இது அறிவையும் தொழிலையும் மறைக்கும். நான் எனது என்ற உணர்வு ஆணவ மலப்பற்றால் வருகின்றது. ஆணவமலம் நீங்கினால் தான் ஆன்மா இறைவன் அருளைப் பெறமுடியும்.

ஆணவ மறைப்பால் திருமாலும் அயனும் சிவனது திருமுடி, அடி காணது தோற்றனர். இராவணனும் அழிந்தான் என்று அம்மையார் குறிப்பிடுகிறார்.

செருக்கினால் வெற்பெடுத்த எத்தனையோ திண்டோள்
அரக்கனையும் முன் நின்று அடர்த்த *(11.4.80)*

முரண்அழியத் தானவனைப் பாதத் தனிவிரலால்
செற்றானை *(11.4.18)*

என்று இராவணனுக்கு அருள்செய்ததையும்

மாலுக்கும் நான் முகற்கும் அன்றும் அளப்பறியான்
ஆனானை *(11.4.19)*

என்று மால் அயன் தேடியதையும் குறிப்பிடுகிறார்.

திரு ஐந்தெழுத்தின் சிறப்பு

சிவனடியார்களால் உணர்ந்து ஓதப்பட்ட ஐந்தெழுத்தால் இறைவனை நினைந்து முக்தி பெற வேண்டும். எக்காலமும் ஐந்தெழுத்தை ஓதினால் பிறவிப்பிணியை ஒழித்து இறையின் திருவடிகளைச் சேரலாம் என்று உயிர்க்கு இனிமை பயக்கக் கூடிய வழிமுறைகளைக் கூறுகிறார் காரைக்கால் அம்மைமார், தம் திருஇரட்டை மணிமாலையில்.

தலையாய ஐந்தினையும் சாதித்துத் தாழ்ந்து
தலையாயின வுணர்ந்தோர் காண்பர் – தலையாய
அண்டத்தான் ஆதிரையான் ஆலாலம் உண்டிருண்ட
கண்டத்தான் செம்பொற் கழல் *(11.3.10)*

அன்பே சிவம்

இறைவனை அடைவதற்கு அன்பே அடிப்படை ஆகும். அன்பினால் கடவுளை வணங்கினால் வேண்டத்தக்க அனைத்தும் பெறலாம். காரைக்கால் அம்மையார் நமக்கு நன்மை செய்யாது இருப்பினும் தன்னுடைய அன்பு அற்றுவிடாது என்று தம் பாடல்களில் கூறுகிறார்.

1. இடர் களையாரேனும் எமக்கிரங்கா ரேனும்
படரும் நெறி பணியாரேனும் – சுடருருவில்
என்பறாக் கோலத் தெரியாடும் எம்மானார்க்கு
அன்பறாது என்நெஞ்சு அவர்க்கு (11.4.2)

2. அவர்க்கே நாம் அன்பாவதல்லால் (11.4.3)

இறைவன்மேல் அன்பை மேலும் பெருக்கச் சொல்கிறார்.

3. யாரன்பே யேனும் அணிந்து உழல்வார்க்கு ஆட்பட்ட
பேரன்பே இன்னும் பெருக்கு (11.4.31)

4. கைம்மவின் ஈருரிவை மூவுருவும் போர்த்துகந்த
அம்மானுக்கு ஆட்பட்ட அன்பு (11.3.16)

என்று அன்பே வடிவம் உடைய சிவனை அன்பால் பெற முடியும் என்று கூறுகிறார்.

மாயை

மாயை என்பது உலகத்தின் தோற்றம், இருப்பு, அழிவு ஆகியவற்றிற்குக் காரணமாக இருப்பது. ஆன்மா மாயையில் கட்டுண்டதால் இறைவனைப் புரிந்து கொள்ள முடிவதில்லை. சிறந்த தியானமும், உள்ளார்ந்த பக்தியும் பெருக அம்மாயை விலகும். இறைவன் காட்சி தந்து நம்மை ஆட்கொள்வான் என்ற மாயையிலிருந்து விடுபட்டு முக்தி பெறுவதற்கு வழிகாட்டியுள்ளார் அம்மையார்.

1. ஆர்வல்லார் காண் அரன் அவனை, அன்பு என்னும்
போர்வைஅதனாலே போர்த்து அமைத்து– சீர்வல்ல
தாயத்தால் நாமும் தனிநெஞ்சினுள் அடைத்து
மாயத்தால் வைத்தோம் மறைத்து (11.4.96)

2. எந்தை! அராப்பூண்டு உழலும் எம்மானை உள்நினைந்த
சிந்தையராய் வாழும் திறம் (11.4.46)

மாயையை விட்டு வெளியே வந்து இறைவனை எப்போதும் நினையும் சிந்தையராய் வாழ வேண்டும் என்கிறார்.

இறைத் தத்துவம்

ஈசன் இல்லாத பொருள் எதுவும் இல்லை. பிறவாமல் காக்கும் பிரான். வேதத்திற்கு ஆதியானவன். அவன் அருளால் வினை அறும். பிறவிக்கடலை நீந்தலாம். அவனருளாலே அவன் தாளையும், பிறபொருளின் தன்மையையும் உணர்ந்து

கொள்ளலாம். அவனே மெய்ப்பொருள் என இறைத்தத்துவங்கள் பலவற்றை அவர் தம் பாடல்களில் காணலாம்.

1. *பிறவாமைக் காக்கும் பிரான் (11.3.2)*

2. *வினைக் கடலை யாக்குவிக்கும் மீளாப்பிறவிக்*
   கனைக் கடலை நீந்தினோம் காண் (11.4.16)

3. *அருளே உலகெலாம் ஆள்விப்பது ஈசன்*
   அருளே பிறப்பறுப்ப தானால் – அருளாலே
   மெய்ப்பொருளை நோக்கும் விதியுடையேன்
   எஞ்ஞான்றும்
   எப்பொருளும் ஆவது எனக்கு (11.4.9)

இவ்வாறு காரைக்கால் அம்மையார் பாடல்களில் சைவசித்தாந்தக் கருத்துக்கள் தனி ஆய்வாகவே அமைக்கும் அளவில் மிகுந்து காணப்படுகின்றன.

துணை நூல்கள்

1. அகநானூறு (சங்க இலக்கியம்), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை-98, 2004.

2. ஆடல் வல்லான், சரசுவதி மகால் நூல் நிலையம், திருவாவடுதுறை, 2004.

3. ஐங்குறுநூறு (சங்க இலக்கியம்), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை-98, 2004.

4. கருணாமிருத சாகரம்- Book-1, (ஆபிரகாம் பண்டிதர்), Printed in Karunanidhi Medical Hall, Lawley Electric Printing Press, Tanjore, 1917.

5. கல்லாடம் (கல்லாடர்), திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிட், 1975.

6. கம்பராமாயணம் (கம்பர்), கங்கை புத்தக நிலையம், சென்னை-17, 2002.

7. கலித்தொகை (சங்க இலக்கியம்), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை-98, 2004.

8. காரைக்கால் அம்மையார்-தென்னிந்திய இசையின் தாய் (Dr. ஞானாம்பிகை குலேந்திரன்), Department of Tamil & Culture, Govt. of India, 1996.

9. காரைக்கால் அம்மையார் வாழ்வும் வாக்கும், இரா. கலைமணி சிவா, பாரனேசன்அச்சகம், புதுவை-3, 2001.

10. கோயில், சோமலே, சோமு நூலகம், சாஸ்திரி நகர், சென்னை-20, 1979.

11. சிலப்பதிகாரம், அடியார்க்கு நல்லார் உரை, டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம், பெசன்ட் நகர், சென்னை-90, 2001.

12. சிலப்பதிகாரம், உ.வே.சா. பதிப்பு, 1955.

13. தமிழிசைக் கலைக்களஞ்சியம், தொகுதி-1,2,3,4, முனைவர் வீ.ப.க. சுந்தரம், பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி, 2006.

14. திருஞானசம்பந்தர் தேவாரம், திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம், பன்னிரு திருமுறைப்பதிப்பு நிதி வெளியீடு, 1980.

15. திருநாவுக்கரசர் தேவாரம், திருபனந்தாள் ஸ்ரீ காசிமடம், பன்னிரு திருமுறைப்பதிப்பு நிதி வெளியீடு, 1986.

16. திருவாசகம் (மாணிக்க வாசகர்), திருவாவடுதுறை ஆதீனம், 1985.

17. திருப்புகழ் (அருணகிரிநாதர்), திருப்புகழ் அன்பர்கள், புதுடெல்லி, 1993.

18. தமிழர் தோற்கருவிகள் (ஆர். ஆளவந்தார்), உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை-113, 1981.

19, நடராசர் தத்துவம், டாக்டர் வை. தட்சிணாமூர்த்தி, வானதி பதிப்பகம், சென்னை-17, 1996.

20. நாலாயிரத் திவ்யப் பிரபந்தம், திருவேங்கடத்தான் திருமன்றம், சென்னை, 1973.

21. நான்காவது அனைத்துலக சைவ சித்தாந்த மாநாட்டுக் கருத்தரங்க மலர்-1,2,3, தருமபுரம் ஆதீனம், அனைத்துலக சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனம், தருமபுரம், 2008.

22. பஞ்சமரபு (அறிவனார்), வித்வான் வே.ரா. தெய்வ சிகாமணிக் கவுண்டர், ஈரோடு, 1975.

23. பதிற்றுப்பத்து (சங்க இலக்கியம்), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை-98, 2004.

24. பதினோராந்திருமுறை, திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிட், சென்னை, 1971.

25. பெரியபுராணம் (சேக்கிழார்), ஸ்ரீலஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள்294ஆம் ஆண்டு மகேஸ்வர பூசை நினைவு வெளியீடு, 1982.

ஆராய்ச்சிக் கட்டுரைகள்

1. Dr. S. Sasivalli, Karaikkal Ammaiyar, 1994.

2. Dr. Saroja Sundarajan, Glimpses of the History of Karaikkal (1985).

3. Dr. M.S. Shanthi, Karaikkal Ammaiyarum Akka Maha Deviyum (1994).

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113
அண்மை வெளியீடுகள்

	ரூ.பை.
தொல்காப்பியம்-எழுத்ததிகாரம் மூலமும் நச்சினார்க்கினியர் உரையும்	200.00
தொல்காப்பியம்-சொல்லதிகார மூலமும் சேனாவரையருரையும்	200.00
தொல்காப்பியம்-பொருளதிகார மூலமும் நச்சினார்க்கினியர் உரையும்	325.00
தொல்காப்பியம் - பொருளதிகார மூலமும் பேராசிரியர் உரையும்	300.00
தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள் - தொல்லியல், வரலாறு, சமூகவியல்	100.00
கவிதையியல்	50.00
Bibliography on Translations	175.00
சங்க இலக்கிய ஆய்வு தெ.பொ.மீ.யும் மேலை அறிஞரும்	60.00
திராவிட மொழி இலக்கியங்கள்	200.00
வா.கீ.ச. கலாநிதி கி.வா.ஜகந்நாதன்	60.00
நாசுதிராதிக்-ஞாலமுதன்மொழிஆய்வுகளுக்குப்பாவாணர் தரும் ஒளி	35.00
தமிழ்ச்சொற் பிறப்பாராய்ச்சி	45.00
மொழி பெயர்ப்பியல்	45.00
தமிழில் தத்துவ நூல்கள்	40.00
சி.வை. தாமோதரம்பிள்ளை	40.00
சொல்லிலக்கணக் கோட்பாடு தொல்காப்பியம் - முதல் பகுதி	70.00
இசுலாமியச் சிற்றிலக்கியங்கள்	40.00
பாவாணர் கடவுள் நம்பிக்கையும் சமயச் சால்பும்	30.00
மகளிர் முன்னேற்றத்தில் "அவள் விகடன்" இதழின் பங்களிப்பு	35.00
திருக்குறள் உரைச் சிந்தனைகள்	50.00
தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும்	120.00
மீனவர் சமுதாய நாட்டுப்புறப் பாடல்கள்	35.00
A Course in Modern Standard Tamil	65.00
இசை மருத்துவம்	45.00
கம்பன் களஞ்சியம்	280.00
மொழியியல் நோக்கில் தொல்காப்பிய சங்க இலக்கிய ஆய்வுகள்	40.00
தமிழர் பண்பாட்டுச் சொற்கோவை	250.00
தமிழிலக்கியக் குறியீடுகள் அகராதி	225.00
அரங்கேற்று காதை ஆராய்ச்சி	140.00
பழந்தமிழ் அமைப்பியல் மற்றும் குறியியல் ஆய்வுகள்	45.00
இந்தியச் சூழலில்மொழிஇழப்பு ஒரு சமுதாய மொழியியல் கண்ணோட்டம்	60.00
பழந்தமிழ் அறிவியல்	45.00
நீறணி பவளக்குன்றம்	35.00
குலோத்துங்கன் பார்வையில் சமுதாயம்	70.00
இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிஞர்கள் தொகுதி-1	100.00
இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிஞர்கள் தொகுதி-2	100.00
நீறணி பவளக் குன்றம் (ஒன்பதாம் திருமுறை ஆய்வுநூல்)	35.00
உலகப் பகுத்தறிவு நீரோட்டத்தில் பெரியார்	35.00
தமிழறிஞர் அடிகளாசிரியரின் சிறுவர் இலக்கியப் பாடல்கள்	30.00
ஈழத்தில் கண்ணகி கலாச்சாரம்	30.00
சிறுபஞ்மூலம்-ஒருசமூகவியல் பார்வை	30.00
இந்தி நாடகப் பனுவல் (ஆடி மாதத்தில் ஒரு நாள்)	50.00
திராவிட இயக்கத்தில் அன்னை மணியம்மையாரின் பங்கு	40.00
பண்பாட்டுப் பார்வையில் திருமந்திரம்	70.00

---

647 காரைக்கால் அம்மையார் பாடல்கள்-ஓர் ஆய்வு 40.00